14-5-2012 ரூ.10

இந்தியாவின் ந

Radjaramane@TTT

# குங்குமம்



மீண்டார் கலெக்டர் அலெக்ஸ்

## பன்றிக் காய்ச்சல் தடுப்பூசியால் பயனில்லை!

மத்திய அரசு போடும் குண்டு

Kungumam weekly Regd.No. TN/CH©/180/12-14. Licence
Registered with the Registrar of Nev

Radjaramane@TTT



Radjaramane@TTT



Radjaramane@TTT

Lalitha®
சென்னை • மதுரை

குறைந்த சேதாரம்.
நிறைந்த திருப்தி.

1 முதல் 8% சேதாரம் !

செய்கூலியும் இல்லை !

மிகச் சில நகைகளுக்கு மட்டும் சேதாரம் 9%.

எந்த நகைக்கும் சேதாரம் 9%க்கு மேல் கிடையாது !

லலிதா ஜுவல்லரி 'ஃப்ரீ கோல்ட்' நகை சேமிப்புத் திட்டம் !

இலவசத் தங்கம் + தங்கம் விலை ஏறினாலும் கவலையில்லை ! இன்றே சேர்ந்திடுங்கள் !

லலிதா ஜுவல்லரி மார்ட் (பி) லிமிடெட்

123, உஸ்மான் ரோடு, பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. போன் : 28141155/77/88

Radjaramane@TTT



180-182, தெற்கு மாசி வீதி, மதுரை-01. போன் : 2330 222 / 444 / 555
Valet car parking | www.lalithajewellery.net
BIS
916

Radjaramane@TTT

# twitter

**@vambukku**

ஒரு அஞ்சு வருஷம் கஷ்டப்பட்டா அரசியல்வாதி ஆகிடலாம்; ஆனா, அதுக்கு அப்புறம் வாழ்கை முழுக்க கஷ்டப்பட்டாலும் மனுஷன் ஆக முடியாது.

**@naanraman**

வாழ்க்கைய உருப்படியா வாழணும்னா 'வாழ்க்கை ஒரு...'ன்னு ஆரம்பிக்கிற எந்த தத்துவத்தையும் கண்டுக்கக்கூடாதுப்பா.

**# குழப்புறாய்ங்க**

**@ikaarthi**

பெண்களுக்குத்தான் அது 'தி.நகர்'; ஆண்களுக்கு 'திவால் நகர்'.



**@ipokkiri**

18 வருஷமா அடிமையா சவுதியில் இருந்து வந்த ஒருவரை, 12 வருஷமா தேடிகிட்டு இருக்கிற ஆளான்னு விமான நிலையத்தில் சோதித்த காவல் துறையின் கடமையுணர்ச்சி!

**@Charles_Times**

மாவோயிஸ்டுகள் பகுதிகளில் 4000 டவர்கள் அமைக்கப்படும் - மத்திய அரசு

**# லிஸ்ட்ல தூத்துக்குடியையும் சேர்த்து 2 டவர் வைங்கப்பா... ரொம்ப நேரமா நோ சிக்னல்.**

**@gpradeesh**

கொல்லப்பட்ட ராமஜெயம்மீது நில அபகரிப்பு வழக்குப் பதிவு

**# விடாதீங்க... ராமஜெயம் கொலை கேசையும் அவர் மேலயே எழுதுங்க!!**

**@iamkarki**

மொபைல் நெட்வொர்க் என்பது மனைவியைப் போல... அவனவனுக்கு அவனவன் ஆள பிடிக்காது. எல்லாமே அப்படித்தான் என்பதும் தெரியாது.

**@umakrishh**

இப்பல்லாம் வர வர நேரத்துக்கு ஒழுங்கா கரன்ட் போக மாட்டேங்குது...

**# இ.பி.யில போனஸ் பிரச்னைன்னு எதுவும் ஸ்டிரைக்கா?**

# வலைப்

**@shiv_ar**

கொலையும் செய்வாள் பத்தினி

**# என் மனைவி சமைக்க ஆரம்பிச்ச பின்னாலதான் இதுக்கு அர்த்தம் புரிஞ்சது:)**

**@raguC**

இரண்டு பெண்கள் நன்றாகப் பழகிக் கொள்கிறார்களேயன்றி, ஒருபோதும் நட்பு கொள்வதில்லை.



**@iyyanars**

என்ன இருந்தாலும் 'முக்காடு' போட்டு போஸ் குடுக்குறதுல கமலுக்கு முன்னோடி விஜய்தான்!





**@ThirutuKumaran**

ஜப்பான் சுனாமியில் அடித்துச் செல்லப்பட்ட பைக் 6,000 கி.மீ தூரம் கடந்து கனடாவில் கரை சேர்ந்தது!

**# பரவால்லையே... நல்ல மைலேஜ்!**

# பேச்சு

**@thoatta**

பல மனைவிகள், ஒரு நாளைக்கு வீட்டுக்குள் மட்டும் 10 கி.மீ நடக்கிறார்கள். பல ஆண்களுக்கு வீட்டுக்குள் நடக்கும் விஷயங்கள் கூட தெரியாது:)

**@RenugaRain**

கல்யாண வீடுகளில் உண்டது செரிக்க வெற்றிலை பாக்கோடு புறணியும் மெல்லப்படுகிறது.

**@kattathora**

தோழா... தோழா... தோள் கொடு கொஞ்சம் சாய்ஞ்சுக்கணும்...

**# அப்பதான உன் பாக்கெட்ல எவ்ள வச்சிருக்கன்னு எட்டிப் பாக்கலாம்:))**

**@rajakumaari**

ஆண்களுக்கு என்ன பிரச்னை இருந்தாலும் நிம்மதியா இருக்கணும்; பெண்களுக்கு எந்த பிரச்னையும் இல்லாம நிம்மதியா இருக்கணும்.

**@erode_kathir**

சூதும் வாதும் நிரம்பி வழிகிறது அரசாங்கத்திடம். கேட்டால் 'சாணக்கியத்தனம்' என சமாதானம் சொல்லப்படுகிறது.

**# பாவம் சாணக்கியன்!**

**@ganeshsai3**

கடவுளுக்கு நம்மைப் பிடிக்கலேன்னா டாக்டர்கிட்டே அனுப்புறாரு. டாக்டருக்கு நம்மைப் பிடிக்கலேன்னா கடவுள்கிட்டே அனுப்புறாரு!!

**@vattajileppi**

வெஸ்டர்ன் டாய்லெட் கண்டுபுடிச்சது ஃபாரீனரா இருந்தாலும், அங்க உக்காந்து பேப்பர் படிக்கலாம்னு கண்டது தமிழன்டா!

**@vandavaalam**

பேசாமலிருப்பதால் அதிகமாக விமர்சனத்திற்குட்பட்டவர்கள் இரண்டு பேர்!

**# கடவுள் மற்றும் மன்மோகன் சிங்.**

**@kolaaru**

பொங்கல் சாப்புட்டும் தூக்கம் வரவில்லையென்றால், உலகில் வேறெந்த மருந்தும் உங்களைத் தூங்க வைக்காது!



Radjaramane@TTT

# facebook

கிராமங்கள் மற்றும் சிறுநகரங்களில் இன்னும் கூட பருவப் பெண்கள் உலகம் அறியா வெகுளிகளாக இருப்பதற்கான சான்று, காதல் என்று வரும் போது அவர்களின் முதல் சாய்ஸ் கண்டக்டர்களாக இருப்பதே!

*- சதீஷ் பழமலை*

வலைப்பேச்சு

உழைப்பாளர் தினத்தையும் 'தல' தினமாக நினைத்துக் கொண்டாடும் தமிழர்களை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

*- அப்துல் வஹாப்*



தலைய அழகா சீவி, அதுல மல்லியோ கனகாம்பரம் பூவையோ வச்சி, முகத்தில் பவுடர் அப்பிப் பூசி, பஞ்சு மிட்டாய் கலர்ல சுடிதார் போட்டு அப்பாவியா நிக்கிற திருநெல்வேலி பொண்ணுங்க எப்பவுமே அழகுதான்

**# வேற வழி!**

*- அப்துல் வஹாப்*



இருவரும் சந்திக்கும் போதெல்லாம் விழிகளைப் பேச விட்டு உதடுகளைப் பூட்டிக் 'கொல்கிறாய்'...

*- மழைக் காதலன்*

எவ்வளவு புன்னகைக்க வேண்டுமென்பதை அனுதினமும் கற்றுக் கொடுக்கிறது நகர வாழ்க்கை...

*- சூர்ய சுரேஷ்*

என்னிடம்தான் வந்து கொண்டிருக்கிறாய்,
என்னைக் கடந்து சென்ற பின்னரும்

*- ஆத்மார்த்தி*



கஞ்சிக்கு ஒழச்சா மே தினம்
ரஞ்சிக்கு ஒழச்சா ஆதீனம்

*- பூபதி முருகேஷ்*

பல பொழுதுகளில் அமைதியாக இருப்பதென்பது அறியாமை எனவும் மொழிபெயர்க்கப்பட்டு விடுகிறது

*- உமா ராஜா*

தொடர்ச்சியாக பூக்கள் மலர்கின்றன அலைபேசியில்.
சட்டைப்பை மணக்கிறது உன் குறுஞ்செய்தியின் இருப்பால்.

*- ஜான் சுந்தர்*

Radjaramane@TTT



Radjaramane@TTT



ஷிமோன் ஜார்டிம்



# விலவ் இந்தியா!

## உருகும் காலிஸ் காதலி

மிச்சம் மீதம் இருக்கும் ஆட்டங்களில் கட்டாயம் ஜெயித்தால்தான் அரை இறுதியில் அடி வைக்க முடியும் என்ற இக்கட்டான நிலையை நோக்கி அணிகள் அணிவகுக்கின்றன. குழப்பமான புள்ளி, ரன் ரேட் கணக்குகளை கூட்டிக் கழித்துப் பார்த்து டேலி ஆகாமல் ரசிகர்கள் மண்டை காயத் தொடங்கியிருக்கிறார்கள். சூப்பர் கிங்ஸ் சொதப்பல் கிங்ஸாகிவிட்டதால்,

Radjaramane@TTT

அக்னி நட்சத்திர கொதிப்பில் கொஞ்சம் கூலான விஷயங்களாகப் பார்ப்போம்.

**கி**ட்டத்தட்ட இரண்டு மாதத் தொடர் என்பதால் வெளிநாட்டு வீரர்கள் பலரும் மனைவி அல்லது காதலி சகிதமாகவே வந்திருக்கிறார்கள். நாடு முழுக்க டூர், நட்சத்திர ஓட்டல்கள், விவிஐபி கவனிப்பில் வீரர்களை விடவும் அவர்களின் இதய ராணிகள் அதிக உற்சாகமாக இருக்கிறார்கள்.

காதலின் கலைக் கோயிலான தாஜ்மகாலுக்கு கேர்ள் பிரண்ட் டேனியல் ஸ்வார்ட்டுடன் சென்று சுற்றிப் பார்த்த தென் ஆப்ரிக்க வீரர் டிவில்லியர்ஸ், அதன் அழகிலும் பிரமாண்டத்திலும் மயங்கி, அங்கேயே தனது காதலை உறுதி செய்திருக்கிறார். "காஸ்ட்லியான வைர மோதிரத்தை கையில் அணிவித்து, மண்டியிட்டுக் கைகளை விரித்து வில்லியர்ஸ் ஐ லவ் யு சொன்னதை என்னால் நம்பவே முடியவில்லை. கனவு போலவே இருக்கிறது" என்று பரவசப்படுகிறார் ஸ்வார்ட்.

நைட் ரைடர்சுக்காக ஆடும் நட்சத்திர ஆல் ரவுண்டரான ஜாக் காலிசும் தனது காதலி ஷமோன் ஜார்டியுடன் வந்திருக்கிறார். இருவரும் 5 ஆண்டுகளாகக் காதலித்துக் கொண்டே இருக்கிறார்கள். விரைவில் திருமணம் செய்வதாக உத்தேசமாம். தேதி குறிக்கவில்லை என்றாலும், ஒரு விஷயத்தில் ஷமோன் உறுதியாக இருக்கிறார். திருமணத்தின் ஒரு பகுதி இந்தியாவில்தானாம்! அதுவும் கிராமத்துப் பின்னணியில் பாரம்பரியமான அம்சங்களோடு அமர்க்களப்படுத்தி விட வேண்



கிறிஸ் கேல் - நடாஷா

Radjaramane@TTT



மார்த்மாரி

டும் என திட்டமிட்டிருக்கிறார்கள்.

பிரபல மாடலும் நடிகையுமான ஷமோனுக்கு இந்தியா என்றால் கொள்ளை பிரியம். "உங்கள் பண்பாடு, ஃபிரண்ட்லியாக பழகும் மக்கள், அழகான கோயில்கள் எல்லாம் பிடிக்கும். எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட ஆசை. குறிப்பாக கிராமங்களுக்கு அதிகம் போக வேண்டும்" என்று புகழும் ஷமோன், "வாய்ப்பு கிடைத்தால் இங்கே மாடலிங் செய்யவும் நடிக்கவும் தயார்" என்கிறார். எல்லாவுட் டைரக்டர்களும் கால்ஷீட்டுக்காக கியூவில் நிற்பதும், ரசிகர்கள் கோயில் கட்ட இடம் தேடுவதும் நிஜமானால் ஆச்சரியப்படாதீர்கள். அம்மணி அத்தனை அழகு!

கிறிஸ் கேல் காதலி நடாஷா முதல்முறையாக இந்தியா வந்திருக்கிறார். போன வருஷம் மேட்ச்களை டி.வி.யில்தான் பார்த்தாராம். "இந்திய உணவுகளை ரொம்பப் பிடிக்கும்" என்கிற இந்த செயின்ட் கிட்ஸ் தீவுக்காரப் பொண்ணு, சாப்பிட வந்த மாதிரியே சப்புக் கொட்டுகிறது.

இந்த வருஷம் சென்னை அணியின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும் டு பிளசிஸ் இப்போது கவலையில் இருக்கிறார். இவரது காதலி இமாரி விஸ்ஸர் பிஸியான பிசினஸ் பொண்ணு. போன வாரம் வரை கூட இருந்து உற்சாகப்படுத்தியவர், ஏராளமான புடவைகளை வாங்கிக் கொண்டு இப்போதுதான் ஃபிளைட் பிடித்திருக்கிறார். மனுஷர் தொடர்ந்து நன்றாக ஆட வேண்டுமே என்பதுதான் நம் கவலை!

ஆல்பி மார்கெல் தன் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் குடும்பமாகவே வந்திருக்கிறார். வால் பையன்களை சமாளித்தபடி கணவரைப் புகழ்ந்து கொண்டிருக்கும் மார்த்மாரி தென் ஆப்ரிக்காவின் பிர



பல மாடல்களில் ஒருவர். கடந்த மூன்று வருஷங்களாக இவர்கள் சென்னையில்தான் தங்கள் திரு மண நாளைக் கொண்டாடுகிறார் கள்.

**ச**ரி, கொஞ்சம் ஆட்டத்துக்கும் வருவோம். டேர்டெவில்ஸ் இப் படி போட்டுத் தாக்கும் என்று யாரும் கனவில் கூட நினைத்தி ருக்க முடியாது. புள்ளிப் பட்டி யலில் கம்பீரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அந்த அணிக்கு அரை இறுதி வாய்ப்பு உறுதி என்று அடித்துச் சொல் லலாம். கேப்டன் சேவக் தொடர்ச் சியாக 5 அரைசதம் விளாசி டி20ல் புதிய உலக சாதனை படைத்திருக்கிறார்.

உள்ளூர் ஆட்டங்கள் அவ்வ ளவாகக் கை கொடுக்காததால் சாம்பியன் சூப்பர் கிங்ஸ் இடி யாப்பச் சிக்கலில். ஹாட்ரிக் வெற்றி ஜாக்பாட் அடித்தால்தான் உள்ளே நீடிக்கலாம்.

**- பா.சங்கர்**



டி வில்லியர்ஸ் - டேனியல் ஸ்வார்ட்


Radjaramane@TTT

படிச்சிட்டீங்களா?

ஆன்மிகம் பலன்




வித்தியாசமான திருவிழாக்கள்

கயிலாயத்தில் கலாட்டா

ஒரு தேரின் பயோடேட்டா

குரு பெயர்ச்சி பலன்கள்

Radjaramane@TTT



Radjaramane@TTT



இரண்டு கத்திகள் ஒரே உறையில் இருந்தாலும், உரசிக் கொள்வதைத் தவிர வேறொன்றும் நடந்துவிடப் போவதில்லை. ஆனால் இரண்டு நடிகைகள் ஒரு செட்டில் இருந்து உரசிக் கொண்டால் நிலைமையே வேறு. அப்படி ஒரு நிலைதான் நேர்ந்தது யு டி.வி. தயாரித்திருக்கும் 'கலகலப்பு’ ஷூட்டிங்கில். படத்தின் தலைப்பும், படத்தின் இயக்குனர் சுந்தர்.சி என்பதும் மகிழ்ச்சிக்கு கியாரண்டி தரும் விஷயங்கள்தான் என்றாலும், இரண்டு ஹீரோயின்கள் என்பது

Radjaramane@TTT

எந்த இயக்குனருக்கும் வயிற்றில் புளியைக் கரைக்கும் விஷயம்தான். அதிலும் அஞ்சலி, ஓவியா என்று சமகாலத்திய லட்டுகள்.

இந்த நிலையில் ‘கலகலப்’பின் நிலை பற்றி விசாரித்தோம். முதலில் பேசினார் சுந்தர்.சி

“நீங்க சொன்னது நூற்றுக்கு நூறு சரிதான். அஞ்சலிக்கும் ஓவியாவுக்காகவுமே ‘இவளுக இம்சை தாங்க முடியல’ன்னு ஒரு பாட்டே வச்சிருக்கேன்...” என்று அவர் ஆரம்பித்ததும் நிமிர்ந்து உட்கார்ந்தோம். ஆனால் அவர் வழக்கப்படியே லந்து கொடுத்துப் பேசியது பிறகுதான் புரிந்தது.

www.kungumam.co.in

“ரெண்டு ஹீரோயின்ஸ் எனக்குப் புதுசில்லை. ஏற்கனவே சில படங்கள்ல அனுபவப்பட்டிருக்கேன். என் ஆரம்ப காலப் படங்கள்ல ஒரு படத்துல அப்படித்தான் இதே போல ரெண்டு லீடிங் ஹீரோயின்ஸ். டிக்கெட் போட்டு பொள்ளாச்சி வரவழைச்சிட்டோம். ரெண்டு பேருக்கும் தங்கறதுக்கு தனித்தனி ரூம் கிடைச்சது நாங்க செய்த புண்ணியமா தோணிச்சு. அடுத்த நாள் காலையில லொகேஷன் வந்தாங்க. அங்க ஒரே ஒரு ரூம்தான் இருந்துச்சு. முதல் ஷாட் முடிஞ்சதும் மெல்லமா விஷயத்தை சொன்னோம்.

‘யாரோ ஒருத்தர் பிரச்னை பண்ணப் போறாங்க’ன்னு எதிர்பார்த்தா, அதுக்கு அப்படியே உல்



Radjaramane@TTT

டாவா நடந்தது மேட்டர். வழக்கமா லேட்டா வர்ற ஒரு நடிகை, அன்னைக்கு சீக்கிரமா வந்து ரூமைப் பிடிச்சுட்டாங்க. இந்த விஷயத்தைத் தெரிஞ்சுக்கிட்ட இன்னொரு நடிகை, அடுத்த நாள் காலையில இவங்க வர்றதுக்கு முன்னால வந்து ரூமைக் கைப்பற்றிட்டாங்க. இப்படியே ஆளாளுக்கு சீக்கிரமா வர... நாங்களும் சீக்கிரம் சீக்கிரமா ஷூட்டிங்கை முடிச்சோம்.




இதை எதுக்குச் சொல்றேன்னா, இதே பிரச்னை இந்தப் படத்துக்கும் நடந்தது. ஆனா இந்தப் படத்துல ஒரு நல்ல விஷயம், முதல் ரெண்டு ஷெட்யூல்கள்ல அஞ்சலிக்கும் ஓவியாவுக்கும் காம்பினேஷன் காட்சிகள் இல்லை. முதல் ஷெட்யூல் கும்பகோணத்துலயும், அடுத்தது பொள்ளாச்சியிலயும் நடந்தது. கும்பகோணத்துல அஞ்சலியையும் ஓவியாவையும் தனித்தனியா ஷூட் பண்ணினோம். அதனால ஷூட் ஸ்மூத்தா போச்சு!


சுந்தர்.சி

பொள்ளாச்சியில அஞ்சலிக்கு மட்டும்தான் ஷூட். அதுலயும் பிரச்னை இல்லை. ஆனா அடுத்து கோபிசெட்டிப்பாளையத்துல ரெண்டு பேருக்கும் காம்பினேஷன் ஷாட் இருந்தது. அங்கேதான் கதையோட உயிர்முடிச்சான மசாலா கபே ஹோட்டல் வருது.

அங்கே தங்கறதுக்கு ரூம் கிடைச்சதே தவிர, ஷூட்டிங் ஸ்பாட்ல கேரவனோ, உடைகள் மாற்ற தனித்தனி ரூம்களோ கிடைக்கலை. ஏன்னா ஒரு வீட்டை செட்டாக்கி, அதுக்கு எதிர் வீட்ல இவங்களுக்கு ரூம் ஏற்பாடு பண்ணியிருந்தோம். ஆனா இவங்க ரெண்டு பேரும் ஒண்ணா அடிச்ச லூட்டியைப் பாத்து யூனிட்டே கதி கலங்கிடுச்சு. இந்த ஜெனரேஷன் பொண்ணுங்களே வேறன்னு அப்பதான் தெரிஞ்சுக்கிட்டேன். இவங்க ரெண்டு பேர்னு இல்லை... சிவா, விமல்னு ஒரு செட் சேர்ந்து ஷூட்டையே கலகலப்பாக்கிட்டாங்க. நாங்க அங்கே இருந்த நேரம்தான் சச்சின் நூறாவது செஞ்சுரி அடிச்சது. யூனிட்டே உக்காந்து டிவி பார்த்து, கைதட்டி கலக்கிட்டோம். பசங்

Radjaramane@TTT



களுக்கு
சளைக்
காம இந்தப்
பொண்ணுங்
களும் கலாட்டா
வில பங்கெடுத்துக்
கிட்டாங்க...”

“பிறகு ஏன் இவளுங்க இம்சை
தாங்கமுடியலைன்னு சொன்
னீங்க..?”

“அது பாட்டு சார். படத்துல
இவங்க கேரக்டர்படி எழுதப்
பட்ட சாங். இதுலயும் இவங்களை
ஒரே ரூம்ல விட்டதுல நன்
மைதான் நடந்தது. அந்தப் பாட்
டுல ரெண்டு பேரும் கிளாமர்
டிரஸ்ல வரணும். ‘உன்னை விட
நான், என்னை விட நீ’ன்னு
ஒருத்தர் காஸ்ட்யூமைப் பார்த்து
இன்னொருத்தர் மிரண்டு போய்
போட்டி போட்டு கலக்கிட்
டாங்க...”

அடுத்த படத்துக்கான கதை
கேட்டுக்கொண்டிருந்த ஓவி
யாவைப் பிடித்து அஞ்சலியின்
ஃபிரண்ட்ஷிப் பற்றிக் கேட்
டால், “நாங்க பொதுவா
ஹோம்லியா வந்தாலும், சில படங்
கள்ல அஞ்சலி கிளாமரா டிரஸ்
போட்டிருக்கா. ஆனா நான்
ஆசைப்பட்டாலும், என்னை
யாரும் அப்படி நடிக்கக் கூப்பிட
லைன்னு அவகிட்டே சொல்லி
இருக்கேன். இதுல டைரக்டர்
அப்படி நடிக்கக் கேட்கவே, அட்ட
காசமா கிளாமர் டிரஸ் போட்டு
நடிச்சேன். அஞ்சலியும் நானும்
ஒருத்தருக்கொருத்தர் காஸ்ட்யூம்,
மேக்கப்னு உதவிக்கிட்டோம்.
ஷூட் முடிஞ்சு பிரிஞ்சு போனப்ப,
‘மிஸ் யூ டார்லிங்...’னு மெசேஜ்
அனுப்பி என் பிரிவைப் பகிர்ந்
துக்கிட்டேன்...” என்றார், அகல
விழிகளில் ஆற்றாமையுடன்.

படத்துல விமல், சிவான்னு
ரெண்டு பேர் இருந்தும் பசங்க
வேஸ்ட்டுப்பா..!

**- வேணுஜி**

Radjaramane@TTT

# சித்த வைத்தியத்தில்

## தமிழ்நாட்டில் 7 தலைமுறைகள், 198 வருடங்களை கொண்ட ஒரே நிறுவனம் !



Dr. சிவராஜ்

### சென்னை கிளை ஆபிஸ்

தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை
Old No.53/4 - New No.10/4 வீரபத்திரன் தெரு,
வள்ளுவர் கோட்டம் அருகில், VIP கேட்டின் எதிரில்,
நுங்கம்பாக்கம், சென்னை-34.
Ph: 044 - 28230072, 28236780.

### ஈரோடு கிளை ஆபிஸ்

தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை
பெருந்துறை ரோடு, செந்தில் நாம்பியன் எதிரில்,
கோவை மெடிக்கல் ரோடு வழியாக,
36, காந்தி நகர், வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
Ph: 0424-2259332.



Dr. சிவராஜ் சிவகுமார்

**ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **திருச்சி**<br>1-ம் 9-ம் தேதியும்<br>காலை 6 to மாலை 5<br>ஹோட்டல் ஆனந்<br>ஜங்ஷன் ரோடு,<br>திருவள்ளுவர் பஸ்<br>நிலையம் அருகில் | **தஞ்சை**<br>2-ம் தேதி<br>காலை 6 to 12<br>அசோக் லாட்ஜ்<br>ஆஸ்பத்திரி ரோடு<br>சாந்தி தியேட்டர் ரோடு | **கும்பகோணம்**<br>2-ம் தேதி<br>மதியம் 2 to 5<br>ஹோட்டல் அருள்<br>ஜான் செல்வராஜ் நகர்<br>புதிய பஸ்நிலையம் அருகில் | **விழுப்புரம்**<br>3-ம் தேதி காலை 6 to 12<br>ஹோட்டல் ஆதித்யா<br>புதிய பஸ் நிலையம் எதிரில்<br>Opp தேர் விநாயகர்<br>கோயில், K.K நகர் | **கள்ளக்குறிச்சி**<br>3-ம் தேதி<br>மதியம் 2 to 4<br>AKT லாட்ஜ்<br>கள்ளக்குறிச்சி | **வேலூர்**<br>11-ம் தேதி<br>காலை 6 to 12<br>ஹோட்டல் ரங்கா<br>லாட்ஜிங் ஹவுஸ்,<br>3, தெற்குபாளையம் தெரு | **கோவை**<br>13-ம் 26-ம் தேதியும்<br>காலை 6 to 5<br>ஸ்ரீ லட்சுமி லாட்ஜ்<br>கிரேஸ் மருத்துவமனை எதிரில்<br>ராஜவீதி |
| | **திருப்பூர்**<br>1-ம் 14-ம் தேதியும்<br>காலை 6 to 12<br>S.A.P ரெஸிடென்சி<br>11, முனிசிபல் ஆபிஸ் ரோடு | **ஓசூர்**<br>16-ம் தேதி<br>காலை 6 to மாலை 5<br>சின்னசாமி லாட்ஜ்<br>பாகலூர் ரோடு | **நெல்லை**<br>3 & 23-ம் தேதி<br>காலை 6 to 5<br>பரணி லாட்ஜ்<br>பஸ் நிலையம் அருகில்,<br>மதுரை ரோடு | **மதுரை**<br>4-ம் 22-ம் தேதியும்<br>காலை 6 to 4<br>காலேஜ் ஹவுஸ்<br>டவுன் ஹால் ரோடு | **நாகர்கோவில்**<br>2-ம் தேதி<br>காலை 6 to 5<br>பயனீர் பாரடைஸ்<br>டவர் ஜங்ஷன்<br>மணிமேடை | **திண்டுக்கல்**<br>24-ம் தேதி காலை 6 to 12<br>ஹோட்டல் கல்யாணா<br>ஸ்பென்சர் காம்ப்ளக்ஸ்<br>பஸ் நிலையம் எதிரில் |
| **கடலூர்**<br>11-ம் தேதி<br>காலை 6 to 12<br>ஹோட்டல் CAR லாட்ஜ்<br>62, லாரன்ஸ் ரோடு | **சிதம்பரம்**<br>11-ம் தேதி<br>மதியம் 2 to 5<br>MAT லாட்ஜ்<br>24, S.P. கோயில் | **மாயவரம்**<br>12-ம் தேதி<br>காலை 6 to 12<br>பிரின்ஸ் டவர்<br>பஸ் நிலையம் அருகில் | **நாகப்பட்டிணம்**<br>12-ம் தேதி<br>மதியம் 2 to 5<br>பூம்புகார் லாட்ஜ்<br>புதிய பஸ் நிலையம் அருகில் | **மன்னார்குடி**<br>13-ம் தேதி<br>காலை 6 to 12<br>ஹோட்டல் காவேரி லாட்ஜ்<br>புதிய பஸ் நிலையம் அருகில் | **புதுக்கோட்டை**<br>13-ம் தேதி மதியம் 2 to 5<br>ஹோட்டல் ராயல் பார்க்<br>புதிய பஸ் நிலையம் எதிரில் | **கரூர்**<br>14-ம் தேதி காலை 6 to 12<br>ஆர்த்தி ஹோட்டல்<br>(அமராவதி தியேட்டர் அருகில்)<br>பஸ் நிலையம் அருகில் |
| **கிருஷ்ணகிரி**<br>20-ம் தேதி<br>காலை 6 to 12<br>P.G.M லாட்ஜ்<br>PGM மேன்சன்,<br>239, பெங்களூர் ரோடு | **திருப்பத்தூர்**<br>20-ம் தேதி<br>மதியம் 2 to 5<br>சுந்தர் லாட்ஜ்<br>36, கிருஷ்ணகிரி ரோடு | **ஆரணி**<br>21-ம் தேதி<br>காலை 6 to 12<br>கல்யாண லாட்ஜ்<br>பெரிய கடை வீதி | **திருவண்ணாமலை**<br>21-ம் தேதி<br>மதியம் 2 to 5<br>ராதா லாட்ஜ்<br>94, சின்ன கடை வீதி | **மேட்டுப்பாளையம்**<br>27-ம் தேதி மதியம் 2 to 5<br>ஹோட்டல் காவேரி<br>K.G.C. காம்ப்ளக்ஸ்,<br>மெயின் ரோடு | | **பொள்ளாச்சி**<br>27-ம் தேதி<br>காலை 6 to 12<br>சக்தி ஹோட்டல்<br>144, கோவை ரோடு |

ஆண்மை குறைவு, பலஹீனம், விந்து சோதனை, உயிர் அணுக்கள் சோதனை, திருமணம் செய்ய பயமா ?
இவை யாவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறினால் தவிர எந்த பரிசோதனை மூலம் கண்டுபிடிக்க முடியாது.
ஏமாற வேண்டாம். நீங்கள் அவசரபடுகிறீர்கள் என்பதற்காக 15 நாள் மருந்தில் குணம் 2, 3 மாதங்களில்
திருப்தியான குணம், மருந்து சாப்பிடும் போது மாற்றம் என்று யார் கூறினாலும் ஏமாறவேண்டாம்.

வெளிநாட்டில் உள்ளவர்கள் மருந்து வாங்குவது பற்றியது
SSS செட் ரூ.5000/- அல்லது ஸ்பெஷல் செட் ரூ.3000/- வெளிநாட்டிற்கு அனுப்பிவைக்கப்படும் கூரியர் செலவு நாட்டிற்கு நாடு வேறுபடும்.
அதை போன் மூலம் அறிந்து கொள்ளவும். கீழ்க்கண்ட பெயருக்கு அனுப்பவும். SIVARAJ SIDDHA VAITHIYA SALAI, Salem.

உள்ளூரில் உள்ளவர்கள் ரூ.100/- கூட்டி மருந்து தொகையுடன் M.O. அனுப்பினால் மருந்து அனுப்பப்படும்.



SSS ஸ்பெஷல் ரூ.5000/-, ஸ்பெஷல் ரூ.3000/-, A-1 ரூ.2000/-, B-1 ரூ.1000/-, A குரூப் ரூ.500/-

**TV நிகழ்ச்சிகள்:**

ஜெயா — தினசரி காலை 9 to 9.30

WIN — தினசரி காலை 8.30 to 9.00
தினசரி மாலை 6.30 to 7.00

## சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் - 7.

E-mail: sales@siddhaindia.com
sivaraj@siddhaindia.com
www.siddhaindia.com
Ph: 0427-2419782, 2419783, Fax: 2416831

Radjaramane@TTT



"இருங்க... ஒரு நிமிஷத்துல வெரைட்டி மீல்ஸ் ரெடி! நான் போன பஃபே பார்ட்டியில சாப்பிட முடியாத அயிட்டத்தை யெல்லாம் நைஸா பேக்ல போட்டு கொண்டு வந்திருக்கேன்..."

www.kungumam.co.in

# அல்பம் அலமேலு

கண்ணா



"மாமி... நீங்க கணபதி தெருதானே? நானும் அங்கதான்..! இருங்க... ஒரு நொடியில காய்கறி வாங்கிட்டு, உங்க கொடையிலயே நானும் வந்திடறேன்!"



"அவருக்கு எப்படியும் தெரியப் போறதில்ல! இந்த நாய் பிஸ்கெட்டையே, ஊர்ல இருந்து வந்திருக்கற உங்க சித்தப்பாவுக்கு வைங்க..."

Radjaramane@TTT



‘‘பக்கத்து வீட்டு சாமான்களுக்கு ஸ்பிரே பெயின்ட் பண்ணிட்டிருக்காங்க. சைடுல வேஸ்ட்டா சிந்தறது நம்ம ஸ்டூல்ல அடிக்கட்டுமேன்னு வைக்கப் போறேன்!’’



‘‘என் கண்ணாடியை மறந்துபோய் வீட்ல வச்சுடலை! மீனாவோடதும் என்னோடதும் ஒரே பவர்தான்... அதான் இவளோடதையே யூஸ் பண்ணிக்கலாம்னு...’’



‘‘ஏம்பா! அந்த குப்பைத் தொட்டியிலேர்ந்து நாலஞ்சு எலும்புத் துண்டுகளை கொண்டாந்து எங்க கேட் பக்கத்துல போட்டுடேன். பக்கத்து வீட்டுக்காரியோட நான்-வெஜ் பந்தா தாங்கலை!’’

Radjaramane@TTT

நியூஸ் வே

இந்திய வறுமைக்கோட்டை சற்றே உயர்த்தி இருக்கிறார்கள். ஏற்கனவே கிராமங்களில் ரூ.26க்கு மேலும், நகரங்களில் ரூ.32க்கு அதிகமாகவும் செலவு செய்பவர்கள் இந்தக் கோட்டுக்கு மேலே இருந்தார்கள். 66வது தேசிய மாதிரி ஆய்வறிக்கைப்படி இது கிராமங்களில் ரூ.35 என்றும், நகரங்களில் ரூ.66 என்றும் திருத்தப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால், இந்தியர்களில் நூற்றில் 65 பேர் ஏழைகள்!



நியூஸ் வே

நம்ம ஊரில் அட்சய திருதியை அன்று நகை வாங்குகிறோம். மத்தியப் பிரதேச மாநிலத்தில் குஜ்ஜார் பழங்குடியினர் அன்று தங்கள் குழந்தைகளுக்கு கல்யாணம் செய்து வைக்கிறார்கள். 'இந்த ஆண்டு ராஜ்கர் மாவட்டத்தில் மட்டும் 65 குழந்தைத் திருமணங்கள் நடைபெற்றன' என்கிறது ஒரு ஆய்வு. 3 வயது மணப்பெண்கள்கூட உண்டாம்!



www.kungumam.co.in

நியூஸ் வே

தமிழகம் முழுக்க கடந்த நான்கு ஆண்டுகளில் நிகழ்ந்த கொலைகள் பற்றிய அதிர்ச்சியான புள்ளிவிவரம் வெளியாகி இருக்கிறது. பெரும்பாலும் குடும்பத் தகராறுகளே அதிகமான கொலைகளுக்குக் காரணமாக இருக்கின்றன. 'காதல் கொலைகள்' கடந்த நான்கே ஆண்டுகளில் இரண்டு மடங்கைவிட அதிகமாகி இருக்கிறது. 2008ம் ஆண்டில் 155 காதல் கொலைகள் நடந்தன. 2011ல் இது 347 ஆக உயர்ந்து இருக்கிறது.



Radjaramane@TTT



நியூஸ் வே

"பாக்ஸிங் விளையாட்டின் டெண்டுல்கர் நான்" என்று சொல்லும் விஜேந்தர் சிங், லண்டன் ஒலிம்பிக்ஸில் விளையாட தகுதி பெற்றிருக்கிறார். தொடர்ந்து மூன்றாவது முறையாக ஒலிம்பிக்ஸில் விளையாட தகுதிபெற்ற ஒரே இந்தியக் குத்துச்சண்டை வீரர் என்ற பெருமை அவருக்கு. விஜேந்தரோடு இதுவரை ஐந்து இந்தியக் குத்துச்சண்டை வீரர்கள் ஒலிம்பிக் தகுதி பெற்றிருக்கிறார்கள். தங்கம் குவிக்கட்டும்!



நியூஸ் வே

'ஈழத்தில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டபோது ஏதும் செய்யாதவர்' எனக் குறிப்பிடப்பட்ட ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி-மூனுக்கு டெல்லி ஜாமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக் கழகம், கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது. இந்தியாவோடு அவருக்கு நெடிய உறவு உண்டு. தென் கொரிய தூதராக முதலில் அவர் பொறுப்பேற்றது டெல்லியில்தான். அவரது மகன் பிறந்தது டெல்லியில். மகள் மணந்தது ஒரு இந்தியரை! பேரனுக்கு ஜெய் என இந்தியப் பெயர் வைத்தார்கள். "மிக உன்னதமான இந்திய - கொரிய கூட்டுத் தயாரிப்பு என் பேரன்தான்" என்று சிரிக்கிறார் அவர்.

Radjaramane@TTT



## கிச்சு கீச்சு

‘நியூட்டனின் தேர்ட் லா’விற்குப் பிறகு உலக மக்கள் அதிகம் தெரிந்து வைத்திருப்பது, இந்திராகாந்தியின் டாட்டர்இன்லா மட்டும்தான்!

**2020**ல் இந்தியாவை வல்லரசாக்க உயிரைக் கொடுத்து உழைப்பவர்கள், இந்த புத்தகம் எழுதுகிறவர்கள்தான். அதிலும் இந்த ‘எப்படி?’ டைப் புத்தகங்களின் உதவி உன்னதமானது. தொல்காப்பிய பூங்காவின் சேலைத் தொடுமளவு விஞ்சி நிற்கிறது ‘மாங்கா தொக்கு செய்வது எப்படி’ என்கிற புத்தகம். இந்தி கற்பது எப்படி? கோலம் போடுவது எப்படி? கும்மியடிப்பது எப்படி? வாழ்வது எப்படி? வயித்தெரிச்சல் படுவது எப்படி? சமைப்பது எப்படி? சாவது எப்படி? இப்படிப் பலப்பல எப்படி.... நம் களவுத்துறை உதவியுடன், பிரபலங்கள் இப்போது வாசித்துக்கொண்டிருக்கும் ‘எப்படி?’ டைப் புத்தகங்களின் விவ



www.kungumam.co.in

Radjaramane@TTT

**ஆல்தோட்ட பூபதி**



ரங்கள் உங்கள் பார்வைக்கு... Enjoy!

**தோனி** - விளம்பரத்தைக் குறைத்து விளையாடுவது எப்படி?

**நெஹ்ரா** - 10 நாளில் பவுலிங் போடுவது எப்படி?

**கேப்டன்** - புள்ளிவிபரம் அள்ளி விடுவது எப்படி?

**ராமதாஸ்** - 2016ல் ஆட்சி அமைப்பது எப்படி?

**நித்யானந்தா** - 5 நாளில் ஆதீனம் ஆவது எப்படி?

**வைகோ** - அழாமல் இருப்பது எப்படி?

**அம்மா** - பதவி பல்லாங்குழி விளையாடுவது எப்படி?

**தமிழக மக்கள்** - இருட்டில் வாழ்வது எப்படி?

**பிரதமர்** - வாயை திறந்து வார்த்தை விடுவது எப்படி?

**தா.பாண்டியன்** - புண்பட்ட நெஞ்சை புன்னகைக்க வைப்பது எப்படி?

**சரத்குமார்** - கோரஸ் பாடுவது எப்படி?

**ஆளுங்கட்சி எம்.எல்.ஏக்கள்** - 30 டிகிரியில் குனிந்து கும்பிடுவது எப்படி?

**ராகுல் காந்தி** - தினமும் சாப்பாட்டுக்கு வழி செய்வது எப்படி?

**தனுஷ்** - Anthem பாடுவது எப்படி?

**எடியூரப்பா** - 3 நாளில் முதல்வராவது எப்படி?

**நமீதா** - புடவை கட்டுவது எப்படி?

**பவர் ஸ்டார்** - பயமுறுத்தாமல் நடிப்பது எப்படி?

**ஞானதேசிகன்** - குறட்டையைத் தடுப்பது எப்படி?

**குங்குமம் வாசகர்கள்** - ஏங்க இப்படி?

## கிச்சு கீச்சு



நித்யானந்தா எழுச்சி மிக்கவர், ஆற்றல் மிக்கவர் - மதுரை ஆதீனம்

# யெஸ், யெஸ், நாங்க கூட டிவில பார்த்தோம்.

# யம்பட பேசு!

Radjaramane@TTT



தமிழ்கூறு நல்லுலக தமிழ்மகன் எவனாவது, தனித்து விடப்பட்ட நேரத்தில், தனியார் தொலைக்காட்சிகளில் சித்த வைத்திய நிகழ்ச்சிகளை அரை மணி நேரம் பார்த்தான்... கபாலம் உடைந்து சுத்த பைத்தியமாவான். எட்டு தலைமுறையா முந்நூறு வருஷம் எக்ஸ்பீரியன்ஸ் உள்ளவரும், முந்தாநேத்துதான் புழலில் இருந்து ரிலீசானவரும் போட்டி போட்டுக்கிட்டு லேகியம் விக்கிறாங்க. இந்தக் காலத்து பசங்க வாத்தியாருங்ககிட்ட வாங்கின திட்டைவிட, இந்த மாதிரி வைத்தியருங்ககிட்ட வாங்கின திட்டுதான் அதிகம்.

இவங்க நிகழ்ச்சிய பார்க்கிறப்ப, ஏழு புள்ள பெத்தவனுக்குக்கூட தன் மேல சந்தேகம் வந்துடும். சில வைத்தி



# நயம்பட பேசு!

**குங்குமம் வாசகர்களுக்கு ஒரு பந்தயம்... இந்தக் குறுங்கட்டுரையை நீங்கள் இரண்டாம் முறை படிப்பீர்கள்; அப்படிப் படித்தால், அடுத்த வாரம் இரண்டு குங்குமம் வாங்க வேண்டும்... சரியா?**

கண்கள் முக்கியம். இந்தியாவின் பலமே நல்ல கண்கள்தான். கண்கள் மட்டுமில்லையென்றால் இந்த பூலோகத்தில் மனிதர்கள் வாழ்வதே வீண். பார்த்தவுடனே பிடித்துப் போய்விடும் சில கண்களை; பார்க்கப் பார்க்க பிடித்து போகும் சில கண்களை. கண்கள் எப்பொழுதும் அழகுதான் எனினும், சில கண்களுக்கு கண்ணாடி அழகு; சில கண்களுக்கு கண்ணாடி போடாமல் இருப்பதே அழகு.

கண்களே அழகு; அதிலும் கண்கள் சிரிப்பது சிதறடிக்கும் அழகு. ஒவ்வொரு கண்ணும் அழகுதான் எனினும், பார்த்தவுடன் கிறக்கத்தை உண்டு பண்ணும் கண்களும் உண்டு இந்த தேசத்தில். குற்றம் செய்த குறுகுறுக்கும் நெஞ்சுள்ள ஆண்கள், கண்களைப் பார்த்து பேசவே பயப்படுமளவு பவர் இருக்கிறது கண்களிடம். ஆண்களுக்கு ஒரு சாபம் உண்டு... கண்களைப் பார்த்து எந்நாளும் மனதில் ஓடும்

யர்கள் சிகிச்சைக்கு வருபவன் மூஞ்சிய பார்த்தே பிரச்னைய கண்டுபிடிச்சுடு வாங்களாம். நரம்படி நாராயணன்... கண்ணுல மைக்ரோஸ்கோப்போ, டெலஸ்கோப்போ குமிச்சி வச்சிருப்பாரு போல! தமிழ்நாட்டுல பன்னிக்காய்ச்சலுக்கு அப்புறம் வேகமா பரவறது இவீங்கதான்!

பிரதிபா பாட்டீல் பெரியம்மாவ விட அதிகமா டூர் போற அப்பாடக்கர்ஸ் இந்த வைத்தியருங்க. நல்ல டாக்டர தேடி நாடே வருமய்யா... நீ ஏன்யா ஊர் ஊரா உடுக்க அடிக்கப் போற? பிரதி மாதம் ஏழாம் தேதி பாண்டிசேரி விஜயம், பிரதி மாதம் ஒன்பதாம் தேதி பெங்களூர் விஜயம், இப்படியே சுத்துங்க நைனா... பிரதி மாதம் ஏதோ ஒரு நாள் கண்டிப்பா புழல் விஜயம் உண்டு மக்கா! 'பொண்டாட்டி கண்ணு குருடு, புருஷன் காது செவுடு'ங்கிற கதையா, இவிங்க நிகழ்ச்சிய மட்டும் அஞ்சு நிமிஷம் 'ம்யூட்' பண்ணிப் பாருங்க... 'அய்யா பஸ்சுக்கு காசில்லைய்யா... பத்து ரூபா கொடுங்கய்யா...'ன்னு சர்ச் பாதர் கிட்ட பாவமன்னிப்புக்கு கெஞ்சுற மாதிரியே இருக்கும்.

மக்களே, இவீங்கள பார்த்தா பரிசோதனையெல்லாம் நடக்காது! பர்ஸுக்கு வேணா சோதனை நடக்கும். அரசாங்கம் இவிங்க மருந்த வாங்கி டெஸ்ட் பண்ணணும். மருந்து ஏமாத்து வேலைன்னா கூட மன்னிச்சு விட்டுடலாம். ஆனா லேகியம் பவருன்னா, மக்கள்தொகை பெருக்கத்துக்கு இவங்கதான் காரணமுன்னு புடிச்சு உள்ள போடணும் யுவர் ஆனர்!



## கிச்சு கீச்சு

தமிழகத்திற்கு எக்ஸ்ட்ரா பவர் கொடுங்க - பிரதமருக்கு நாராயணசாமி கோரிக்கை

# பிரதமர் என்ன, பிரணாப் சூத்திரம் சொல்லச் சொல்ல... லேகியமா கிண்டுறார்?

எண்ணங்களை கண்டறிய முடியாததே அது.

உண்மையான ஆண்மகன், கண்களின் கண்ணீரைக் கண்டு சும்மா இருக்க மாட்டான். ஏனெனில், கண்கள் கலங்குவது கண்களுக்கும் அழகில்லை; கொண்டிருக்கும் ஆண்களுக்கும் அழகில்லை. அங்கும் இங்கும் அலைபாயும் கண்கள் சிறியன, பெரியன என்று பல வகை; ஆனால் சந்தேகமாய் பார்ப்பதில் எல்லாக் கண்களும் ஒரே வகை. இப்படிப்பட்ட அழகான கண்களிடம் பிடிக்காத ஒரே விஷயம், பல நேரம் வேறு கண்கள் அழுவதை பார்த்துக்கொண்டு தொலைக்காட்சி மெகா சீரியல்களில் மூழ்கிவிடுவதுதான். கண்களின் பார்வைகள் டிவிகளின் மேல் விழுவதை விட புத்தகங்கள், பத்திரிகைகள் மேல் இன்னமும் கொஞ்சம் விழலாம்.

([illegible])

(பேசுவோம்...)

Radjaramane@TTT



உடைகளுக்கும், அழகு சாதனங்களுக்கும் அடுத்தபடியாக பெண்களை அதிகம் கவர்வது கைப்பைகள். வேலைக்குச் செல்ல ஒன்று, விருந்தினர் வீட்டுக்கு ஒன்று, ஷாப்பிங் செய்ய ஒன்று என ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கும் ஒவ்வொரு விதமான பைகளை எடுத்துச் செல்ல விரும்புவது அவர்களது இயல்பு. வசதி இருப்பவர்

www.kungumam.co.in



# பணம் தரும் பழைய உடை பைகள்!

Radjaramane@TTT

வீட்டிலிருந்தபடியே சம்பாதிக்கலாம்

களுக்கு அது சாத்தியம். இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்?

''கவலையே வேண்டாம். உங்களோட பழைய புடவை, சல்வார், ஜீன்ஸ், டாப்ஸ்னு என்ன இருந்தாலும், அதை அழகான ஹேண்ட்பேகா மாத்தலாம்'' என்கிறார் சென்னையைச் சேர்ந்த சித்ரா. பி.காம் பட்டதாரியான இவர் இன்று முழுநேர கைவினைக் கலைஞர். ஐந்நூறுக்கும் மேலான கைவினைக் கலைகள் கற்று வைத்திருக்கிற சித்ரா, வேஸ்ட் துணிகளில் வித்தியாசமான கைப்பைகள் செய்வதில் நிபுணி. ஆர்வமுள்ளோருக்கு வழிகாட்டுகிறார் அவர்.

### என்னென்ன தேவை? முதலீடு?

''தையல் மெஷின், பழைய புடவை, பாவாடை, சுடிதார், ஜீன்ஸ் பேன்ட், பிளவுஸ் பிட் என கைவசம் உள்ள துணிகள், ஜிப், ஃபேன்சி கைப்பிடிகள், பட்டன்கள், அலங்காரப் பொருள்கள்.... மெஷின் தவிர்த்துப் பார்த்தால் வெறும் 100 ரூபாய் முதலீடு போதும்.''

### எத்தனை மாடல்? என்ன ஸ்பெஷல்?

''காலேஜ் பை, ஆபீஸ் பை, லேப்டாப் பை, வாட்டர் பாட்டில் பை, செல் பவுச், பர்ஸ்... இப்படி பதினைந்துக்கும் மேலான மாடல்கள் பண்ணலாம். உபயோகமில்லாத பழைய துணிகளை என்ன செய்வது என்கிற கவலையின்றி, அவற்றை இப்படி உருப்படியான, உபயோகமான பொருட்களாக மாற்றலாம். உடை தைக்கும்போது வீணாகும் பிட் துணிகளில்கூட தைக்கலாம். உடைக்கு மேட்ச்சாகவும் இருக்கும்.''

### விற்பனை வாய்ப்பு? லாபம்?

''அக்கம்பக்கத்து வீடுகள், ஆபீஸ், காலேஜ், ஃபேன்சி ஸ்டோர் என விற்பனைக்கான வாய்ப்புகள் எக்கச்சக்கம். ஒரு நாளைக்கு 10 பைகள் வரை தைக்கலாம். ஒரு பை தைக்க நமக்கு வெறும் 100 ரூபாய்தான் செலவு. அதை 300 ரூபாய் வரை விற்கலாம். ஒரு பர்ஸ் தைக்க 20 ரூபாய். இதை 100 ரூபாய்க்கு விற்கலாம். மெட்டீரியலையும், மாடலையும் பொறுத்து, இரண்டு முதல் மூன்று மடங்கு லாபம் நிச்சயம்.''

### பயிற்சி?

''ஒரே நாள் பயிற்சியில் 5 மாடல்கள் கற்றுக் கொள்ள 500 ரூபாய்.''

- ஆர்.வைதேகி
படங்கள்: ஆர்.சந்திரசேகர்

Radjaramane@TTT

# பன்றிக்காய்ச்சல்

தமிழகத்தை மீண்டும் பதற்றத்துக்கு உள்ளாக்கி இருக்கிறது பன்றிக்காய்ச்சல். கடந்த வார நிலவரப்படி 105 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 3 பேர் இறந்துள்ளார்கள். தமிழகத்தில் மக்கள் நெருக்கம் மிகுந்த சென்னையில்தான் அதிக பாதிப்பு. கோவை, மதுரை, விழுப்புரம் என பிற மாவட்டங்களையும் குறிவைத்து நகர்கிறது இந்நோய்.

மக்களை அச்சமும் பீதியும் ஆக்கிரமித்து இருக்கும் சூழ்நிலையில், 'நோய் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் தடுப்பூசி போடப்படும்' என்று அறிவித்தது தமிழக அரசு. இதற்காக மத்திய அரசிடமிருந்து 4 லட்சம் தடுப்பூசிகள் வாங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. முதற்கட்டமாக மருத்துவத்துறை ஊழியர்களுக்கு தடுப்பூசி போடும் பணியும் நடந்தது. தமிழகம் கேட்ட தடுப்பூசிகளைத் தருவதற்கு பதிலாக, 'பன்றிக்காய்ச்சலுக்கு தடுப்பூசி போடுவதால் பயனில்லை' என்கிற தொனியில் மத்திய சுகாதாரத்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

www.kungumam.co.in




உண்மையில் பன்றிக்காய்ச்சலுக்கு தடுப்பூசி உண்டா... இல்லையா..? நோய் வராமல் தற்காத்துக்கொள்வது எப்படி? தமிழக பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறையின் முன்னாள் இயக்குனர் டாக்டர் எஸ்.இளங்கோவிடம் கேட்டோம். விரிவாகப் பேசினார் இளங்கோ.

"காய்ச்சல் என்பது நோயல்ல. நோயின் அறிகுறி. உடம்புக்குள் புகுந்து சுகவீனப்படுத்தத் தொடங்கும் ஒரு புதிய நோய்க் கிருமிக்கு எதிராக உடம்பு எடுக்கும் தற்காப்பு நடவடிக்கை. 'ஸ்வைன் இன்ஃப்ளுயன்சா' எனப்படும் வைரஸ் உடம்புக்குள் புகுந்த

Radjaramane@TTT

# தடுப்பூசியால் பயனில்லை!



தால் உண்டாகும் ஒருவித நோய்தான் பன்றிக்காய்ச்சல். விடாத காய்ச்சல், மூக்கில் நீர் ஒழுகுதல், தொண்டை, உடம்பு வலி ஆகியவை இதன் மேலோட்டமான அறிகுறிகள். பிற ஃப்ளூ காய்ச்சல் வகைகளைச் சேர்ந்ததுதான் இது என்றாலும், உடனடி சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால், அறிகுறிகள் தெரிந்த சில நாட்களிலேயே பாதிப்பு அதிகமாகிவிடும் என்பதுதான் இதிலுள்ள பிரச்னை. ஆனால் தகுந்த நேரத்தில் கண்டறிந்து, சரியான சிகிச்சை மேற்கொண்டால் 100 சதவீதம் குணப்படுத்த முடியும்" என்கிற இளங்கோ தொடர்ந்தார்.

"பன்றிக்காய்ச்சல் பற்றிய மருத்துவ அறிவியலை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். தொடக்கத்தில் சாதாரண காய்ச்சல் போலவே ஆரம்பிக்கும். நான்காவது

Radjaramane@TTT




நாள் நுரையீரலில் பிரச்னை தொடங்கிவிடும். காய்ச்சல் விட்டு விட்டு வரும்; அதிகமாக மூச்சு வாங்கும். 6வது நாளில் மூச்சு வாங்குவது அதிகரிக்கும்; உடல் சோர்வாகி விடும். 9வது நாள் மூச்சுத்திணறல் ஏற்படும்; நுரையீரலை நிமோனியா தாக்கும். செல்களுக்கு கிடைக்க வேண்டிய ஆக்சிஜன் குறைந்துவிடும். 10வது நாள் ஐசியுவில் அனுமதித்து சிகிச்சை அளித்தே ஆகவேண்டும். 15 நாட்களுக்குள் முறையான சிகிச்சை எடுத்துக் கொள்ளாவிட்டால் உயிரிழப்பே நேரலாம்.

பன்றிக் காய்ச்சலுக்கு ‘டாமிப்ளூ’ என்ற மாத்திரையை உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்துள்ளது. Oseltamivir எனப்படும் இந்த மாத்திரை, வைரஸ் கிருமிகளை அழிக்க வல்லது. வெளி மார்க்கெட்டில் கிடைக்காது. தற்போதுள்ள நிலையில், சளியுடன் கூடிய காய்ச்சல் வந்தாலே மருத்துவர்கள் இம்மாத்திரையைப் பரிந்துரைக்கிறார்கள்.

‘ஸ்வைன் ப்ளூ’ வைரஸை மருத்துவத்தில் ஏஹெச்1என்1 என்பார்கள். இந்த வைரஸ் எப்போதும் ஒரேமாதிரி இருப்பதில்லை. அவ்வப்போது தன்னைத் தானே உருமாற்றிக் கொண்டே இருக்கும். சுமார் 144 வகையான வைரஸ் நிலைகளாக இது மாறக்கூடும். ஒவ்வொரு வைரஸுக்கும் நோயின் தன்மையும், வீரியமும் வெவ்வேறாக இருக்கும். அதனால்



இளங்கோ

## பருவம் தப்பிய பன்றிக்காய்ச்சல்!

1918ல் பன்றிக்காய்ச்சல் தாக்கி, உலகெங்கும் 4 கோடிப் பேர் இறந்தார்கள். அதன்பிறகே அந்நோய் பற்றிய ஆய்வுகள் தொடங்கின. 2009ல் மெக்ஸிகோவில் இருந்து கிளம்பிய இந்நோய், கனடா, அமெரிக்கா வழியாக தென்கிழக்கு ஆசிய நாடுகளை வந்தடைந்தது. வெளிநாட்டுப் பயணிகள் மூலமாக இந்தியாவுக்குள் நுழைந்த இந்நோய், தற்போது இங்கிருப்பவர்கள் மூலமாகவே பரவத் தொடங்கியுள்ளது. மழைக்காலத்தில் மட்டுமே பரவும் என்று நம்பப்பட்ட நிலையில், இப்போது கொளுத்தும் கோடையிலும் வதைப்பது மருத்துவத்துறையை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

www.kungumam.co.in

Radjaramane@TTT

## வராமல் தடுக்க...



- முடிந்தவரை நெரிசலான இடங்களைத் தவிருங்கள்.



- பொது இடங்களில் மாஸ்க் அணிந்து கொள்ளுங்கள்.



- வெளியில் போய் வந்தால் கைகளை சோப்புப் போட்டு கழுவுங்கள்.



- பாதிக்கப்பட் டோரிடம் நெருங்காமல் தனித்திருங்கள்.

## வந்தால்?



- உடனடியாக அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங் களில் சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள்.



- சத்தான திரவ உணவுகளை எடுத்துக் கொள்ளுங்கள்.



- பிறரிடம் இருந்து ஒதுங்கியிருங்கள்.



- தும்மும் போதும், இருமும்போதும் டிஷ்யு பேப்பர் அல்லது துணியை பயன்படுத்திவிட்டு அதை எரித்துவிடுங்கள்.



- பயணங்களைத் தவிருங்கள்.

இதற்கு எதிரான தடுப்பூசியை உருவாக்குவது என்றால், இந்த 144 வகை வைரஸ்களின் கலவையான ஒரு தடுப்பு மருந்தாக அது இருக்க வேண்டும். நடைமுறையில் அது சாத்தியமில்லை. இதை எளிமையாக்கும் ஆராய்ச்சிகள் தீவிரமாக நடந்து வருகின்றன...'' என்கிறார் இளங்கோ.

**த**டுப்பூசி போடுவதற்கான இடங்கள் அறிவிக்கப்பட்டு மக்கள் எதிர்பார்ப்புடன் இருந்த நிலையில், தடுப்பூசியே தேவையில்லை என்று கூறுவது முரண்பாடாக இருக்கிறதே..? தமிழக பொது சுகாதாரத்துறை இயக்குனர் பொற்கைபாண்டியனிடம் கேட்டோம்.



பொற்கை பாண்டியன்

"2009ல் பன்றிக்காய்ச்சல் தடுப்பூசி போடப்பட்டது. அதன் வீரியமே தற்போது குறையவில்லை. 50 சதவீதம் எதிர்ப்பு சக்தி உடம்பில் இருக்கும். அதனால் இப்போது புதிதாக தடுப்பூசி போடத் தேவையில்லை...'' என்றவரிடம், "மருத்துவ ஊழி



Radjaramane@TTT

பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறப்பவர்களை அடக்கம் செய்வதற்கு சில பொது சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார் மருத்துவர் இளங்கோ.

''பாதிக்கப்பட்டு இறப்போரின் உடலை நீண்டநேரம் வீட்டில் வைத்திருக்கக் கூடாது. தொட்டு, கட்டிப்பிடித்து அழுவதையும் தவிர்க்க வேண்டும். உடலை எரிப்பது நல்லது. புதைப்பதாக இருந்தால் 6 அடிக்கும் மேல் குழியைத் தோண்டி, அதில் அரை அடிக்கு சுட்ட சுண்ணாம்புக்கல் போடவேண்டும். அதன்மேல் 3 அங்குலத்துக்கு பிளீச்சிங் பவுடர் போட்டு உடலை வைத்து, உடலின்மீது மேலும் 3 அங்குலத்துக்கு பிளீச்சிங் பவுடர் போடவேண்டும். அதன்பிறகே குழியை மூடவேண்டும். குடும்பத்தினர் அனைவரும் கட்டாயம் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்'' என்கிறார் இளங்கோ.

யர்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடும் பணி நடக்கிறதே..?'' என்றோம்.

''நோய் தாக்கியவர்களுக்கு அவர்கள்தான் சிகிச்சை அளிக்கிறார்கள். அவர்களின் அச்சத்தைப் போக்கி நம்பிக்கை அளிப்பதற்காகப் போடுகிறோம். உண்மையில் தடுப்பூசி யாருக்கும் அவசியமில்லை'' என்ற பொற்கை பாண்டியன், ''மக்கள் அஞ்சத் தேவையில்லை. சுமார் 3.50 லட்சம் டாமிப்ளூ மாத்திரைகள் இருப்பு உள்ளன. கூடுதலாக 12 தனியார் லேப்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளோம். அதிவேகத்தில் பன்றிக்காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் பணிகள் நடந்து வருகின்றன'' என்கிறார்.




உண்மையில், பன்றிக்காய்ச்சலை விட அதுபற்றிய வதந்திகள்தான் மக்களை அதிகம் பாதிக்கின்றன. போதாக்குறைக்கு அரசும் மக்களைக் குழப்பாமல், விழிப்புணர்வையும் தடுப்பு நடவடிக்கைகளையும் விரைவுபடுத்த வேண்டும்.

**- வெ.நீலகண்டன்**



www.kungumam.co.in

Radjaramane@TTT



# காதல் மனைவி

● ரவி நந்தினி

மெல்லிய நீல நிறப் புடவையைக் கட்டிக் கொண்டு கவர்ச்சியான தோற்றத்தோடு நின்றிருந்தாள் என் மனைவி. அந்த இடத்தில் இருக்கும் எல்லோரும் அவளையே பார்ப்பது போல எனக்குத் தோன்றியது. அப்போது ஒரு இளைஞன் அவளருகே வந்தான். அவனுக்காகவே காத்திருந்தது போல, இவள் கண்களை அகல விரித்து ஒரு ஆசை பார்வை பார்த்தாள். வந்தவன் அவள் இடுப்பில் கை வைத்தான். பார்த்துக் கொண்டிருந்த எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிந்தது.

என்ன செய்ய முடியும்? இயலாதவனாய் சேரில் உட்கார்ந்திருந்தேன்.

அவன் இடுப்பில் வைத்த கையை கொஞ்சம் கொஞ்சமாக மேலே கொண்டு போக முயற்சி செய்தான். உடலில் படர்ந்த அவனது கையை, இவளது கை ஒரு எல்லையில் தடுத்து நிறுத்தியது.

‘இது நானே தேடிக் கொண்ட காதல். மனதே அடங்கு! பொறுமை... பொறுமை... இன்றைய பொழுதோடு எல்லாம் முடிந்து விடும். நிழலாகப் பார்த்ததை விட நிஜம் இன்று கசந்தது. இதோ முடிந்து விட்டது. நாளை மறுநாள் வெளி நாட்டில் இருப்போம். இனி, இந்த வாழ்க்கை கிடையாது.’

இளைஞனிடமிருந்து விலகிய என்னவள் வந்தாள். “என்ன டார்லிங்... அப்செட் ஆகிட்டீங்களா? அதுக்குத்தான் இங்கெல்லாம் வர வேணாம்னு சொன்னேன். கடைசி படம்... நடிச்சுக் கொடுத்தாச்சு. இனி விடுதலை!” என்றாள், என் மனைவியாகிவிட்ட முன்னணி நடிகை. ●

Radjaramane@TTT

# போட்டோ பேசுது

ஸ்டில்ஸ் ரவி

கோபம் இருக்கற இடத்தில்தான் குணம் இருக்கும்னு சொல்வாங்க. இதுக்கு சூப்பர்ஸ்டாரும் ஒரு உதாரணம். ரஜினியும் ஷோபனாவும் போஸ் கொடுக்கும் இந்தப் படம், 'சிவா' படத்தின் பாடல் காட்சிக்காக போடப்பட்ட செட்டில் எடுத்தது.

இன்றைக்கு ஷூட்டிங் நடந்து கொண்டிருக்கும்போதே போட்டோ எடுத்துவிடலாம். ஆனால் அப்போதெல்லாம் அப்படிச் செய்ய முடியாது. ஸ்டில் கேமராவை தனியாக செட் செய்து, சம்பந்தப்பட்ட நடிகர், நடிகைகளை அப்படியே போஸ் கொடுக்கச் சொல்லித்தான் ஸ்டில்ஸ் எடுக்க முடியும்.

'சிவா' படப்பிடிப்பில் அப்படி ஒருநாள் படமெடுக்கச் சென்றிருந்தேன். காட்சி எடுத்து முடித்த பிறகு ரஜினியிடம் சென்று, ஸ்டில் கேமராவுக்கு போஸ் கொடுக்கச் சொல்லிக் கேட்டேன். திடீரென்று டென்ஷனான ரஜினி, என்னிடம் கோபமாக முகத்தைக் காட்டினார். அவ்வளவுதான்... கேமராவையும், உபகரணங்களையும் எடுத்து வைத்துக்கொண்டு, அங்கிருந்து கோபித்துக் கொண்டு வந்துவிட்டேன்.

ஷூட்டிங் முடிந்ததும் என்னைத் தேடியிருக்கிறார் ரஜினி. ''ரவி எங்க... ரவி எங்க...'' என யூனிட்டில் உள்ளவர்களிடம் விசாரித்திருக்கிறார். ''அவர் அப்பவே கிளம்பிட்டாரே'' என அங்கிருந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

பிறகு என்னிடம் பேசிய ரஜினி, ''என்ன ரவி... கோவிச்சுக்கிட்டீங்களா? கொஞ்சம் டென்ஷன்... அதான்! இப்ப வாங்க... படம் எடுத்துக்குங்க'' என்று என்னை சமாதானப்படுத்தினார். அதன்பிறகு எடுத்த படம்தான் இங்கே நீங்கள் பார்ப்பது.

ரஜினி பெரிய ஸ்டார். நான் ஒரு போட்டோகிராபர். அவர் நினைத்திருந்தால் என்னை வேண்டாம் என்று ஒதுக்கி இருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. 'இவர் மனதைக் காயப்படுத்திவிட்டோமோ' என்று ஃபீல் செய்து என்னை சமாதானப்படுத்தினார். அதன்பிறகு ஒருநாள்கூட என்னிடம் அவர் டென்ஷன் காட்டியதில்லை. இந்த குணம் எல்லாருக்கும் இருப்பதில்லை.

'சிவா' என தங்கள் பெயரைச் சொல்லி யாராவது என்னிடம் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டால்கூட, எனக்கு இந்த சம்பவம்தான் ஞாபகத்திற்கு வரும்.

**- நெக்ஸ்ட் ஷாட்**

தொகுப்பு: **அமலன்**

www.kungumam.co.in

Radjaramane@TTT



# சுர்ரான சூப்பர்ஸ்டார்... சூடான போட்டோகிராபர்..!

Radjaramane@TTT



# இவங்க காலர் டியூன் என்ன?




## சினேகன்



'உன்னை அறிந்தால்... நீ உன்னை அறிந்தால்...' என உற்சாகமூட்டுகிறது சினேகனின் காலர் டியூன். "நான் எழுதிய எத்தனையோ பாடல்களை மற்றவர்கள் காலர் டியூனாக வைத்திருக்கிறார்கள். ஆனால் கண்ணதாசன், எம்.ஜி.ஆர் என்ற இரண்டு வாத்தியார்களின் பாடலை வைத்திருப்பதில்தான் எனக்கு சந்தோஷம்" என்கிறார் இவர்.

www.kungumam.co.in

## பிந்துமாதவி

'ஒரு தேவதை வீசிடும் பார்வையிலே விழுவது ஒரு சுகம்...' - பிந்து மாதவியை அழைக்கும்போது, அவர் லேட்டாகவே போனை எடுக்கலாம் என்னும் அளவிற்கு ஈர்க்கிறது காலர் டியூன். "ஜோஷ்வா ஸ்ரீதர் இசையமைத்த இந்த 'வெப்பம்' படப் பாட்டு ரொம்பப் பிடிக்கும். 'என் வானில் மேகங்கள் சொல்லாமல் தூறுதே... என் காதல் வானிலை சந்தோஷம் தூவுதே' என்ற வரிகள் வெரி நைஸ்" என சிலிர்க்கிறார் பிந்து.

Radjaramane@TTT



## டி.இமான்

**இ**வருக்கு ரிங்கினால், 'என்ன சொல்ல... ஏது சொல்ல...' என 'மனம் கொத்தி பறவை' படப் பாடல் மனம் கொத்துகிறது. "என் இசையமைப்பில் உருவான இந்தப் பாடல், என் மனைவி மோனிகாவின் மனதைத் தொட்டது. தினம் பத்து முறையாவது கேட்டு விடுவார். எனது முதல் ரசிகையும் விமர்சகரும் மனைவிதான். அதனால் இது எனது ஃபேவரிட்" என்கிறார் இமான்.

## ஸ்ரீகாந்த்



"**ந**ட்பும் நண்பர்களும்தான் எனக்கு உயிர். எப்போதும் கூடவே இருப்பவர்கள் நண்பர்கள்தான். எனக்கேத்த மாதிரி 'நண்பன்' பட வாய்ப்பு கிடைச்சது. அதில் வரும் 'என் பிரண்ட போல யாரு மச்சான்...' பாட்டுதான் என் காலர் டியூன்" என்கிறார் ஸ்ரீகாந்த்.



## அப்புக்குட்டி

**க**தைநாயகனாக அறிமுகமான முதல் படத்திலேயே இளையராஜாவின் இசையில் அவரது குரலுக்கு நடித்தது என இரட்டிப்பு போனஸாக வாய்த்த 'அழகர்சாமியின் குதிரை' படத்தின் 'குதிக்கிற குதிக்கிற குதிரை குட்டி...' பாடலை வைத்திருக்கிறார் அப்புக்குட்டி. "ஊர்ல இருக்கும்போது ரேடியோ பெட்டி வழியா இனிப்பைக் கொடுத்த இசைஞானியோட பாட்டுக்கு நடிக்கற அற்புத வாய்ப்பு தந்த பாட்டு. காலாகாலத்துக்கும் இதை காலர் டியூனா வச்சிருப்பேன்" என நெகிழ்கிறார் அப்புக்குட்டி.

## சாந்தனு



'**க**ண்டேன்' படத்தில் விஜய் எபினேசர் மெட்டமைத்த, 'உன்னைக் கண்டேனே... என்னைக் கண்டேனே...' பாடல் சாந்தனுவின் காலர் டியூனை நிரப்புகிறது. அறுபதை தாண்டியவர்களும் சாந்தனுக்கு போனை போடும்போது, லேசாக தலையாட்ட வைப்பதுபோல இருக்கிறது அவரது சாய்ஸ்.



## சேரன்

"**செ**ல்போன் பயன்படுத்த ஆரம்பிச்ச காலத்திலிருந்தே நான் காலர் டியூன் வச்சிக்கிறதில்ல" என்கிறார் சேரன். "அதுக்குக் காரணமும் இருக்கு. யாராவது ஒரு துக்கமான செய்தியைச் சொல்ல வரும்போது 'அப்படிப் போடு போடு'ன்னு பாட்டு வந்தா எப்படி இருக்கும்? சந்தோஷமான செய்தி சொல்லும்போது 'போகுதே... போகுதே...' பாட்டு வந்தா மனநிலை எப்படி இருக்கும்? இந்த முரண்பாட்டு சிக்கலுக்காகவே நான் எந்தப் பாட்டையும் வச்சிக்கிறதில்ல."

**- அமலன்**

Radjaramane@TTT



''படத்துல நிறைய மெசேஜ் இருக்குன்னு எப்படிச் சொல்றே..?''

''ஹீரோவும் ஹீரோயினும் ஆளுக்கு ரெண்டு செல்போன் வச்சிக்கிட்டு, அப்பப்ப பார்த்துக் கிட்டே இருக்காங்களே..!''

*- பா.ஜெயக்குமார், வந்தவாசி.*



www.kungumam.co.in

Radjaramane@TTT

''டாஸ்மாக் கடைகளை கூடுதல் நேரம் திறந்து வைக்க வேண்டும்னு தலைவர் சொல்றாரே... இது அவரோட தனிப்பட்ட கருத்தா?''

''ம்ஹூம்... தண்ணி போட்ட கருத்து!''

- அதிரை புகாரி, அதிராம்பட்டினம்.



## தத்துவம் மச்சி தத்துவம்

எத்தனை பேரோட ஃப்ரண்ட்ஷிப் வச்சிருந்தாலும், அதை 'நட்பு வட்டம்'னுதான் சொல்ல முடியும். நட்பு சதுரம், நட்பு முக்கோணம்னு சொல்ல முடியாது.

- ஜாமெட்ரி பாக்ஸ் இல்லாமலேயே வட்டம், சதுரம் போடுவோர் சங்கம்

- *ஜி.சுந்தரராஜன், திருத்தங்கல்.*

கருங்கல் வாங்கி வீடு கட்டலாம்; செங்கல் வாங்கி வீடு கட்டலாம்; சிக்கல் வாங்கி வீடு கட்ட முடியுமா?

- சொந்த வீடு கட்டி தலையில் துண்டு போட்டவர்கள் சங்கம்

- *அனார்கலி, தஞ்சாவூர்.*

கடன் அன்பை முறிக்கும்னு பெட்டிக் கடையில் எழுதிப் போடலாம்; ஆனா, பேங்க்ல எழுதிப் போட முடியுமா?

- ஏ.டி.எம். வாசலில் லைனில் நின்று யோசிப்போர் சங்கம்

- *ஜோ.ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.*



''தலைவர் ஏன் செல்லமா வளர்த்த நாயை அடிச்சு விரட்டுறார்..?''

''ரெய்டுக்கு வந்த சி.பி.ஐ. அதிகாரியைப் பார்த்து வாலாட்டினதாம்..!''

- அ.ரியாஸ், சேலம்.

Radjaramane@TTT



Radjaramane@TTT

# நதி போல ஓடிக் கொண்டிரு!



புன்னகை அரசி! எத்தனை நிஜமானது இந்தப் பட்டம். வயதின் கோடுகளைத் தாண்டி கே.ஆர்.விஜயாவின் முகத்தில் தவழ்கிறது இளமை மாறாத புன்னகை. நடிகர் திலகம், மக்கள் திலகம் தொடங்கி, இன்றைய தலைமுறையோடும் நடித்துக்கொண்டிருக்கும் இந்தப் புன்னகை அரசியின் சினிமா வரலாறு சிறப்புக்குரியது. இவர் கதாநாயகியாக அறிமுகமான 'கற்பகம்' படம் வெளிவந்து 50 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதனையொட்டி இந்த அரை செஞ்சுரி நாயகியை சந்தித்தோம்...

Radjaramane@TTT

‘‘**நா**ன் பழசை நினைச்சுக்கிட்டே காலம் கழிக்கிற கேரக்டர் இல்லை. குளம் மாதிரி ஒரே இடத்துல தேங்கிக் கிடக்குறது பிடிக்காது, நீரோட்டம் போல ஓடிக்கிட்டே இருக்கணும். இப்ப கூட தி.நகர் வீட்டுல இருந்து இந்த வீட்டுக்கு (போயஸ் கார்டன்) மாறினதுக்குக் காரணமே ஒரு சேஞ்ச் வேணும்னுதான்’’ என்று யூத்ஃபுல்லாக வரவேற்றவர் நமக்காக கொஞ்சம் ஃப்ளாஷ்பேக் போனார்.

‘‘வசதியான குடும்பத்துல பிறந்தவதான் நான். என்னோட சேர்த்து வீட்ல நாலு பொண்ணுங்க. எல்லாரும் நல்லா படிச்சவங்க. நான் மட்டும்தான் படிக்கல. சின்ன வயசிலேயே டிராமால நடிக்க ஆரம்பிச்சுட்டேன். திருச்சியில டிராமா போட ஆரம்பிச்சா, அப்படியே மதுரை, கோயம்புத்தூர்னு சுத்திட்டு சென்னைக்கு வந்து சேர்வோம். மூணு ஷோ நடிச்சா, பத்து ரூபா சம்பளம். அப்போ ஒரு சவரன் பவுனே 50 ரூபாதான். அதனால இந்த பத்து ரூபாய் சம்பளம் பெரிசா தெரியும். நாடகங்களில் நடிச்சுக்கிட்டிருக்கும்போது ஒரு சாக்லெட் விளம்பரத்துல நடிச்சேன். அந்த விளம்பரத்தைப் பார்த்துதான் எனக்கு சினிமா வாய்ப்பு வந்தது.

முதல் படத்துலயே ஜெமினி, சாவித்திரி, எம்.ஆர்.ராதா, முத்துராமன்னு பெரிய பெரிய நடிகர்களோட நடிக்கிற வாய்ப்பு. எம்.ஜி.ஆர், சிவாஜின்னு ஜாம்பவான்களோடவும் நடிச்சிட்டேன். ரசிகர்களிடமிருந்து பட்டத்தையும், பாராட்டையும் வாங்கியிருக்கேன். நினைச்சிப் பார்த்தா சந்தோஷமாதான் இருக்கு. அதே சமயம் நான் பெருசா சாதிச்சிட்டதாவும் நினைக்கல. இந்த உலகத்தில உள்ள அத்தனை பேருமே கற்றது கை மண் அளவுதான்!’’ - தத்துவமும் பழுத்த அனுபவத்தின் பக்குவமும், கே.ஆர்.வியின் பேச்சில் மணக்கிறது.

> **ஆசைக்காகவோ, புகழுக்காகவோ, பணத்துக்காகவோ மட்டும் நடிக்காம, ஆத்மார்த்தமா உள்வாங்கி நடிச்சா என்னை மாதிரியே 50 வருஷ சினிமா வாழ்க்கையைக் கொண்டாடலாம்!**

‘‘இன்னிக்கு ஒரு நடிகைக்கு கல்யாணம் ஆயிட்டா, அதுக்கப்புறம் அம்மா, அக்கா கேரக்டர்கள்லதான் நடிக்க முடியும்னு சொல்றாங்க! ஆனா, என்னோட முதல் படம் ‘கற்பகம்’ ரிலீஸான ரெண்டே வருஷங்கள்ல எனக்குக் கல்யாணம் ஆயிடுச்சு. அதுக்கு அப்புறம் நான் ஹீரோயினா மட்டும் 300 படங்கள்ல நடிச்சேன். கதாபாத்திரம் அர்த்தமுள்ளதா இருந்தா மட்டும்தான் யாரா இருந்தாலும் நிற்க முடியும்... நீடிக்க முடியும்.

எனக்கு ‘கற்பகம்’, ‘இதயக்

www.kungumam.co.in

Radjaramane@TTT



கமலம்', 'தீர்க்க சுமங்கலி', 'தங்கப்பதக்கம்', 'திரிசூலம்'னு நிறைய படங்கள் அப்படி அமைஞ்சுது. 'உங்கள மாதிரி ஒரு மருமகள் வேணும்'... 'உங்கள மாதிரி மாமியார் அமையணும்'... 'உங்கள மாதிரி அம்மா வேணும்'னு ஒவ்வொரு காலகட்டத்துலயும் ரசிகர்கள் என் கிட்ட பேசறதைக் கேட்கிற பாக்கியம் அமைஞ்சது. இது தாங்க ஒரு நடிகைக்கு வேணும். ரசிகர்கள் தன் வீட்டுப் பொண்ணா நம்மளைப் பார்க்கணும். அப்படிப் பார்த்துட்டா எல்லா வயசுலயும் ஹீரோயினா நடிக்கலாம். அடிப்படையில நாமளும் குடும்பப் பெண்தானே!'' என்கிற கே.ஆர்.விஜயா, தன் கணவர், ஒரே மகள் ஹேமா,

Radjaramane@TTT

மற்றும் இரண்டு பேரன்களோடு இந்த சம்மர் முழுக்க செம்ம பிஸி.

''இப்போ சினிமால எத்தனையோ பேர் வர்றாங்க... போறாங்க... ஆனா, தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை எம்.ஜி.ஆரும் சிவாஜியும் மகா மேதைகள். சிவாஜி சார் மாதிரி நேரத்தைக் கடைப்பிடிக்க இன்னொருத்தர் பிறந்துதான் வரணும். நம்ம மனசுக்குள்ள என்னதான் கவலை இருந்தாலும் அதை ரசிகர்கள்கிட்ட காட்டிடக் கூடாதுன்னு ரொம்ப கவனமா இருக்குறவர் எம்.ஜி.ஆர். ஒரு மண்டபத்துல முன்னாடி இருந்த ரெண்டு பெரிய தூண்கள் விழுந்துட்டா அந்த மண்டபம் எப்படி இருக்குமோ, அப்படித்தான் அவங்களை இழந்த தமிழ் சினிமாவும் இருக்கு!

இன்னைக்கு சினிமால நிறைய பேர் தொழில்நுட்பத்தை நம்பித்தான் இருக்காங்க. இப்பவும் என்னை நடிக்கக் கேட்டு நிறைய இயக்குனர்கள் வர்றாங்க. ஆனா, அவங்க சொல்ற கதைகள்ல ஜீவன் இருக்குறதில்ல. அதனால்தான் நடிக்க ஒப்புக்கறதில்ல. சமீபத்துல 'ஸ்ரீராமராஜ்ஜியம்' தெலுங்கு படத்துல நடிச்சேன். ராமரோட தாய் கௌசல்யா வேஷம். மனசுக்குப் பிடிச்சிருந்ததால நடிச்சேன். இப்பல்லாம் நல்ல படம்னு கேள்விப்பட்டா மட்டும்தான் பார்க்கறேன். அதனால புதுசா வந்திருக்குற நடிகைகள் பத்தி எனக்கு அவ்வளவா தெரியல. யாரா இருந்தாலும் ஆசைக்காகவோ, புகழுக்காகவோ, பணத்துக்காகவோ மட்டும் நடிக்காம, ஆத்மார்த்தமா உள்வாங்கி நடிச்சா என்னை மாதிரியே 50 வருஷ சினிமா வாழ்க்கையைக் கொண்டாடலாம்'' என்றவரிடம், ''சினேகாங்கற புன்னகை இளவரசிக்குக் கல்யாணம்... தெரியுமா?'' என்றோம்.

''ம்ம்... தெரியும். அந்தப் பட்டத்துக்கு நிச்சயம் அவங்க தகுதியானவங்கதான். நான் அந்தப் பொண்ணை வாழ்த்துறேன்!''

*- அதே கற்பகப் புன்னகை மாறாமல் விடை தருகிறார் விஜயா.*

**- அமலன்**

படங்கள்: புதூர் சரவணன்



www.kungumam.co.in

Radjaramane@TTT



# சூப்பர் டேஸ்ட்

● துடுப்பதி ரகுநாதன்

கோபிசெட்டிப்பாளையம் அருகே கொடிவேரியில் வெளிப்புறப் படப்பிடிப்பு. இடைவேளையில் நட்சத்திரப் பட்டாளங்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர்.

காமெடி நடிகர் பெருமையாகச் சொன்னார்... "நம்ம பவர்ஃபுல் ஸ்டார் வீட்டிலேயிருந்து வரும் மீல்ஸ் கேரியரில் இருக்கும் இறால் வறுவல் மாதிரி நான் எந்த ஸ்டார் ஹோட்டல்லயும் சாப்பிட்டதில்லை!"

"அவங்க வீட்டிலிருந்து வரும் நண்டு ரோஸ்ட் சாப்பிட்டிருக்கீங்களா..? நான் போன வெளிநாடுகள்ல கூட அவ்வளவு ருசியா சாப்பிட்டதில்ல" என்றாள் கதாநாயகி. இது பவர்ஃபுல் ஸ்டாரோடு அவளுடைய மூன்றாவது படம்.

"அட போங்கப்பா! தலைவர் வீட்டு வஞ்சிரம் மீன் வறுவலை நினைச்சா, இப்பவே நாக்குல எச்சில் ஊறுது..." என்றார் வில்லன் நடிகர்.

நிருபர் நாகராஜகுமார், அந்தப் படத்தில் துணை நடிகர் வேடத்தில் நடிக்கும் தன் கல்லூரி நண்பனை தனியாகக் கூட்டிக் கொண்டு போய் அந்த ரெசிபிகளைப் பற்றிக் கேட்டான்.

"அட, நீ வேற! அந்த ஸ்டார் சம்சாரத்துக்கு தான் பெரிய சூப்பர் செஃப்னு நெனைப்பு. செட்ல அவங்க சமையலைப் பற்றி யார் யார் என்ன பேசறாங்கன்னு, அவங்க டிரைவர் மூலம் கேட்டுத் தெரிஞ்சுக்குவாங்க! அவங்க சமையலைப் பாராட்டறவங்களைத்தான் அடுத்த படத்துக்கு அந்தம்மா சிபாரிசு செய்வாங்க. அதுக்காகத்தான் எல்லாரும் கூசாம பொய் சொல்றாங்க..." என்றான் அவன். ●

Radjaramane@TTT

# குரு பெயர்ச்சி

தன் கையே தனக்கு உதவிங்கறதுல அசையாத தன்னம்பிக்கை கொண்டவர் நீங்க. 17.5.2012 முதல் 28.5.2013 வரை பத்தாவது வீட்ல நின்னு குரு பகவான் உங்களுக்கு பலன் தரப் போகிறாருங்க.

குருவின் பார்வை சாதகமா இருக்கறதால பேச்சுல தெளிவு பிறக்கும். பணப்பற்றாக்குறை விலகிடும். சேமிக்கும் அளவுக்கு பணம் வருமுங்க. கொடுக்கல் வாங்கல் திருப்தியாவே இருக்கும். உங்களைச் சுற்றியிருக்கறவங்கள்ல யார் நல்லவர் என்பதை உணர்வீங்க. தாய் வழி உறவுகளால ஆதாயம் உண்டுங்க. பழைய கடன்ல ஒரு பகுதியை தீர்க்க ஐடியா கிடைக்குமுங்க. உங்க பெயரையும் புகழையும் சிலர் கெடுக்க முயற்சி செய்வாங்க. தூக்கம் குறையும். பொதுவா பிரச்னை உங்களுக்கு அவ்வளவா வராதுங்க. பிள்ளைகளோட பொறுப்பில்லாத்தனத்தை நினைச்சு வருத்தப்படுவீங்க. அவங்களோட உயர்கல்விக்காக அதிகம் போராட வேண்டியிருக்கும். கல்யாணமும் இழுபறியாகித்தாங்க முடியும். யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்து போடாதீங்க. அரசியல்வாதிகளுக்கு சின்னச்சின்ன குழப்பங்கள், டென்ஷன்னு வந்து போகுமுங்க.

10.10.2012 முதல் 5.2.2013 வரை ரோகிணி நட்சத்திரத்திலேயே குரு வக்கிரமடையறதால அரைகுறையாக நின்ற வேலைகள் மளமளன்னு முடியுமுங்க. ஓரளவு பணவரவு உண்டு. வியாபாரத்துல அவசர முதலீடுகள் எதுவும் செய்யாதீங்க. சந்தை நிலவரங்களை சரியா புரிஞ்சுக்கிட்டு சரக்குகளை கொள்முதல் செய்ங்க. 10ல் குரு அமர்வதால உத்யோகத்துல வேலைச்சுமை அதிகரிச்சுக்கிட்டே போகுமுங்க. உயர் அதிகாரிகள் உங்களைப் புரிஞ்சுக்க மாட்டாங்க. சக ஊழியர் அடிக்கடி விடுப்பில் போறதால அந்த வேலையையும் நீங்கதான் பார்க்க வேண்டி வரும். கன்னிப்பெண்கள் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கிடாதீங்க. நொறுக்குத் தீனியை குறைச்சுக்கோங்க. மாணவர்கள் அனாவசிய அரட்டையில நேரத்தை வீணடிக்காம படிப்பிலே அக்கறை காட்டுங்க. கலைஞர்கள் போராட்டங்களைக் கடந்து ஈஸியா முன்னேறுவீங்க.



சிம்மம்

இந்த குருப் பெயர்ச்சி புது அனுபவங்களைத் தருவதாகவும், வாழ்க்கையில முன்னேற தெளிவு களிவு தேவைங்கறதை உணர்த்துவதாகவும் அமையுமுங்க.

**பரிகாரம்: அரக்கோணம் அருகே தக்கோலத்துல அருள்பாலிக்கும் குரு பகவானை மூன்றாம் பிறை நாளில் வணங்குங்க; திருநங்கைக்கு உதவுங்க. சுமைகளே சுகமாக மாறும்.**

Radjaramane@TTT

# பலன்கள்



ஜோதிட ரத்னா
கே.பி.வித்யாதரன்

வாழ்க்கையை ரசித்து வாழறவங்க நீங்க. 17.5.2012 முதல் 28.5.2013 வரை உங்க ராசிக்கு பாக்கிய வீடான 9ம் வீட்ல குரு பகவான் அமர்வதால, இதுவரை ஒதுங்கி இருந்த நீங்க இனி உற்சாகம் அடைவீங்க.

பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்று சேர்வீங்க. சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் கோபப்பட்டீங்களே... இனி சாந்தமாகப் பேசி இனிமையாக சாதிப்பீங்க. விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீங்க. பழைய பொருட்கள், சமையலறை சாதனங்களை மாற்றுவீங்க. டிவி, ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின் வாங்குவீங்க. குழந்தை பாக்கியம் இல்லாம ஏங்கிக்கிட்டு இருந்தவங்களுக்கு அந்த பாக்கியம் கிட்டும். வேலை கிடைக்கும். தந்தையின் உடல்நிலை சீராகிடுமுங்க. பணப்புழக்கம் அதிகரிக்கும். வருங்காலத்தை மனதில் கொண்டு சேமிக்கத் தொடங்குவீங்க. குடும்பத்தாரோடு பற்று, பாசமில்லாமல் ஒதுங்கியிருந்தீங்களே... இனி கலகலப்பான சூழல் ஏற்படுமுங்க. வட்டிக்கு வாங்கிய கடனை கொஞ்சம் கொஞ்சமா தந்து முடிப்பீங்க. வாகன வசதி பெருகும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றிடுவீங்க. அரசியல்வாதிகள் வீணாக விமர்சனம் பண்ணி சிக்கல்ல மாட்டிக்காதீங்க.



கன்னி

10.10.2012 முதல் 5.02.2013 வரை ரோகிணி நட்சத்திரத்திலேயே குரு வக்கிரம் அடைவதால அஸ்தம் நட்சத்திரக்காரர்களுக்கு சளித் தொந்தரவு, தொண்டை வலி, சிறு விபத்துகள்னு ஏற்படுமுங்க. செலவுகள் கட்டுக்கடங்காம போகுமுங்க. வியாபாரத்துல வாடிக்கையாளர்கள் அதிகமாவாங்க. பழுதாகியிருந்த கடையை அழகாக்குவீங்க. நவீன வசதிகளைப் புகுத்தி வாடிக்கையாளர்களைக் கவர்வீங்க. உத்யோகத்துல உங்க திறமையை மேலதிகாரி அங்கீகரிப்பாருங்க. கன்னிப்பெண்களுக்கு காதல் குழப்பம் நீங்கும். தடைபட்டு வந்த கல்யாணம் கூடி வரும். மாணவர்களுக்கு எதிர்பார்த்த கல்வி நிறுவனத்துலயே இடம் கிடைக்கும். கலைஞர்களுக்கு பழைய நிறுவனங்கள்லேர்ந்து புதிய வாய்ப்புகள் வருமுங்க.

இந்த குருப் பெயர்ச்சி வாழ்வில் வசந்தத்தை வாரி வழங்குவதுடன், நீண்டகால ஆசைகளையும் நிறைவேற்றித் தருமுங்க.

**பரிகாரம்: செங்கல்பட்டு அருகே, திருமலைவையாவூர்ல அருள்பாலிக்கும் பிரசன்ன வெங்கடேசப் பெருமாளை ஏகாதசி திதியில் வணங்குங்க. அகதிகளுக்கு உதவுங்க; பிரபலமாவீங்க.**

aRadjaramane@TTTn

தர்மம் நியாயத்துக்குத் துணையா நிற்கறவங்க நீங்க. 17.5.2012 முதல் 28.5.2013 வரை உங்க ராசிக்கு எட்டாவது வீட்ல போய், குரு பகவான் மறைகிறாருங்க. அதனால இனி ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீங்க.

உங்களைச் சுற்றியிருக்கறவங்களோட சுயரூபத்தைத் தெரிஞ்சுப்பீங்க. கோபம் குறையுமுங்க. கணவன் - மனைவிக்குள்ள ஏற்பட்டிருந்த சண்டை, சுமுகமாகத் தீருமுங்க; ஒருவரை ஒருவர் புரிஞ்சுப்பீங்க. நட்பு வேறு, பணம் வேறுங்கறதை அனுபவபூர்வமா உணர்வீங்க. சேமிக்கணும்ங்கற எண்ணம் வருமுங்க. உறவுக்காரங்க மதிப்பாங்க. நண்பர்கள் சில பேர் உங்ககிட்ட ஆலோசனை கேட்டு வருவாங்க. குடும்பத்துல மகிழ்ச்சி நிலவுமுங்க. மனைவிவழி உறவுக்காரங்களோட இருந்த சங்கடங்கள் தீர்ந்து, நல்லது நடக்குமுங்க. வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவீங்க. உடல் சோர்வு, வீண் அலைச்சல், டென்ஷன் எல்லாம் விலகிடும். தாயாருடன் இருந்த மன வருத்தங்கள் நீங்கிடுமுங்க. பழைய வாகனத்தை மாற்றுவீங்க. சிலர் வீடு மாறுவீங்க. புகழ்பெற்ற புண்ணியதலங்கள் போய் வருவீங்க. அரசியல்வாதிகள் பரபரப்பாக இயங்குவீங்க.



## துலாம்

10.10.2012 முதல் 5.2.2013 வரை ரோகிணி நட்சத்திரத்துல குரு வக்கிரமடைவதால உடல்நலத்துல அக்கறை காட்டுங்க. யாரையும் நம்பி பெரிய முடிவு எதையும் எடுக்காதீங்க. யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போடாதீங்க. வியாபாரத்துல பற்று - வரவு உயரும். கடையை வேறிடத்திற்கு மாற்றுவீங்க. புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்யோகத்துல உங்க திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்குமுங்க. மேலதிகாரிக்கு நெருக்கமாவீங்க. புது சலுகைகள் கிடைக்கும். கன்னிப்பெண்களுக்கு காதல் கசக்கும். எதிர்பார்த்த நிறுவனத்துல வேலை கிடைக்கும். மாணவர்கள் அதிகாலையில் எழுந்து படிக்கற வழக்கத்தை உருவாக்கிக்கோங்க. விளையாட்டிலும் வெற்றி பெறுவீங்க. கலைஞர்கள் கொஞ்சம் முயற்சி செய்தால் வெற்றி பெற்றிடுவீங்க.

இந்த குருப்பெயர்ச்சி, திட்டமிடுதலாலும் யதார்த்தமான முடிவுகளாலும் முன்னேற்றத்தையும், வசதி வாய்ப்புகளையும் தருவதாக அமையுமுங்க.

**பரிகாரம்: காஞ்சிபுரம் ஏகாம்பரநாதேஸ்வரரையும், அங்கு அருள்தரும் தட்சிணாமூர்த்தியையும் நெய் விளக்கேற்றி வணங்குங்க. கால் ஊனமுற்றோருக்கு உதவுங்க; நிமிர்ந்து நிற்பீங்க.**

www.kungumam.co.in

Radjaramane@TTTm

செய்நன்றி மறவாதவர் நீங்க. 17.5.2012 முதல் 28.5.2013 வரை உங்க ராசிக்கு ஏழாம் வீட்டுல குரு பகவான் நீடிக்கறதால வசதிகள் பெருகும்; வருமானமும் உயருமுங்க.

சண்டை சச்சரவால களை இழந்து போயிருந்த வீட்டுல இனி கலகலப்பான சூழ்நிலை உருவாகுமுங்க. நினைத்தபடி திருமணம் முடியுமுங்க. எந்த வேலையிலும் நீடிக்க முடியாமல் தவிச்சீங்களே, இனி அதிக சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்குமுங்க. உங்களை விட்டுப் பிரிந்து போன பிள்ளைங்க திரும்பி வருவாங்க. குடும்பத்துல உங்க மதிப்பு கூடுமுங்க. பிரிஞ்சிருக்கற கணவன்-மனைவி மறுபடி இணைவீங்க. அழகான வாரிசு உருவாகும். வெளிமாநில புண்ணியதலங்களுக்குப் போய் வருவீங்க. சொந்த ஊர்ல மதிக்கப்படுவீங்க. மூத்த சகோதரரால ஆதாயம் உண்டுங்க. இளைய சகோதரர்களோட இருந்த மனத்தாங்கல் நீங்கிடுமுங்க. விலையுயர்ந்த தங்க ஆபரணம் வாங்குவீங்க. அரசியல்வாதிகள் தலைமைக்கு நெருக்கமாவீங்க.

10.10.2012 முதல் 5.02.2013 வரை ரோகிணி நட்சத்திரத்துல குரு வக்கிரமடைவதால பயணங்கள் அதிகரிக்கும்; செலவுகளும் கூடிக் கொண்டே போகும். உடல்நலம் பாதிக்கும். வியாபாரத்துல முடங்கிக் கிடந்த நீங்க, புத்துயிர் பெறுவீங்க. வியாபாரத்தை விரிவுபடுத்த வங்கிக் கடனுதவி கிடைக்குமுங்க. படித்த, அனுபவமுள்ள வேலையாட்களை கூடுதலாக நியமிப்பீங்க. உத்யோகத்துல மேலதிகாரியின் சொந்த விஷயங்கள்ல தலையிடும் அளவுக்கு நெருக்கமாவீங்க. எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும்.

கன்னிப்பெண்களுக்கு தள்ளிப் போன கல்யாணம் இனி கோலாகலமாக முடியும். பெற்றோர் உங்க உணர்வுகளை புரிஞ்சுப்பாங்க.



விருச்சிகம்

மாணவர்களுக்கு நினைவாற்றல் பெருகும். தேர்வில் அதிக மதிப்பெண் கிட்டும். கலைஞர்களின் மறைந்து கிடந்த திறமைகள் வெளிச்சத்துக்கு வருமுங்க.

இந்த குருப் பெயர்ச்சி அதலபாதாளத்துல கிடந்த உங்களை உச்சிக்கு கொண்டு வருவதோடு, எதிலும் நிம்மதியையும், வெற்றியையும் ஏற்படுத்தித் தருமுங்க.

பரிகாரம்: **திருவாரூர் அருகே திருக்கொள்ளிக்காட்டில் அருள் புரியும் அக்னீஸ்வரரையும், குரு பகவானையும் வணங்குங்க; ஏழை புற்று நோயாளிகளுக்கு உதவுங்க; அள்ளிக் கொடுப்பான் ஆண்டவன்.**

**(பிற ராசிகள் -அடுத்த இதழில்...)**

Radjaramane@TTTm

# கவிதைக்காரர்கள் வீதி

## செத்தாலும் மேன்மக்கள்

'வெத்தலைக்கு ரெண்டு ரூவா...'
'பாக்கு இருந்தா தாரீயளா...'
'சுண்ணாம்புக்குத் தண்ணியிருக்கா
கெட்டிச்சுப் போச்சு...'
இப்படி
ஆயிரம் காரணங்களுடன்
எங்கள் வீட்டையே சுற்றிக்கொண்டிருந்தவள்
மணி ஆச்சி.

சில்லறை இல்லையெனச் சொல்லி,
பாக்கு டப்பாவை ஒளித்து வைத்து,
வாசலில் இருக்கும் வாளியில் எடுத்துக்கோ
என பின்வாசலிலிருந்து கத்தி,
ஆயிரம் வழிகளை
நாங்களும் வைத்திருந்தோம்
அவளை விலக்கி வைக்க

ஒரு நாள் இறந்துபோனவள்
கண்ணெல்லாம் நீருடன்
கனவில் வந்தாள்...

'பாக்காம இருக்க முடியலடா
பேராண்டி' என்றாள்
பாக்கு டப்பாவை எடுத்து நீட்டுகிறது
தூக்கத்தில் கைகள்.

**- லதாமகன்**



Radjaramane@TTTm



Radjaramane@TTTm

“ஒரு பிள்ளை மாற்றுத்திறனாளியா பிறந்துட்டா, உலகமே இருண்டு போனதா பெத்தவங்க நினைக்கிறாங்க. அதுவும் பெண் பிள்ளை யாயிட்டா, அவ்வளவுதான். வளர வளர... அவஸ்தையும் துயரமும் சேர்ந்தே வளரும். பிறப்பே ஒரு தண்டனை மாதிரி ஆயிடும். இந்த உலகம் எல்லாருக்கும் பொதுவானது. ஆனா சமூகம் அந்தப் பிள்ளைகளை தனிமைப்படுத்தி ஒதுக்கி வச்சுடுது. தமிழகம் முழுவதும் அந்தமாதிரி புறக்கணிக்கப்படுற குழந்தைக ளைத் தேடிப் புடிச்சு அவங்களுக்கு சுயசார்பான வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்கிறதுதான் என் கனவு...”

- வார்த்தைகளுக்கு வலிக்காமல் மென்மையாகப் பேசுகிறார் அமுதசாந்தி. பெயருக்கேற்ப அமுதசாந்தியின் முகத்தில் கனிவும், கருணையும், அமைதியும் தவழ்கிறது. மதுரை வட்டாரத்தில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாற்றுத்திற னாளி பெண்களின் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளியை ஏற்றி வைத்திருக்கிறார். 245 இயலாப்பெண்களை தொழில்முனைவோராக்கி அழகு பார்க்கிறார். தேடித் தேடிக் கண்டுபிடித்து, தொழிற்பயிற்சிகள் கொடுத்து, சுயசார்பு வாழ்க்கையை உருவாக்கிக் கொடுக்கும் அமுதசாந்தியும் ஒரு மாற்றுத்திறனாளி.

www.kungumam.co.in

மதுரை, எஸ்.எஸ்.காலனியில் ஒரு அடித்தட்டுக் குடும்பத்தில் பிறந்தவர் அமுதசாந்தி. அப்பா சுருளி ஜவுளிக்கடை குமாஸ்தா. அம்மா, ஜெயமணி. 3 உடன் பிறப்புகள்.

“யாரும் இயலாப்பிள்ளையா பிறக்கணும்னு வரம் வாங்கிட்டு பிறக்கிறதில்லை. பல தருணங் கள்ல பெத்தவங்க செய்யற தவறு களே குழந்தைகளை பாதிச்சுடுது. என் அப்பாவும், அம்மாவும் நெருங் கிய உறவுக்காரங்க. போதாததுக்கு, நான் வயித்துல இருந்தப்போ

# ரோல்

● வெ.நீலகண்டன்

aRadjaramane@TTTn



Radjaramane@TTT

அம்மாவுக்கு கால்ல சின்னதா ஒரு ஆபரேஷன் செஞ்சிருக்காங்க. அதுக்கு கொடுத்த மருந்துகளும் என்னை பாதிச்சுருச்சு. இடது கையில மணிக்கட்டுக்குக் கீழே வளர்ச்சியில்லை.

அப்பாவுக்கு சொற்ப வருமானம். ‘பசியும், பட்டினியுமான வாழ்க்கையில இந்தக் கையில்லாத குழந்தையை வச்சுக்கிட்டு என்ன பண்ணப்போறே’ன்னு உறவுக்காரங்க திட்டினபோதும், அம்மா என்னை விட்டுக்கொடுக்கல. ‘அவ என் புள்ளை, நான் பாத்துக்கறேன்’னு சொல்லிட்டாங்க. அந்த வகையில நான் அதிர்ஷ்டக்காரி.



அம்மா வெளியுலகம் தெரியாத கிராமத்து மனுஷியா இருந்தாலும், எந்த சூழ்நிலையிலயும் மனசு வலிக்கிற மாதிரி பேசமாட்டாங்க. பள்ளிக்கூடம் போனேன். வீட்டில கிடைச்ச அரவணைப்பு சமூகத்தில கிடைக்கலே. சக மாணவர்கள் மட்டுமில்லாம, ஆசிரியர்களும் வித்தியாசமா பாத்தாங்க; ஒதுக்கினாங்க. எனக்கு தாழ்வு மனப்பான்மை வந்திருச்சு. இயலாமையை நினைச்சு அழுவேன். மத்த பிள்ளைங்க மாதிரி எழுத முடியாது; சாப்பிட முடியாது; விளையாட முடியாது. கூனிக்குறுகி நிப்பேன். ஒரு கட்டத்துல என்மேலயே எனக்கு கோபம் வந்துச்சு. என் குறையை சமூகத்தோட பார்வையில இருந்து மறைக்கத் தொடங்குனேன்.

அம்மாவும், அக்காவும் என் மனக்காயங்களுக்கு மருந்தா இருந்தாங்க. என்னால வளையல் போட முடியாதுங்கிறதால அவங்களும் போட்டுக்க மாட்டாங்க. நானே சுயமா இயங்குற அளவுக்கு சின்னச் சின்ன வேலைகளைக் கத்துக் கொடுத்தாங்க. படிப்புதான் வாழ்க்கையை மாத்துங்கிற எண்ணத்தை ஆழமா பதிய வச்சாங்க. சிவசைலம் பகுதியில காந்தி கிராம பல்கலைக்கழகம் ‘அவ்வை இல்லம்’னு ஒரு பள்ளியை நடத்தினாங்க. என் கஷ்டங்களுக்கு அந்தப் பள்ளிதான் வடிகாலா இருந்துச்சு...” – அமுதசாந்தியின் வார்த்தைகளில் மெல்லிய சோகம்.

‘‘பழனியம்மாள்னு ஒரு வார்டன். அவங்க இல்லைன்னா இன்னைக்கு நாலு பேருக்கு வழிகாட்டுற தகுதியோட இருந்திருப்பேனான்னு தெரியலே. சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் வாய் நிறையப் பாராட்டுவாங்க. பேச்

@Radjaramane@TTTn

சுப் போட்டி, பாட்டுப் போட்டியில எல்லாம் என்னைக் கேட்காமலே என் பெயரைச் சேத்து ருவாங்க. 7ம் வகுப்பு படிக்கிறப்போ, பாரதி யாரைப் பத்தி ஒரு பேச்சுப் போட்டி. அதுல கலந்துக்கிட்டு, அப்போ முதல்வரா இருந்த எம்ஜிஆர் கையால முதல் பரிசு வாங்குனேன். அதுதான் என் மன நிலையை மாத்துச்சு. மத்தவங்களால முடியாததுகூட நம்மால முடியும்ங்கிற நம்பிக்கை வந்துச்சு. மத்த பிள்ளைகளோட பழகத் தொடங்குனேன். விளையாட்டுகள்லயும் இறங்குனேன். நாடகங்கள்ல நடிச்சேன். படிப்பிலயும் பெஸ்ட். பிளஸ் 2 முடிச்சுட்டு, அவ்வை இல்லத்தோட ஆதரவுலயே பி.காம். முடிச்சேன். மதுரை இறையியல் கல்லூரியில ரிசப்ஷனிஸ்ட் வேலை கிடைச்சுச்சு.




மாற்றுத்திறனாளிகளைப் பொறுத்தவரை, ஆண்களை விட பெண்களுக்குத்தான் அதிக நெருக்கடி. வாழ்க்கை முழுதும் யாரோட உதவியாவது தேவைப்படும். நல்ல பெற்றோர், அவ்வை இல்லம் மாதிரி நல்ல பள்ளி கிடைச்சதால என்னால சுயமா நிக்க முடிஞ்சுது. 'இந்த வாய்ப்பு எத்தனை பிள்ளைகளுக்குக் கிடைக்கும்..?' வேலைக்குச் சேர்ந்த பிறகு எனக்கு ஓரளவுக்கு வெளியுலகம் புரியத் தொடங்குச்சு. ஊனமுற்றோர் அமைப்புல சேந்தேன். ஞாயிற்றுக்கிழமைகள்ல மீட்டிங் நடக்கும். பெத்தவங்களால ஒதுக்கப்பட்ட, உறவுகளால புறக்கணிக்கப்பட்ட பெண்களோட கண்ணீர்க் கதைகளை அங்கேதான் கேட்டேன். நடக்க முடியாம, நகரக்கூட முடியாம பல பெண்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாங்க. அவங்களுக்கு ஆறுதல் சொல்ல முடிஞ்சதே தவிர, எந்த உதவியும் செய்ய முடியலே. அந்த சோகம் எனக்குள்ள மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துச்சு. இயலாப் பெண்களுக்காக ஒரு அமைப்பு தொடங்கி, அவங்களுக்கு சுயசார்பு வாழ்க்கையை அமைச்சுக்கொடுக்கணும்ங்கிற எண்ணம் அப்போதான் உருவாச்சு.

Radjaramane@TTT

வேலையை விட்டேன். 10 பெண்களைச் சேத்துக்கிட்டு 'தியாகம் பெண்கள் அறக்கட்டளை' ஆரம்பிச்சேன். 5 தையல் மெஷின் வாங்குனேன். இயலாப்பெண்களை அழைச்சுட்டு வந்து தையல் பயிற்சி கொடுத்தேன். மதுரையில உள்ள எக்ஸ்போர்ட் கம்பெனிகள்ல ஆர்டர் எடுத்து, பிள்ளைகளை வச்சு தச்சு சப்ளை செஞ்சேன். தங்களாலயும் சம்பாதிக்க முடியும்ங்கற நினைப்பு, அவங்களுக்குள்ள மிகப் பெரிய நம்பிக்கையை உருவாக்குச்சு. எங்க உழைப்பைப் பார்த்து சில நல்ல மனிதர்கள், கூடுதலா தையல் மெஷின்களை வாங்கித் தந்தாங்க. நிறைய பிள்ளைகளுக்கு வாய்ப்பு தர முடிஞ்சது.

அடுத்தது கம்ப்யூட்டர் பயிற்சி. மதுரையில உள்ள பெரிய வணிக நிறுவனங்கள், வங்கிகளுக்குப் போய், பயன்படுத்தின பழைய கம்ப்யூட்டர்களை கேட்டு வாங்கி பயிற்சியை ஆரம்பிச்சேன். மதுரையைச் சுத்தியுள்ள 150 கிராமங்கள்ல மாற்றுத்திறனாளிகள் பத்தி சர்வே செஞ்சோம். பல நூறு பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரமுடியாம தவிக்கிறது தெரிய வந்துச்சு. அவங்களுக்காக அந்த கிராமங்கள்லேயே 'தியாகம் நற்பண்புகள் கல்வி மையம்' தொடங்குனோம். அங்கே ஒரு பொறுப்பாளர் இருப்பார். இயலாப் பெண்களுக்கு கல்வி, ஆலோசனைகள் தருவார். அவங்களுக்குத் தகுந்த தொழில்களை கத்துக் கொடுப்பார். இதுதவிர, சாதாரண பிள்ளைகளும் அங்கே வந்து படிப்பாங்க. மாற்றுத் திறனாளிகள் பத்தின சரியான பார்வையை மத்தவங்களுக்கு உருவாக்குறதோட, மற்ற பிள்ளைகளோட சேர்ந்து படிக்கிறதால மாற்றுத்திறனாளிகளுக்கும் நம்பிக்கையும் அதிகரிக்குது..."

– தாய்மை ததும்பப் பேசுகிற அமுதசாந்தி, இயலாப்பெண்களை ஒருங்கிணைத்து சுய உதவிக்குழுக்களையும் அமைக்கிறார். ஒரு கலைக்குழுவையும் நடத்துகிறார். நைட்டிகள் தயாரிக்கும் ஒரு சிறிய நிறுவனத்தையும் இயக்குகிறார்.



**வெற்றிக்கான அமுதசாந்தி மொழி**

**இந்த உலகத்தில் ஊனமுற்றோர் என்று யாருமில்லை; ஊனம் இல்லாதோர் என்றும் யாருமில்லை. உடல் ஊனத்தை விட கொடுமையானது மன ஊனம்.**

படங்கள்: **ஜி.டி.மணி**

Radjaramane@TTT



# படம் எப்படி?

● அ.ரியாஸ்

போன வாரம் ரிலீசாகி பிரமாதமாக ஓடிக் கொண்டிருக்கும் 'மேகம்' படத்தை நாளை பார்த்தே ஆக வேண்டும். மனைவியும் குழந்தைகளும் ஆர்டர் போட்டு விட்டார்கள். எப்போதுமே ரிலீசான ஒரே வாரத்தில் படத்தை பார்த்தாக வேண்டும் என்று அடம் பிடிப்பார்கள் பிள்ளைகள். அதிலும் ஸ்கூலில் கோடை விடுமுறை விட்டபிறகு அவர்களின் அடம் அதிகமாகி விட்டது. வீட்டுக்குப் போனாலே சினிமா பற்றித்தான் பேச்சு.

ஆபீசில் வேலை ஓடவே இல்லை. நம்பி படத்தைப் பார்க்கலாமா... இல்லை, பணம் வீணாகிவிடுமா?

ஒரே குழப்பமாய் இருந்தது எனக்கு. படம் ரிலீசானதும் பார்த்து அதைப் பற்றின விமர்சனங்களை புட்டுப் புட்டு வைப்பவர் ஆயிற்றே கிளார்க் ரகுராம். அவரிடம் கேட்டேன்.

"சார்... 'மேகம்' பார்த்தாச்சா? படம் எப்படி... தேறுமா?"

"பாத்தாச்சுப்பா! படம் பிரமாதமா இருக்கு. வித்தியாசமா எடுத்திருக்காங்க. வன்முறை இல்லை, ஆபாச வாடை கிடையாது. டீசென்ட்டான படம். கண்டிப்பா குடும்பத்தோட பார்க்கலாம்..."

அவரே சொன்னபிறகு நம்பி செலவு செய்யலாம் என்ற தீர்மானித்தேன்.

ஆபீசிலிருந்து கிளம்பும்போது பைக்கை நேராக அந்த காம்ப்ளெக்ஸிற்கு விட்டேன். ஓரமாய் நிறுத்திவிட்டு படி ஏறினேன். பர்ஸில் இருந்து பணத்தை எடுத்தேன்.

"தம்பி... 'மேகம்' சி.டி ஒண்ணு குடு! ப்ரின்ட் நல்லாயிருக்கணும்..." என்றேன். ●

Radjaramane@TTTm

'நீங்கள் என்ன ஜாதி?'

– காலிங் பெல் சத்தம் கேட்டு கதவைத் திறந்ததும், வாசலில் நிற்கும் முகம் தெரியாத ஒருவர் திடீரென இப்படிக் கேட்டால் நீங்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்வீர்களா... சங்கடப்படு வீர்களா... கோபத்தில் கொந்தளிப்பீர்களா என்பது தெரியாது. ஆனால், கேள்வி நிச்சயம்! இதில் நல்ல விஷயம் என்னவென்றால், நீங்கள் என்ன பதில் சொன்னாலும் ஏற்றுக் கொள்வார்கள். 'நோ கமென்ட்ஸ்' சொன்னாலும் நோ பிராப்ளம்! மேற்படி கேள்வியுடன் புறப்பட்டிருப்பது சுதந்திர இந்தியாவின் முதல் ஜாதிவாரிக் கணக் கெடுப்பில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள்.



# ஜாதிகளைக் கணக்கெடுக்க

aRadjaramane@TTTn

'இது தேவையா... வேண்டாமா..?' என்று நாடு முழுதும் நிகழ்ந்த விவாதங்களுக்குப் பிறகு தயக்கத்துடனேயே இதற்கு ஓகே சொல்லியிருக்கிறது மத்திய அரசு. சில மாநிலங்களில் கணக்கெடுப்பு எப்போதோ துவங்கி, ஐம்பது சதவீதம் முடிந்துவிட்ட நிலையில் தமிழகத்தில் தற்போதுதான் ஆரம்பித்திருக்கிறது.

"1931ம் வருஷம் பிரிட்டிஷ்காரங்க ஆட்சியில இப்படியொரு கணக்கெடுப்பு நடந்திருக்கு. இந்தியாவுல இருக்கற ஜாதிகளோட எண்ணிக்கையைப் பார்த்து மலைச்சுப் போன பிரிட்டிஷ்காரங்க, என்ன காரணத்துக்காகவோ இந்தக் கணக்கெடுப்பை நடத்தியிருக்காங்க. ஆனா சுதந்திரத்துக்குப் பிறகு மக்கள் தொகையை மட்டும்தான் பத்து வருஷத்துக்கு ஒருமுறை கணக்கெடுத்துக்கிட்டு இருக்கோம். வறுமைக் கோட்டுக்குக் கீழ



# றாங்க!

Radjaramane@TTT



வாழுறவங்களைப் பத்தின புள்ளி விவரங்கள், மாநில அரசுகளால தனியா சேகரிக்கப்பட்டுச்சு. முதல்முறையா இப்பதான் சமூக, பொருளாதார விவரங்களோட ஜாதியையும் கேட்டு புள்ளி விவரம் சேகரிக்கப் போறாங்க. 2010ம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் புள்ளிவிவரங்களை சப்போர்ட்டுக்கு வச்சுக்கிட்டு, தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையோட மேற்பார்வையில நடக்குது இந்தக் கணக்கெடுப்பு" என்கிறார் தமிழ்நாடு மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறை இயக்குனர் எஸ்.கோபாலகிருஷ்ணன்.

"இந்தக் கணக்கெடுப்பு வெற்றிகரமா நடத்தி முடிக்கப்படும். ஆனால், முடிவுகள் வெளியிடப்படுமா என்பது சந்தேகம்தான்" என்கிறார்கள் ஊரக வளர்ச்சித் துறை வட்டாரத்தில். "தமிழக அரசோட உள்ளாட்சி அமைப்புகள்தான் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களை வச்சு இந்த வேலையைச் செய்யுது. ஆனா கணக்கெடுப்பு முடிஞ்சதும், மக்கள் தங்களைப் பத்தி தர்ற ஜாதி விவரங்கள் அனைத்தும் மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறைக்குத் தரப்படும். பிறகு இந்தப் புள்ளிவிவரங்கள் மத்திய அரசுக்குத்தான் சொந்தம். அதை வெளியிடறதும் வெளியிடாததும் அவங்க உரிமை" என்கிறார்கள் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள்.

'அப்படியென்றால் வெளியிடப்படாத இந்தக் கணக்கு எதற்காக?' - கோபாலகிருஷ்ணனிடமே கேட்டோம்.

"இப்படியொரு கணக்கெடுப்பு நடக்கப் போகுதுன்னு தெரிஞ்சதுமே ஏகப்பட்ட சர்ச்சைகள். 'யார் யார் எவ்வளவு பேர் இருக்காங்கன்னு தெரிஞ்சாதான் நலத்திட்டங்கள் அவங்கவங்களுக்குப் போய்ச் சேர வசதியா இருக்கும்'னு இந்தக் கணக்கெடுப்பை வேணும்னாங்க ஒரு சாரார். 'புள்ளி விவரத்தை வெளியிடறப்ப மெஜாரிட்டி, மைனாரிட்டின்னு ஜாதிகளுக்குள்ள ஈகோ தூண்டப்பட்டு ஜாதி மோதல் உருவாகிடும்'னு ஒரு சிலர் வேண்டாம்னாங்க. எங்



கோபால
கிருஷ்ணன்

www.kungumam.co.in

Radjaramane@TTT

"இந்தக் கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்படும். ஆனால், முடிவுகள் வெளியிடப்படுமா என்பது சந்தேகம்தான்"

## பலம் காட்டத் தயார்!

ஜூன் 15ம் தேதி வரை நடக்க இருக்கும் ஜாதிவாரிக் கணக்கெடுப்பில் விபரங்களைத் தெரிவிக்க மக்களை விட அதிக ஆர்வம் காட்டுகின்றன ஜாதி சங்கங்கள். ஒவ்வொரு சங்கமும் தங்கள் சமூக மக்களிடம், 'ஜாதியை மறக்காமல் குறிப்பிட்டு நமது ஸ்ட்ரெங்த்தைக் காட்ட வேண்டும்' என அன்புக்கட்டளை போட்டுக் கொண்டிருக்கின்றன. ஜாதி பேக்ரவுண்டில் ஆரம்பிக்கப்பட்ட சில அரசியல் கட்சிகளும் களத்தில் இறங்கிவிட்டன. 'நமது ஜாதியை எப்படிச் சொல்ல வேண்டும்' என ஒவ்வொரு சங்கமும் தங்கள் சமூக மக்களுக்கு அறிக்கை அட்வைஸ் கொடுத்தபடி இருக்கின்றன. தென்மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ஜாதிக்கட்சித் தலைவர் நேரடியாக சென்சஸ் அலுவலகத்துக்கே சென்று தங்கள் ஜாதியின் உட்பிரிவுகளையெல்லாம் பட்டியலிட, 'ஊழியர்கள் வீடுதேடி வரும்போது உங்கள் மக்களை அவர்களிடம் விபரம் சொல்லச் சொல்லுங்கள்' என அனுப்பி வைத்தார்களாம்.

களைப் பொறுத்தவரை அரசு என்ன செய்யச் சொல்லுதோ... அதைச் செய்யறோம். இந்தப் புள்ளி விவரம் வெளியிடப்படுமாங்கிறதை எல்லாம் இப்ப சொல்ல முடியாது. கணக்கெடுப்பு படிவத்துலயே கடைசி கேள்வியா, 'உங்க ஜாதி உள்ளிட்ட இந்த விவரத்தை பிரசுரிக்கலாமா'ங்கிற கேள்வியும் இருக்கும். அதுல அவங்கவங்க விருப்பத்தைச் சொல்லலாம்.

ஜாதியைச் சொல்லவே விருப்பப்படலைன்னாலும் சொல்லலாம். ஜனநாயக நாட்டுல மக்களோட உரிமை முக்கியமில்லையா? ஓட்டு போடறப்ப நூறு சதவீதமும் போடறாங்களா? பதிவான வாக்குகளை மட்டும் எண்ணி, அதுல ஒருத்தரைத் தேர்ந்தெடுக்கற மாதிரிதான் இதுவும். எவ்வளவு பேர் சொல்லியிருக்காங்களோ, அதை வச்சு புள்ளிவிவரத்தை கால்குலேட் பண்ணிக்க வேண்டியதுதான்'' என்கிறார் கோபாலகிருஷ்ணன்.

பதிலை யோசிச்சு வச்சுக்கிட்டு நீங்களும் ரெடியா இருங்க!

**- அய்யனார் ராஜன்**

Radjaramane@TTTn

“மின்சாரம் திருடியதா உன் மேல போலீஸ் வழக்கு போட்டிருக்காங்க... இதுக்கு நீ என்ன சொல்றே?”

“இல்லாத ஒரு விஷயத்தை எப்படி எசமான் திருட முடியும்..?”

*- அதிரை புகாரி, அதிராம்பட்டினம்.*

“படத்துல சம்பந்தமேயில்லாம டைரக்டர் ஒரு சீன்ல வந்து கதாநாயகியைத் தொட்டுட்டுப் போறாரே... ஏன்?”

“அதுதான் டைரக்டர் டச்சாம்..!”

*- பிரியதர்ஷன், சேலம்.*

“எங்க பாட்டி என்னை சின்ன வயசுல ‘கொலைகாரா... கொலைகாரா...’ன்னு திட்டுவாங்க!”

“பெரியவங்க வாக்கு அப்படியே பலிச்சுடுச்சு... இல்லையா டாக்டர்?”

*- அனார்கலி, தஞ்சாவூர்.*



என்னதான் ‘கீ போர்டா’ இருந்தாலும், அதுல சாவியெல்லாம் மாட்டி வைக்க முடியாது...

**- கம்ப்யூட்டரை கவுத்துப் போட்டு கன்னாபின்னாவென்று யோசிப்போர் சங்கம்**

*- நா.கி.பிரசாத், கோவை.*

என்னதான் இந்தி பிடிக்கலைன்னாலும், ஐஸ்கிரீம் பார்லருக்குப் போனா, ‘கோன்’ ஐஸ்னுதான் கேட்கணும்; ‘யார்’ ஐஸ்னு கேட்க முடியாது!

**- வம்பை விலை கொடுத்து வாங்கத் துடிப்போர் சங்கம்**

*- அனார்கலி, தஞ்சாவூர்.*

@Radjaramane@TTTn

ஜோக்ஸ்

தலைவருக்கு
போதை ஏறிவிட்டது
எனச் சொன்னார்கள்.
நிலவைப் பார்த்து
'கரன்ட் வந்துவிட்டதா'
என்று கேட்டதும்!

*- எஸ்.பழனிவேல்,*
*திருமாளம்.*



"தலைவர் இதுக்கு முன்னால எழுத்தாளரா இருந்திருப்பார்னு எப்படிச் சொல்றே..?"

''குழந்தைக்கு பேர் வைக்கும்போது, புனைப்பெயரும் சேர்த்து வைக்கறாரே..!''

*- பா.ஜெயக்குமார், வந்தவாசி.*

## தத்துவம் மச்சி தத்துவம்



# டவுன் வாங்கலையோ

விற்கிற விலைவாசியில் ஒதுக்குப்புறமாக ஒரு செண்ட் இடம் வாங்குவதற்கே நாக்கு தள்ளி விடுகிறது. அமெரிக்காவின் இப்போதைய ரியல் எஸ்டேட் டிரெண்டைக் கேள்விப்பட்டால், காது வழியே புகை

Radjaramane@TTT

# டவுன்!

மட்டுமில்லை... நெருப்பும் வரும்! நகரத்தை அப்படியே மொத்தமாக விலை பேசி வாங்குவதுதான் அங்கே லேட்டஸ்ட்!

அமெரிக்காவின் பல குட்டி நகரங்களை, தொழில்நுட்ப மாற்றங்கள் புரட்டிப் போட்டுவிட்டன. ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலை பார்த்த ஒரு மில் மூடப்படும்போது, அந்த நகரை தொழிலாளிகளும் புறக்கணித்து வெளியேறி விடுகின்றனர். வெறுமை சூழ்ந்த நகரம் அப்படியே பல ஆண்டுகளாக மனித சுவாசமற்றுக் கிடக்கும்.

இப்படி இருக்கும் நகரங்களை தேடிப் பிடித்து வெளிநாட்டினர் இப்போது வாங்குகிறார்கள். கடந்த ஆகஸ்ட்டில் சீனிக் என்ற நகரம் விற்கப்பட்டது. அமெரிக்காவின் தெற்கு டகோடாவில் இருக்கும் இந்தக் குட்டி நகரத்தில் 58 பேர் வசிக்கின்றனர். 58 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த நகரம் - இதன் போஸ்ட் ஆபீஸ் (பின்கோடையும் சேர்த்து விற்றிருக்கிறார்கள்), மியூசியம், நடன அரங்கம், இரண்டு கடைகள், பழைய ரயில்வே ஸ்டேஷன் ஒன்று என எல்லாம் சேர்த்து - பிலிப்பைன்ஸ் நாட்டு சர்ச் ஒன்றுக்கு விற்கப்பட்டது. விலை, வெறும் 3 கோடியே 68 லட்சம்தான்.

அடுத்த விற்பனை, அமெரிக்காவின் மிகச்சிறிய டவுன் என்ற அந்தஸ்தைப் பெற்ற பஃபோர்டு. வயோமிங் பகுதியில் இருக்கும் இந்தக் குட்டி நகரத்தில் டான் சம்மன்ஸ் என்ற ஒரே ஒருவர் மட்டுமே பல ஆண்டுகளாக வசித்தார். அவருக்கும் போரடிக்க, இந்த மாதம் நகரை விற்றுவிட்டார். இதை வாங்கியிருப்பவர், பெயர் சொல்ல விரும்பாத ஒரு வியட்நாம் தொழிலதிபர். பின்கோடோடு சேர்த்து ஒரு போஸ்ட் ஆபீஸ், ஒரு பெட்ரோல் பங்க் என எல்லாம் அடங்கிய இந்த அழகிய நகரத்தின் விலை நான்கே முக்கால் கோடி.

அடுத்து விற்பனைக்குத் தயாராக இருக்கிறது ஹென்றி ரிவர் என்ற டவுன். 72 ஏக்கர் பரப்பளவுள்ள இந்த அழகிய மலை நகரம், ஏற்கனவே டெக்ஸ்டைல் தொழிலுக்கு புகழ்பெற்றிருந்தது. வடக்கு கரோலினா மாகாணத்தில் இருக்கும் இந்த நகரின் தொழிற்சாலை நசிந்ததால், நகரமும் களையிழந்தது. அழிவின் அழகைப் படம்பிடிக்க நிறைய பேர் வருவதால் வெறுத்துப் போன பழைய மில்லின் உரிமையாளர், நகரையே விற்கப் போவதாக அறிவித்திருக்கிறார். விலை சுமார் 7 கோடியே 36 லட்சம். விருப்பம் இருப்பவர்கள் வாங்கலாம்!

- ரெமோ

Radjaramane@TTT



Radjaramane@TTTm

Radjaramane@TTTm

# போலீஸ் ஸ்டேஷனுக்கே லீவு விட்டேன்...

## கருணாஸ் கலகல

சினிமா தயாரிப்பாளர்களுக்கும், தொழிலாளர் கூட்டமைப்புக்கும் இடையே நடந்து வரும் பிரச்னைகளின் ஒரு கட்டமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் அறிவித்தபோது, தயாரிப்பாளர்களின் ஆதரவுடன் நடந்த படப்பிடிப்புகளில் ஒன்று கருணாஸின் 'ரகளைபுரம்'. இருந்தும், எந்த ரகளையின் சுவடுகளும் இல்லாமல் நடந்து வரும் படப்பிடிப்பு படத்தின் அறுபது சதவீதப் பகுதிகளை முடித்திருக்கிறது.



''எல்லாருக்கும் நண்பனா நான் இருக்கிறதாலதான் இது சாத்தியமாச்சு. இங்கே சினிமாங்கிற தொழில் ஆரோக்கியமா நடக்கணும்னு எந்த அரசியல் சாயமும் பட்டுக்காம போராடி வர்றவங்கள்ல நானும் ஒருத்தன். ஃபெப்சி ஸ்டிரைக் அறிவிச்சப்ப தயாரிப்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிச்சு நான் ஷூட்டிங் வச்சப்ப, ஃபெப்சி தொழிலாளர்களே முன்வந்து எனக்காக வேலை செய்தாங்க...'' என்கிற கருணாஸ், தன் கென் மீடியாவுக்காகவே 'ரகளைபுர'த்தை தயாரித்து, நடித்து வருகிறார். படம் பற்றிக் கேட்டதற்கு சீரியஸ் முகம் தவிர்த்துப் பேசினார்.

''நான் ஹீரோவான என் மூணு படங்கள்லயே அதிக செலவோடவும், அழகியலோடும்'' அமைஞ்சு, அடுத்த கட்டத்துக்கு என்னைக் கொண்டு போற படம் இது. அதோட முதல் காரணம், டைரக்டர் மனோ. 'வின்னர்', 'கிரி', 'தேவதையைக் கண்டேன்'

Radjaramane@TTTm

உள்ளிட்ட படங்கள்ல நம்மை வயிறு வலிக்க சிரிக்க வச்சதுல இவருக்குப் பெரிய பங்கு இருக்கு. முப்பது படங்கள்ல வடிவேலுவுக்கு காமெடி டிராக் எழுதியவர். இந்தப் படத்துல பயந்தாங்கொள்ளி போலீஸா வர்ற எனக்காக அவர் எழுதியிருக்க 70 சீன்கள்ல 35 சீன்கள் காமெடியில



பின்னி எடுத்துடும்.

சந்தர்ப்பவசத்தால நான் இன்ஸ்பெக்டராவும் ஆகிடறேன். டூட்டியில செத்தா வர்ற அமவுன்ட் குடும்பத்துக்கு உதவுமேன்னு நான் பண்ற அலப்பறைகள் ஒரு பக்கமும், என் ஸ்டேஷன்ல இருக்கிற ஏட்டு ஏகவல்லியா வர்ற கோவை சரளாவோட அமர்க்களம் ஒரு பக்கமும் பிரிச்சு மேயும். கோவை சரளாவோட நான் நடிக்கிற முதல் படம் இது. தான் நடிக்கிற தெலுங்குப் படங்களோட ஷூட்டிங் ஸ்பாட்கள்லயும் இந்தப் படத்தைப் பற்றியே அவங்க பேசறதா கேள்விப்பட்டு உச்சி குளிர்ந்து போனேன். கோவை சரளாவை காதலிக்கிற ஏட்டு சிங்கமுத்து, போலீஸ் கமிஷனர் எம்.எஸ்.பாஸ்கர், மாத்திரை மனோபாலா, அசரீரி மயில்சாமின்னு அத்தனை கேரக்டர்களும் அதகளம் பண்ற கதைக்களம்.

என் ஜோடியா பெங்களூர்லேர்ந்து மாடல் அங்கனாவும், கிளாமருக்கு சஞ்சனா சிங்கும் நடிக்கிறாங்க. ஹீரோயின் முன்னால பெரியவர் ஒருத்தரோட ஆயிரம் ரூபாய் பணத்தை ஒருத்தன் பிக்பாக்கெட் அடிச்சுட்டு ஓடுவான். அவரோட சேர்ந்து நானும் 'திருடன்... திருடன்...'னு கத்த, நான்தான் அவனைப் பிடிக்கணும்னு அவர் ஞாபகப்படுத்த, நான்



Radjaramane@TTT

கிற காமெடிக் கதைக்கு வேல் ராஜ் ஒளிப்பதிவு செய்யறார். கவியரசுவோட பாடல்களுக்கு ஸ்ரீகாந்த் தேவா அமைச்சிருக்க இசைல தேவா ஒரு கானா பாட, நானும் சொந்தக் குரலெடுத்துப் பாடியிருக்கேன். என் மகன் கென் படத்தோட தொடக்கப் பாடலுக்கு ஆடி அறிமுகமாகறான். 125 படம் காமெடி செய்திருக்க என் அனுபவத்துல எனக்கு முழுமையான பெயர் தரப்போற படம் இது. அந்த ரகளையைத்தான் டைட்டில்லயே வச்சிட்டோம்..!"

**- வேணுஜி**

அவனைத் துரத்திட்டுப் போவேன். சந்து திரும்பி அவனை மடக்கற நான், அவன் கால்ல விழுந்து இன்னொரு ஆயிரத்து நூறு கொடுத்துப் பிடிச்சுட்டு வருவேன். பெரியவர் பணத்தை அவன் திரும்பக் கொடுத்ததும், நான் சொன்னேன்னு சொல்லி அவனை போலீஸ் ஸ்டேஷன்ல போய் சரண்டர் ஆகச் சொல்வேன். பணத்தை வாங்கிக்கிட்ட பெரியவர், முழு நோட்டா இருந்த ஆயிரம் ரூபாயை சில்லறை மாத்தியும் தந்ததுக்காக எனக்கு நன்றி சொல்லிட்டுப் போவார். அது நான் திருடனுக்குக் கொடுத்த பணம். நான் இன்ஸ்பெக்டரானதும் போலீஸ் ஸ்டேஷனுக்கு லீவெல்லாம் விடுற லந்து வேற கலாட்டா.

இப்படிப் பெடலெடுக்



Radjaramane@TTT




மகிழ்ச்சியில் திளைக்கும்
ரதி-மன்மதன்







தென்றல் தேரில் ஏறிச்சென்று
சிவனுக்கு கணை தொடுக்க...




கோபக்கண் கொண்டு
எரித்தார் சிவன்...




தோழிகளுடன் விளையாடி மகிழ்ந்த ரதியிடம்...




வேடனும், தெய்வக் குறத்தியும்
செய்தி சொல்ல...



Radjaramane@TTTm




கலங்கி கதறும் ரதி,




தன் அலங்காரம் கலைத்து...




சிவனிடம் முறையிடுகிறாள்




தன் திருக்கல்யாணத்தில் மன்மதனை உயிர்ப்பிக்கிறார் சிவன்.

# மன்மதனை வழிபடும் கலை கிராமம்!

"சிவன் எங்கப்பா? அவனைப் போயி சுண்டல் சட்டியைத் தூக்கிட்டு வரச் சொல்லு! இங்கதானே நின்னாப்புல பிரம்மா... போய் மேடையை சுத்தம் பண்ணச் சொல்லுங்க. நாரதா... நீ போயி வெடி போடுறவனைக் கூப்பிடு! விஷ்ணுவைப் போயி மணியடிக்கச் சொல்லுங்கப்பா... மேடைக்குப் போகணும், நாழியாயிருச்சு..." என மீசை துடிக்க உத்தரவிடுகிறார் மன்மதன்.

வியர்க்க விறுவிறுக்க சைக்கிளில் வந்திறங்குகிறார் ரதி. வந்ததும் விஷ்ணுவோடு சேர்ந்து தொண்ணையில் சுண்டல் வினியோகிக்கிறார். "யோவ் நந்தி... ரேடியோவில மேளக் கச்சேரியப் போடச் சொல்லு" என்று உத்தரவிடுகிறார் பார்வதி.



நடிகர்களுக்கு திருஷ்டி சுற்றும் பெண்கள்...

Radjaramane@TTTm



இனாம்கிளியூர் கலைஞர்கள்...

www.kungumam.co.in

**கோ**டை மாதங்களில் கும்பகோணத்தை ஒட்டியுள்ள இனாம்கிளியூர் கிராமத்தில், சொந்தப் பெயரே மறந்துபோகும் அளவுக்கு ஒவ்வொருவருக்கும் தெய்வப் பெயர்கள் வந்து ஒட்டிக் கொள்கின்றன. வீட்டுக்கு ஒரு நாடகக் கலைஞரைக் கொண்ட இவ்வூரில் நிகழ்ந்திருக்கும் இந்த அதிசயத்துக்குப் பின்னணி, மன்மத பக்தி.

“குல தெய்வம், காவல் தெய்வம் எல்லாமே எங்களுக்கு மன்மத சாமிதான். இவரு புண்ணியத்தில எல்லாரும் சுபிட்சமா இருக்கோம். பங்குனியில மன்மதருக்கு காமன் விழா. அப்போ மூணு நாள் தொடர்ந்து ‘மன்மத காவியம்’ நாடகம் போடுவோம். நடிப்பு, பாட்டு, சீனு எல்லாமே எங்கூரு ஆளுங்கதான். காப்பு கட்டிட்டா, நாடகத்தில என்னென்ன பாத்திரத்தில நடிக்கிறாங்களோ... அந்தப் பேரையே வச்சு அழைக்கிறது முறை'' என்று நம் வியப்புக்கு விளக்கம் கொடுக்கிறார் நாடக வாத்தியாரும், மூத்த மன்மதனுமான ராஜரத்தினம்.

இனாம்கிளியூருக்கு இன்னொரு பெயர் கூத்துக்கார ஊர். முறையான பயிற்சி இல்லை; இசை ஞானம் இல்லை. ஆனால்

Radjaramane@TTT

ஒரு வரி ராகம் பிசகினாலும், அடுத்தவர் எடுத்துக் கொடுக்கிற அளவுக்கு அனுபவ ஞானம். வசனமும் பாடலும் அனைவருக்கும் அத்துப்படி. குட்டிப்பையன் முதல் பல் விழுந்த கிழவர் வரை பாத்திரம் ஏற்கிறார்கள். நெடுங்காலம் பெண்களுக்கு இடம் இல்லாமல் இருந்தது. அண்மைக்காலமாக பெண்களும் மேடையேறுகிறார்கள். ஆண்களும் பெண் வேடமிடுகிறார்கள். முறைப்படி கூத்து பயின்றவர்களே வாய்பிளக்கும் வகையில் மேடையை தெய்வீகக் களமாக்குகிறார்கள்.

எப்படி வந்தது இந்தக் கலா ரசனை..?

"விவசாயத்தை நம்புற மனுஷங்களுக்கு பாட்டும், கூத்தும் தானேய்யா பொழுதுபோக்கு. இதெல்லாம் மண்ணுல ஊறுனது. சினிமாவெல்லாம் இப்ப வந்தது. அந்தக் காலத்தில கோயில் திருவிழான்னா நாடகம்தான். நைட்டு 8 மணிக்கு ஆரம்பிச்சா மறுநாள் காலை வரைக்கும் நடக்கும். எங்கூர்ல ரெண்டு, மூணு தலைமுறைக்கு முன்னாடி மணி வாத்தியார்னு ஒருத்தர் இருந்தாரு. கும்பகோணம் பாலகான சபாவில வாத்தியாரா இருந்தவரு. சாயந்திரமானா கட்டைக் குரல்ல பாட்டு கட்ட ஆரம்பிச்சிருவாா். விவசாய வேலை ஓஞ்சு தலைசாய்க்கிற ஆம்பிளைங்க எழுந்து போய் அவரு முன்னாடி உக்காந்திருவாங்க. பாட்டையும், கூத்தையும் எங்க ரத்தத்தில ஏத்துனவரு அவருதான். மாறன் நாடக மன்றம்னு ஆரம்பிச்சு 'மன்மத காவியம்' நாடகத்தை வடிவமைச்சதும் அவருதான்" என கலா சரித்திரத்தை விவரிக்கிறார் 'ரதி' மோகன்.

மணி வாத்தியார் உருவாக்கிய 'மன்மத காவியம்' கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டது.

மன்மதன் கோயில்...



மொய் வசூல்...



Radjaramane@TTT m

ஆர்வமாகக் கேட்டாலும், யாருக்கும் புரியவில்லை. அவரிடம் கற்ற சாமிநாத உடையார் அதைத் தமிழ்ப்படுத்தினார். ராகம் குலையாமல் பாடல்களை எளிமைப்படுத்தினார். அன்று முதல் இன்று வரை மக்கள் மன்மத காவியத்தில் மயங்கிக் கிடக்கிறார்கள்.

"நூத்தம்பது வருஷமா மன்மத காவியம் இங்கே நடக்குது. ஒவ்வொரு வருஷமும் புதுசா பாக்குற மாதிரி மக்கள் ஆர்வத்தோடு வர்றாங்க. நடிக்கிறவங்க ஒண்ணு, ரெண்டு வசனத்தைத் தப்பா பேசிட்டாகூட மக்கள் கண்டுபிடிச்சு சொல்லுவாங்க. அந்த அளவுக்கு எல்லாருக்கும் அத்துப்படி..." என்கிறார் கோயில் கமிட்டி நிர்வாகி கருணாகரன்.

ஊருக்கு நடுவில் இருக்கிறது மன்மதன் கோயில். பங்குனி மாத வளர்பிறையில் காப்பு கட்டுகிறார்கள். ஆமணக்குக் குச்சியில் பேய்க்கரும்பு, இனிப்புக்கரும்பு, துவரங்குச்சி எல்லாம் வைத்து, காவிரியில் விளையும் நாணல் புல்லால் கட்டி, அதன் மேல் ஒரு வரட்டியை வைத்து மூன்றடி ஆழத்தில் ஊன்றி விடுவார்கள். மன்மதனின் அரூவ உருவம் அது. அன்று முதல் 13 நாட்கள் அதற்கு அபிஷேகங்கள் நடக்கும். 13ம் நாள் கோயிலுக்கு எதிரில் உள்ள மேடையில் 'தட்ச யக்ஞம்' நாடகம் தொடங்குகிறது. இது மன்மதன் சரித்திரத்தின் முதல் பாகம். தட்சனை சிவன் அழிப்பதோடு அந்த நாடகம் நிறைவடையும்.

''மறுநாளு மன்மத காவியம். நிறைய கலைஞர்கள் இருக்கதால, வருஷா வருஷம் மன்மதனும் ரதியும் மாறிக்கிட்டே இருப்பாங்க. மன்மதன் எரியிறதோட நாடகம் முடியும். அந்த காட்சி வர்றப்போ உண்மையிலயே இங்கே மன்மத அருவத்தை எரிப்போம். வேடம் போட்டுட்டா எல்லாரும் சாமிதான். நாடகம் முடிஞ்சு இறங்குனதும், சிவன், பிரம்மா, விஷ்ணுகிட்ட வேண்டுதல் உள்ளவங்க கால்ல விழுந்து விபூதி, மடிப்பிச்சையெல்லாம் வாங்குவாங்க. அந்த இடத்தில ஜாதி பேதமெல்லாம் குறுக்கே நிக்காது.

காலையில 8 மணி வரைக்கும் நடக்கும். அதுக்குப்பிறகு எங்க வாத்தியார் ராஜரத்தினம் மன்மதன் வேடம் போட்டு, தென்றல் தேர்ல வந்து சிவன் மீது மன்மத அம்பை எய்வார். சிவன் வெகுண்டு மன்மதனைக் கொளுத்துவார். மன்மதன்


கருணாகரன்


மோகன்


ராஜரத்தினம்

www.kungumam.co.in

aRadjaramane@TTTn


காமன் பண்டிகை...

செத்துட்டதால அன்னையில இருந்து ரெண்டு நாளைக்கு ஊர்ல துக்கம். நல்லது, கெட்டது நடக்காது. மைக்செட் பாடாது. டிவி ஓடாது. சிவனோட தவத்தை மன்மதன் கலைச்சதாவும், கோபம் கொண்ட சிவன் மன்மதனை எரிச்சதாவும், ரதியும் தேவர்களும் வந்து மன்றாடினதும் சிவன் மன்மதனை உயிர்ப்பிச்சதாவும் ஐதீகம். நாடகத்தோட உள்ளடக்கமும் இதுதான்.

மன்மதன் எரிஞ்ச ரெண்டாம் நாளு பட்டாபிஷேகம். இந்த நாடகமும் காலை வரைக்கும் நடக்கும். இடையில கல்யாணத்துக்கு மொய் வாங்குவோம். ஆயிரம், ஐநூறுன்னு நேர்த்திக்கடன் வச்சிருக்கவங்க மொய் போடுவாங்க. இந்த வருஷம் 60 ஆயிரம் ரூபாய் மொய் வந்துச்சு. அதைக் கோயில் செலவுக்கு வச்சுக்குவோம்" என்கிறார் மலர்மாறன். சாமிநாத உடையாரின் வாரிசான இவரும் மன்மதன் வேடம் கட்டுகிறார்.

இப்போது அடுத்த தலைமுறை தயாராகி வருகிறது. கோயிலுக்கு முன்பாக பெரிய அளவில் மண்டபம் கட்டி வருகிறார்கள். நாடகத்தை எழுத்து வடிவமாக்கி சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். சினிமாவும், டி.வியும் மக்களை மயக்கியிருக்கும் இந்தக் காலத்தில், மன்மத பக்தியோடு இப்படி ஒரு கலைக்கிராமம் இருப்பது அதிசயம்.

**- வெ.நீலகண்டன்**

படங்கள்: சி.எஸ்.ஆறுமுகம்



Radjaramane@TTT
www.kungumam

Radjaramane@TTT

**யாரையோ யாருக்காகவோ கடத்துவதும், கொலை செய்வதும்தான் அவர்களின் தொழில். 'ஆளை அடையாளம் காட்டும்போது பாதி; வேலை முடிஞ்சதும் மீதி' என்பதுதான் அக்ரிமென்ட். 'நிறைய எதிரிகளை சம்பாதிச்சு வச்சிருக்குற மேல் மட்டத்து ஆசாமிகளைத்தான் இப்படி கூலிப்படையினர் தாக்குவாங்க' என்று அலட்சியப்படுத்துவது ரொம்பவே தப்பு. உங்களிடம் கொஞ்சம் பணமும், முக்கிய ஏரியாவில் சின்ன நிலமும் இருந்தாலே போதும்... உங்களையும் குறி வைக்கலாம் கூலிப்படை!**

தனியாக இருக்கும்போது ரொம்ப ரொம்ப கெட்டவனால்கூட தப்பு செய்ய முடியாது. நிறைய யோசனைகள் வரும்... மனசாட்சி குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி கேள்வி கேட்கும்... கூடவே, நிறைய பயமும் எழும்! கூட்டத்தில் பயம் முதலில் போய்விடுகிறது. தவறுகளை நியாயப்படுத்திக் கொள்ள துணையும் கிடைக்கிறது.

''நம்ம ஊர்ல 'கூலிப்படை'ங்கிற கான்செப்ட்டை உருவாக்கினது, ஆரம்பத்துல தனியாளா நடமாடிட்டிருந்த சில ரௌடிகள்தான். சமூகத்துல உள்ள சில பெரிய மனுஷங்களுக்கு சிலபல விஷயங்களுக்கு இந்த ரௌடிகளோட உதவி தேவை. அதுக்காக அவங்க இவங்களை நாட, இவங்க தங்களுக்குக் கீழ அசிஸ்டென்ட்டுகளை சேர்த்துக்க, அதுக்குப் பேர்தான் கூலிப்படை...'' என்று அறிமுகம் தருகிறார் சென்னை புறநகர் கூடுதல் துணை ஆணையர் ஜெயக்குமார்.



# கொலைகாரர்கள்!

Radjaramane@TTT m

இன்றைய செய்தித்தாள்களை ஆக்கிரமித்திருப்பது கூலிப்படைகளின் க்ரைம்தான். புதுக்கோட்டை ஆசைத்தம்பி, உசிலம்பட்டி வேலு, அரும்பாக்கம் முகமது ரபீக், மயிலாப்பூர் பிலால், போரூர் அம்பிகா, நெற்குன்றம் கணேஷ்ராம் என தினம் தினம் நீள்கிறது இவர்களால் உயிரை இழந்தவர்களின் பட்டியல்.

''ஒரு காலத்துல தமிழ்நாட்டுல நடக்கற கொலை, கொள்ளை எல்லாத்துலயுமே கூலிப்படை கைவரிசை இருந்துச்சு. ஒரு கட்டத்துல முக்கிய ரௌடிகள் சிலர் என்கவுன்ட்டர்ல கொல்லப்பட, அவங்களைச் சுத்தி இருந்த மத்தவங்களும் ஓடி ஒளிஞ்சாங்க. பத்து, பதினைஞ்சு வருஷமா இவங்களோட நடமாட்டமே இல்லைன்னு சொல்லலாம். ஆனா சமீபமா நடந்த சில சம்பவங்கள், அவங்க திரும்பவும் தலையெடுக்கிறாங்களோன்னு தோண வைக்குது. சென்னை, கோயம்புத்தூர்ல நடந்த சில குழந்தைக் கடத்தல்கள், தொடர்ந்து நடந்த சில கொலைகள்ல சம்பந்தப்பட்டவங்க குருப்பா இயங்கியிருக்காங்க!

முன்னால எல்லாம் கூலிப்படையா செயல்படறவங்களுக்கு கூலி இருபது லட்சம் ரூபாய் வரை இருக்கும். இல்லாட்டி, அவங்களோட குடும்பத்துக்கு பெரிய செட்டில்மென்ட் ஏதாச்சும் இருக்கும். கொலையோ, கடத்தலோ... உயிரைப் பணயம் வச்சு நடத்தற விஷயமாச்சே! அப்படி இருந்தும் ரொம்ப அரிதாத்தான் அட்டாக் பண்ணுவாங்க. ஏன்னா, பிடிபட்டா தண்டனை கடுமையா கிடைக்கும்ங்கற பயம் இருந்திச்சு. ஆனா, சில சம்பவங்கள்ல கூலிப்படையா செயல்பட்டவங்க விடுதலையானது நடந்துடுச்சு. அதுக்குப் பிறகுதான் அவங்களுக்கு குளிர் விட்டிருக்கணும்'' என்கிற ஜெயக்குமார், அடுத்து குறிப்பிட்ட சம்பவம் அதிர்ச்சி ரகம்.


ஜெயக்குமார்


பிரியம்வதா

''சமீபத்துல போரூர் பக்கம் நடந்த ஒரு கொலையில பிடிபட்டுச்சு ஒரு குரூப். அஞ்சு பேர் சேர்ந்து செஞ்ச கொலையில, ஒருத்தனுக்கு ரெண்டாயிரம் ரூபாயும் ஒரு குவார்ட்டர் பாட்டிலும்தான் கூலியா கிடைச்சிருக்கு. ரெண்டாயிரம் ரூபாயை வாங்கிக்கிட்டு கொலை செய்யப்போறோம்னு தெரிஞ்சே அதுல ஈடுபட்டிருக்கான் அவன். இன்னும் சிலர் இப்படி கூலிக்காக இல்லாம, ஃப்ரெண்டுக்காக, ஃப்ரெண்டோட ஃப்ரெண்டுக்காகன்னு பைசா வாங்காம கூட இந்த மாதிரி வேலைகளைப் பண்றாங்க. ஆனாலும் இந்த மாதிரி ஒண்ணு சேர்றவங்களைக் கண்காணிக்கற

www.kungumam.co.in

Radjaramane@TTT



**காசுக்காக பெத்த அப்பா, அம்மா, கூடப் பிறந்தவங்களையே இவங்க கொலை செய்யத் துணிஞ்சாலும் ஆச்சரியம் இல்ல. அவங்க கிட்ட அன்பு, பாசம், இரக்கம்ங்கிற உணர்வுகள் சுத்தமா தொலைஞ்சு போயிருக்கும்.**

சோர்ஸ் எப்பவுமே போலீஸ்கிட்ட இருக்கும். அதேபோல கண்டிப்பா யாராச்சும் ஒரு லீடர் பின்னாலதான் இப்படி டீம் சேருவாங்க. அந்த லீடரைப் பிடிக்கறதும் போலீசுக்கு கஷ்டமான விஷயமில்ல. அங்கங்க இருக்கற ரௌடிகள் லிஸ்ட்டை கண்காணிச்சாலே போதும்'' என்கிறார் ஜெயக்குமார்.

சென்னையில் துப்பு கிடைக்காத கொலைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கென்றே தனிப்பிரிவு ஒன்று சமீபத்தில் அமைக்கப்பட்டது. இந்தப் பிரிவு கூலிப்படைகள் மீது கண் வைத்திருக்கிறது.

''கொலை தவிர, ஆட்களைக் கடத்திப் பணம் பறிக்கறது, போதைப் பொருள் கடத்தல், விபசாரம், சொத்து பஞ்சாயத்து, நில அபகரிப்புன்னு தொட்டதுக்கெல்லாம் இன்னைக்கு கூலிப்படைதான். இன்னைக்கு சரியா படிக்காதவங்ககூட, ஏதாவது ஒரு டிபார்ட்மென்டல் ஸ்டோர்ல ஏ.சி.யில வேலை பார்த்தபடி மாசம் பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்க முடியும். ஆனா ரெண்டாயிரம் ரூபாய்க்காகவும் ஒரு வாய் பிராந்திக்காகவும் கொலையே செய்றாங்கன்னா என்ன சொல்றது? அதுலயும் இருபது வயசைக்கூட தொடாத நிறைய பசங்க கூலிப்படைகள்ல இருக்காங்க. அதுதான் கவலை தர்ற விஷயம்'' என்கிறார் பெயர் குறிப்பிட விரும்பாத போலீஸ் உயரதிகாரி ஒருவர்.

''எதற்காக இவர்கள்

Radjaramane@TTT



கூலிப்படையில் சேர்கிறார்கள். எந்த வன்மமும் இல்லாமல் இவர்களுக்கு கொலைவெறி எப்படி வருகிறது? பணத்துக்காக முன் பின் தெரியாத யாரையும் கொலை செய்யும் ஒரு கூலிப்படை ஆசாமியின் மனநிலை எப்படி இருக்கும்'' சென்னைப் பல்கலைக்கழக கிரிமினாலஜி பேராசிரியர் பிரியம்வதாவிடம் பேசினோம்.

www.kungumam.co.in

''படிப்பு இல்லாம, சின்ன வயசுலயே போதைப் பழக்கத்துக்கு அடிமையாகறவங்கதான் இப்படி கூலிப்படையாகுறாங்க. இவங்களுக்கு மன ஆரோக்கியம் மத்தவங்களை விட குறைவா இருக்கும். கூலிப்படையா இயங்க ஆரம்பிப்பதற்கு முன்னாடியே சின்னச் சின்ன தவறுகளைச் செய்திருப்பாங்க. முறையான வழிகாட்டுதல்கள் இல்லாததாலதான் குறுக்கு வழியில கிடைக்கிற சுகமான வாழ்க்கைக்கு ஆசைப்படறாங்க. நாம செய்யற காரியங்கள் ஆபத்தானதுன்னு அவங்களுக்கு சுத்தமா தெரியறதில்ல. தவறுகளையே திரும்பத் திரும்பச் செய்து, அதுதான் சரிங்கிற முடிவுக்கு வந்துடுறாங்க. திடீர்னு அட்டாக் பண்றதையும், கொஞ்சநாள் தலைமறைவு வாழ்க்கை வாழறதையும் பழகி ஏத்துக்கறாங்க. இப்படிப்பட்டவங்க காசுக்காக பெத்த அப்பா, அம்மா, கூடப்பிறந்தவங்களையே கொலை செய்யத் துணிஞ்சாலும் ஆச்சரியம் இல்ல. அவங்ககிட்ட இருந்து அன்பு, பாசம், இரக்கம்ங்கிற உணர்வுகள்லாம் சுத்தமா தொலைஞ்சு போயிருக்கும். ஒருத்தர் குறைஞ்சது பத்து வருஷம் கூலிப்படை சகவாசத்துல இருந்தார்னாலே, அவரைத் திருத்தி நல்ல வழிக்குக் கொண்டு வர்றது ரொம்ப ரொம்பக் கஷ்டம்'' என்கிறார் அவர்.

''கூலிப்படையா செயல்படறவங்களுக்கும் அவங்களைப் பயன்படுத்தறவங்களுக்கும் இப்ப குறைஞ்சபட்சம் ஏழு வருஷம் சிறைத் தண்டனை தரப்படுது. இது போதாது. தண்டனைகளை இன்னும் கடுமையாக்கணும். ஏன்னா, சாதாரண மக்கள் கூட இன்னிக்கு கூலிப் படையால பாதிக்கப்படறாங்க. குழந்தைகளைக் கடத்திப் பணம் பறிக்கறது, நிலங்களை ஏமாத்தி எழுதி வாங்கறதுன்னு கூலிப்படைகள் புது வடிவம் எடுத்திருக்கு. இதனால மக்களோட நிம்மதி கேள்விக்குறிதான்'' என்று கவலைப்படுகிறார் பிரியம்வதா.

**- அய்யனார் ராஜன்**

Radjaramane@TTT



# குழந்தை

● ஐரேனிபுரம் பால்ராசய்யா

மார்த்தாண்டத்திலிருந்து புறப்பட்ட தனியார் பேருந்தில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த சினிமா பாடலையும் மீறி, குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டது.

சக பயணிகளின் பார்வை தன் மீது திரும்பியதும், ஷாலினி செய்வது அறியாது திகைத்தாள். குழந்தை எந்த சமாதானத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் வீறிட்டு அழுது கொண்டிருந்தது. செல்போனை எடுத்து டயல் செய்தாள் ஷாலினி.

''சகுந்தலா... உடனே ஒரு டாக்சி பிடிச்சு நாகர்கோவிலுக்கு வந்துடு. குழந்தை அழுதுக்கிட்டே இருக்கு.''

''சரிம்மா... இதோ வந்திடுறேன்!'' - ஷாலினியை பஸ் ஏற்றிவிட்டு நடந்து வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்த சகுந்தலா, எதிரே வந்த டாக்சியை நிறுத்தி ஏறிக்கொண்டாள்.

பேருந்து நாகர்கோவிலில் வந்து நின்றது. டாக்சி வேகமாய் வந்து நிற்க, சகுந்தலா அவசரமாய் இறங்கி ஷாலினியிடமிருந்து குழந்தையை வாங்கியதும் அதன் அழுகை அடங்கியது.

''பெத்த தாயைப் பார்த்ததும் அழுகையை நிறுத்திடுச்சே...'' என பக்கத்து சீட்டிலிருந்த பெண் சொல்லவும், ஷாலினிக்கு சுருக்கென்று வலித்தது.

குழந்தையை வேலைக்காரி சகுந்தலாவிடம் தந்துவிட்டு பயணத்தை தொடரலாம் என நினைத்தவள், சட்டென்று பஸ்ஸை விட்டு இறங்கி டாக்சியில் ஏறிக் கொண்டாள். குழந்தையை வேலைக்காரியிடம் விட்டுவிட்டு சென்னையில் பார்க்கும் வேலையை ராஜினாமா செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் அழுத்தமாக நிலைத்திருந்தது. ●

Radjaramane@TTT

# பெண் போலீஸ் ரீமா!




'டைகர் விஷ்வா' ஸ்ரீகாந்த், காஜல் அகர்வால்

aRadjaramane@TTTn





விக்ரமோட அடுத்த படம் ஷங்கருக்குத்தான்னு உறுதியாகிடுச்சு. இந்த முறை ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராமோட கைகோர்க்கிறார் ஷங்கர். ச்சீயானுக்கு 'மீரா' நினைவுல வந்துடப் போகுது. ஓ... பட்டர் ஃபிளை... பட்டர்ஃபிளை..!

போன வாரம் பிறந்தநாள் கொண்டாடிய அஜித், அதுக்கு முதல் வாரம்தான் கல்யாண நாளைக் கொண்டாடினார். சென்னைல இல்லை, ஊட்டியில... 'கூல் ஆல்வேஸ்' தல ஸ்டைல்..!

'கலகலப்பு' படத்துக்குப் பிறகு விஷாலை வச்சு டைரக்ட் பண்ணப் போற படத்துக்கு சுந்தர்.சி இது வரைக்கும் மனசுல வச்சிருக்க டைட்டில் என்ன

Radjaramane@TTTm



'நெல்லை சந்திப்பு' ரோஹித், தேவிகா

தெரியுமா..? 'எம்.ஜி.ஆர்.' ரஜினி 'சிவாஜி'ன்னா, விஷால்தான் எம்.ஜி.ஆரா..?

எல்ரெட் குமார் தயாரிச்சு டைரக்ட் செய்த 'முப்பொழுதும் உன் கற்பனைகள்' படம் கேன்ஸுக்குப் போகுது. 'தயாரிப்பாளர்கள் நெட்வொர்க் சிறப்புத் திரையிடல்'ங்கிற பிரிவில கேன்ஸ்ல ஸ்கிரீன் ஆகப் போற எம்.யு.கே.ல நடிச்சதுக்கு அதர்வாவும் பெருமைப்படலாம்.

விஜய் தயாரிச்சு விக்ரம் பிரபு நடிக்கிற 'சட்டம் ஒரு இருட்டறை'ல ரீமா சென் பெண் போலீஸா வந்து ரவுடிகளைப் பின்னி எடுக்குமாம். உதை வாங்கற ரவுடிகளுக்கு ஜாலிதான்..!

தெலுங்குக்குப் போய் முன்னணி நடிகராயிட்ட ஷாம், '6'ங்கிற தமிழ்ப்படத்துலயும், தமிழ்லயும், தெலுங்கிலயும் தயாராகிற 'ஏஸ் ராஜா ராணி மற்றும் ஜோக்கர்'லயும் நடிச்சுக்கிட்டிருக்கார். இந்தப் படத்துக்காக ஒரு நிர்வாண சீன்லயும் நடிச்சிருக்காராம் அவர். ஷாம்... ஷாம்... ஷேம்... ஷேம்..!

மீனவர்கள் பற்றிய கவித்துவமான படங்கள் மலையாளத்துல அதிகமா தயாரிக்கப்பட்டதுக்குப் போட்டியா, தெலுங்குல தயாராகி ஆந்திராவில நாலு நந்தி அவார்டுகளைக் குவிச்ச 'கங்கபுத்துருலு' இப்ப தமிழ் பேசி 'மீனவனா' வரப்போகுது. மீன்பிடி தடைக்காலம் முடிஞ்சுடுச்சா..?

Radjaramane@TTT

‘கடவுள்’ நடிகரும், ‘காட் திருமகளு’ம் ஒண்ணா நடிக்கிற படத்துல கெமிஸ்ட்ரி சூப்பரா ஒர்க் அவுட் ஆகிட, சீரியசா நடிக்க வேண்டிய சீன்கள்ல கூட ரெண்டு பேரும் கடலை போட்டுக்கிட்டே இருந்தாங்களாம். டென்ஷனான டைரக்டர் ரெண்டு பேரையும் கடிச்சு, இனி ஷூட்டிங் நேரத்துல பேசவே கூடாதுன்னு ரூல் போட... ஆளுக்கொரு பக்கமா உக்காந்து ஆகா யத்தைப் பாத்துக்கிட்டிருக்காங்களாம்..! ‘செகண்ட் வேர்ல்ட் வார்’ நடக்காம இருந்தா சரி...

சமீபத்துல சக்சஸ் ஆன சூப்பர் ஸ்டார் பட டைட்டில் கொண்ட படத்தோட கதையை, படம் பார்த்த எல்லாருமே பாராட்டினாங்க. உண்மை என்னன்னா, அது சம்பந்தப்பட்ட டைரக்டரோட கதையே இல்லையாம். ரூம் மேட் ஒருத்தரோட கதையைச் சொல்லி ஓகே வாங்கிட்டு, சம்பந்தப்பட்ட பார்ட்டிகிட்ட மன்றாடினாராம். பெரிய மனசோட அவரும் ‘பொழச்சுப் போ’ன்னு சொல்ல... இவர் சக்சஸ் ஆகிட்டார். உயர உயரப் பறந்தாலும் ஊருக்குருவி கழுகாகுமா..?

## சைலன்ஸ்



‘மீனவன்’
ராம்கி, தன்மை

நார்வேல நடந்த தமிழ்ப்பட விழாவில போட்டிக்கு வந்திருந்த 50 குறும்படங்கள்ல அஞ்சு படங்கள் விருது பெற்றிருக்கு. அதுல ‘கள்ளத்தோணி’ படத்துக்காக சிறந்த ஒளிப்பதிவாளரா செழியன் தேர்வு பெற்றிருக்கார். ‘ஷார்ட் பட் ஸ்வீட்..?’

முன்னணி புரட்யூசரான பி.எல்.தேனப்பனை நடிகராக்கிய பெருமை டைரக்டர் திருமலையைத்தான் சேரும். அவரே தயாரிச்சிருக்க ‘நெல்லை சந்திப்பு’ல கே.எஸ்.ரவிகுமாரோட உதவியாளர் கேபிபி.நவீனை டைரக்டராக்கி, தேனப்பனையும் நடிகராக்கிட்டார். இனி புரட்யூசர்கள் நடிக்கும் சீசன் தொடங்கலாம்..!

– கோலிவுட் கோயிந்து

Radjaramane@TTT

# திருப்புமுனை




நீதியரசர்
**சந்துரு**

Radjaramane@TTT



‘ஒரு தலித் பெண்ணை சத்துணவு ஊழியராக ஏற்க மாட்டோம்’ என்று சொன்ன பள்ளி நிர்வாகத்தை எதிர்த்து ஒரு வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்திற்கு வந்தது. கலெக்டர் அந்தப் பள்ளியை மூடுவதற்கு உத்தரவு போட்டார். நீதிபதி சந்துரு அவர்கள், அந்தப் பள்ளியைத் திறக்க உத்தரவு போட்டார். ‘பள்ளியை மூடுவது தீர்வு அல்ல. தகுந்த பாதுகாப்போடு சத்துணவு ஊழியர் தன்னுடைய பணியைத் தொடர வழி செய்வதுதான் சமூக நீதி’ என்கிற பார்வை, நீதியைத் தேடும் பாதையில் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சியது.

கோயிலில் பெண்கள் பூசாரியாகலாம்; நிலங்களை அரசு கையகப்படுத்தும்போது விவசாயிகளுக்கு மாற்று ஏற்பாடுகளை வழங்க வேண்டும்; நூலகங்களுக்குப் பொருத்தமற்றவர்களை நியமிப்பது, ஒரு இனத்தின் கலாசாரத்தையும் சரித்திரத்தையும் அழிப்பதற்கு சமம் போன்ற இவரது தீர்ப்புகள் பத்திரிகை தலையங்கங்களில் பாராட்டு பெற்றன.

தீர்ப்புகளை வெறும் உத்தரவுகளாகப் போடாமல், புதிய பார்வையோடு எழுதப்பட்ட நீதி இலக்கியங்களாக படைத்திருக்கிறார். எளிய மக்கள் மீதான அன்பையும், அறச் சீற்றத்தையும் அவரின் தீர்ப்புகளில் உணரலாம். ‘அரசியல் சாசனத்தை வங்கக் கடலில் தூக்கி எறிய வேண்டும், கொளுத்த வேண்டும்’ என்று பேசிய ஒருவரை சட்டம் படிக்க வைத்து வழக்கறிஞர் ஆக்கியது வாழ்க்கை. அரசியல் சாசனம் மக்களுக்கு வழங்கும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் உயர்ந்த நீதிபதி பணியை வழங்கி கௌரவித்திருக்கிறது காலம்.

‘‘அப்பா ரயில்வே குமாஸ்தா. வீட்டில் நான்காவது பிள்ளை நான். திருச்சியில் அப்பாவுக்கு

● த.செ.ஞானவேல்

வெற்றியின் பாதையில் தங்களை திருப்பிவிட்ட தருணங்களை, ஜெயித்தவர்கள் அடையாளம் காட்டும் தொடர்

Radjaramane@TTT

வேலை. 'பிள்ளைகளுக்கு சொத்து சேர்க்க முடியாது, நல்ல படிப்பு தந்து விட வேண்டும்' என்று நினைக்கிற கோடிக்கணக்கான தகப்பன்களில் என் அப்பாவும் ஒருவர். அதற்கு சென்னை நல்ல இடம் என்பதால் பணிமாற்றம் வாங்கிக் கொண்டு வந்தார். எனக்கு ஐந்து வயது ஆகும்போது, உடல்நலமின்றி அம்மா இறந்துபோனார். அன்றிலிருந்து அப்பாவே ஐந்து பிள்ளைகளுக்கும் தாயுமானவர் ஆனார். காலையில் எழுந்து சமையல் செய்து, எங்களைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு வேலைக்கு போகிற பேரன்பு அவரிடம் இருந்தது.

அம்மா இறக்கும்போது தம்பிக்கு நான்கு வயதுகூட பூர்த்தியாகவில்லை. அக்காவுக்கு சீக்கிரமே திருமணம் முடிந்தது. பிள்ளைகளை வைத்துக் கொண்டு கஷ்டப்படாமல், இன்னொரு திருமணம் செய்து கொள்ளுங்கள் என உறவுகள் வற்புறுத்தின. 'எனக்குப் பிள்ளைகளே போதும். அவங்களுக்காக வாழ்ந்துட்டுப் போறேன்' என உறுதியான முடிவு எடுத்தார் அப்பா. பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டுமென்பது அவரின் இன்னொரு உறுதியான முடிவு. 'படிக்கச் சொல்லி ஏம்பா எப்பவும் படுத்தி எடுக்கிறீங்க' என நாங்கள் சலித்துக் கொண்டிருக்கிறோம். 'துள்ளித் திரிகின்ற பருவத்திலே, என் துடுக்கை அடக்கி, பள்ளிக்கு அனுப்பாத பாதகனே, என் தந்தையனே'னு பின்னால நீங்க யாரும் சொல்லிடக்கூடாது இல்லையா' என கவிதையாக பதில் சொல்லுவார். அம்மா பற்றிய ஏக்கம் மனசின் மூலையில் எப்போதும் இருந்தது. விசேஷங்களுக்குப் போகும்போது, 'தாயில்லா பசங்க' என்று சில பெண்கள் பரிதாபப்பட்டு சொன்னதைக் கேட்டு, அடக்க முடியாமல் அழுதிருக்கிறேன்.

www.kungumam.co.in

சென்னை தி.நகரில் உள்ள ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த பள்ளியில் படிக்க வைத்தார் அப்பா. அமெரிக்காவில் படிப்பதற்கு மூத்த அண்ணனும், கான்பூர் ஐ.ஐ.டி.யில் படிப்பதற்கு அடுத்த அண்ணனும் சென்றுவிட, அப்பாவின் குறைந்த பென்ஷன் பணத்தில் வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பு 11 வயதில் என்னுடையதானது. ரேஷன் க்யூவில் நின்று பொருட்களை வாங்குவது, மின் கட்டணம் செலுத்துவது, மளிகைப் பொருட்கள் வாங்குவது, பாத்திரம் தேய்ப்பது, வீடு பெருக்குவது,



Radjaramane@TTT

சமைப்பது என எல்லா வேலையும் செய்தது போக மிச்சம் இருக்கும் நேரத்தில் படிப்பு. சிறுவனாக எல்லா வேலைகளையும் நான் எடுத்துப் போட்டு செய்வதால் பள்ளியில் நல்ல பெயர். ராமநவமி வரும்போது பானகம் செய்து பள்ளியில் எல்லோருக்கும் தருவது, ஆசிரியர்களின் வீட்டுக்கு ரேஷன் பொருட்கள் வாங்குவது, மின் கட்டணம் செலுத்துவது



என பொதுக் காரியங்களிலும் ஈடுபடுவேன். நியாயமான தேவைகளுக்குக் கூட க்யூவில் பொறுமையாகக் காத்திருக்க வேண்டிய சாதாரண மக்களின் வாழ்க்கை அப்போதே புரிந்தது.

வீட்டுச் செலவுக்காக 200 ரூபாய் என்னிடம் இருக்கும். அந்த வயதுக்கே உரிய ஆசையாக நயா பைசா எடுத்து மிட்டாய் வாங்கியதோ, சாக்லெட் வாங்கியதோ இல்லை. தந்த பொறுப்பை செவ்வனே செய்ய வேண்டும் என்பது பழக்கமானது. சமயச் சொற்பொழிவுகள் ஒன்றையும் விடாமல் கேட்பது மிகவும் பிடிக்கும். கிருபானந்த வாரியார் தன் பேச்சுக்கு நடுவில் கேள்வி கேட்பார். பதில் சொல்லி பரிசு வாங்கும் அளவு ஆர்வமாகக் கேட்டேன். ஒரு லட்சம் தடவை 'ஸ்ரீராமஜெயம்' எழுதினால் சங்கராச்சாரியார் சின்ன வெள்ளிக் காசு பரிசளிப்பார். அதையும் வாங்கியிருக்கிறேன். கடவுள் பக்தி அதிகமாகவே இருந்தது.

'பிள்ளைன்னு இருந்தா சந்துரு மாதிரி இருக்கணும்' என்று சொல்லுமளவுக்குக் குறையொன்றுமில்லாத சிறுவனாக இருந்தவன் வாழ்வில் முதல் திருப்புமுனை, வீட்டு மாடியில் குடியிருந்த போஸ்ட் மாஸ்டர் ஒருவர் மூலமாக வந்தது. அவர், பெரியார் மீது ஈடுபாடு கொண்டிருந்தார். பெரியார் புத்தகங்களை அவரிடம் வாங்கிப் படித்தேன். சொற்பொழிவில் கைகட்டிக் கேட்ட பல விஷயங்களை, கேள்விகளால் உலுக்கி எடுத்தன பெரியாரின் சிந்தனைகள். எனக்குள் கேள்விகள் சிறகுகளைப் போல முளைத்தன. 'கடவுளுக்கு எல்லாம் தெரியும்னா, ஏன் அம்மா இல்லாம நமக்கு இவ்ளோ கஷ்டம் தர்றாரு' என்பதில் தொடங்கி சடங்குகள், சாதி, மதம் என அத்தனைமீதும் விமர்சனப் பார்வை வந்தது. ஆசாரமான பள்ளியில் என்னுடைய கேள்விகள், அடிக்கடி சலசலப்பை ஏற்படுத்தின. 'நல்ல பிள்ளை' என்று பாராட்டியவர்கள், 'கெட்ட பையன்' என்று என்னை தடை செய்யச் செய்ய... பெரியார் மீது

Radjaramane@TTT

ஈடுபாடு அதிகமானது.

சிந்தனைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் என் செயல்களிலும் பிரதிபலித்தன. ஒழுக்கம் நிறைந்த பொறுப்பான பையன், வீட்டிற்கு கவலை தரும் பிள்ளையானேன். திடீரென்று ஒரு நாள் அப்பாவும் மரணமடைந்தார். அப்போது எனக்கு 15 வயது. தம்பிக்கு 12 வயது. அண்ணன்கள் யாரும் வரமுடியாத சூழலில், வழக்கமாக செய்கிற ஈமக்கடன் சடங்குகள் எதுவும் இல்லாமல், அப்பாவுக்குக் கொள்ளி வைத்தேன். சொந்தங்கள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியது. 'எனக்குத் தெரிந்ததை நான் செய்தேன்' என்று சொன்னது எத்தனை பேருக்குப் புரிந்திருக்கும் எனத் தெரியவில்லை. மனதுக்கு சரியென்று பட்டதை துணிந்து செய்கிற பழக்கம் இளம் வயதிலிருந்து எனக்குள் இருக்கிறது. இன்று வரை மாறாத ஒன்றாக அதைக் குறிப்பிட முடியும்.

www.kungumam.co.in

யாருடைய துணையும் இல்லாத தனிமை வாழ்க்கை. புத்தகங்களே உற்ற நண்பன். பெரியாரின் எழுத்துகள் சிந்திக்கத் தூண்டினாலும், கம்யூனிச இயக்கமே என்னை ஈர்த்தது. பி.யூ.சி படிக்கும்போது அரசியல் ஆர்வம் அதிகமானது. கூட்டம் கேட்டுக்கொண்டிருந்தவன், போராட்டங்களில் கலந்துகொள்கிற அளவு புரமோஷன் அடைந்தேன். கேள்வி கேட்பதற்கு யாரும் இல்லாத வாழ்க்கை. அறிவுரை சொல்லவோ, வழிகாட்டவோ ஒருத்தரும் இல்லை. என்னுடைய வழியை நானே தேடிக் கண்டுபிடிக்கும் பயணம் தொடங்கியது.

நல்ல மதிப்பெண் இருந்தும், டாக்டருக்குப் படிக்கும் ஆசை நிறைவேறவில்லை. பி.எஸ்சி. தாவரவியல் படித்தால் எம்.பி.பி.எஸ் படிக்க வாய்ப்பிருப்பதாக சொல்லவே, அந்தப் படிப்பையே தேர்ந்தெடுத்தேன். தம்பியைப் படிப்பதற்கு ஊருக்கு அனுப்பிவிட்டு, வீட்டை காலி செய்துவிட்டு, கல்லூரி விடுதியில் சேர்ந்தேன். மாணவர்கள் எழுச்சி அதிகம் இருந்த காலம். நாளுக்கொரு போராட்டம்,



பொழுதுக்கொரு அரசியல் கூட்டம் என்று பரபரவென்று திரிந்தேன். போராட்ட குணம் அதிகரித்தது. கல்லூரி விடுதியில் பாதிரியார்களுக்கும் சேர்த்து மாணவர்களே உணவுக் கட்டணம் கட்ட வேண்டுமா என்ற கேள்வியோடு நான் தலைமையேற்ற முதல் போராட்டத்தின் மூலம் கல்லூரியில் பிளாக் மார்க் என் மீது விழுந்தது.

Radjaramane@TTTm

கல்லூரிகளில் நடக்கும் செய்திகளை 'தி இந்து' நாளிதழில் எழுதிய என்.ராம் அவர்கள் நண்பரானார். அவர் மூலமாக பத்திரிகையில் கல்லூரி பற்றிய செய்திகள் வெளியானதும் கண்காணிப்புக்கும், எச்சரிக்கைக்கும் ஆளானேன்.

அப்போது கல்வி அமைச்சராக இருந்த நெடுஞ்செழியன், 'உலகம் முழுவதும் உள்ள மாணவர் எழுச்சி'



தொடர்பாக எங்கள் கல்லூரியில் நடக்கும் கருத்தரங்கில் பேச வந்தார். 'மாணவர்களை அழைக்காமல், மாணவர் எழுச்சி பற்றி என்ன பேசப் போகிறீர்கள்' என துண்டுப் பிரசுரம் அச்சடித்து அமைச்சருக்கு வழங்கினால் எந்த நிர்வாகம் சும்மா இருக்கும்? இரண்டாம் ஆண்டு தேர்வு எழுத அனுமதி மறுக்கப்பட்டேன். கல்லூரி முதல்வரைச் சந்தித்து, 'என்னைத் தேர்வெழுத அனுமதிக்காமல் போனால் வழக்குத் தொடர்வேன்' என்று சொன்னதும் பயந்தார். தனிமைப்படுத்தி, தனியறையில் தேர்வெழுத அனுமதி அளித்தார்கள். தேர்வு முடிந்து கையோடு முடிவுகள் வருவதற்கு முன்னால், என்னுடைய டி.சி. தபாலில் வந்து சேர்ந்தது. அப்போதும், 'டிகிரி முடிக்காமல் போனால்தான் என்ன' என்று அலட்சியமாகவே இருந்தேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர அரசியல் பணியாளராவது என முடிவெடுத்த நேரத்தில், மேத்யூ குரியன் என்கிற கட்சிப் பொறுப்பாளரின் சிபாரிசில், சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு சேர்ந்து படிக்க அனுமதி கிடைத்தது.

இந்திய மாணவர் சங்கம் (எஸ்.எஃப்.ஐ) தொடங்கப்பட்டபோது, அதன் முதல் தலைமை செயல்பாட்டாளனாக இருந்தேன். தொழிலாளர் பிரச்னையை முன்னெடுத்து கூட்டங்கள் பேசுவதும், ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்துவதுமாக இருந்தேன். எம்.பி.பி.எஸ் கனவு இருந்த தடம் தெரியாமல் மறைந்து போனது. ஒரு கூட்டத்தில் பேசிய போது கைது செய்து சென்னை மத்திய சிறையில் அடைத்தார்கள். முதன்முதலாக ஜெயில் வாழ்க்கை. 'குற்றவாளியாக சிறைக்குப் போகவில்லை, போராளியாகப் போயிருக்கிறேன்' என்றெல்லாம் வீட்டிற்குப் புரிய வைக்க முடியாது. அவர்களைப் பொறுத்தவரை நான் வழி தவறிய ஆடு!

**(திருப்பங்கள் தொடரும்...)**

படங்கள்: **ஞானவேல்**

Radjaramane@TTT

## ஆசிரியர் தகுதித் தேர்வு...

# கற்பிக்கும் கலையை கற்போம்!

இடைநிலை ஆசிரியர்கள் எழுதப் போகும் முதல் பாடமான 'குழந்தைகள் மேம்பாடு மற்றும் கற்பிக்கும் கலை' பகுதியில் குழந்தைகள் மேம்பாடு குறித்து கடந்த இரு வாரங்களாகப் பார்த்தோம். இனி கற்பிக்கும் கலை பற்றி கற்பிக்க இருக்கிறார், 'சங்கம் ஐ.ஏ.எஸ் அகாடமி'யின் இயக்குனர் மா.வாவூசி.

"கண், காது, மூக்கு, வாய், சருமம் என்ற நம் புலன்களுக்கு வாட்ச்மேன் கிடையாது. தினம் தினம் அவற்றின் வழியே நல்ல விஷயங்களும் உள்ளே வரும்; கெட்ட விஷயங்களும் உள்ளே வரும். ஆனால் நம் மூளை என்ற எஜமானன், அந்தக் குப்பைகளைத் தரம் பிரித்து தேவையானவற்றை நினைவு அடுக்குகளில் சேமித்து வைத்துக் கொள்கிறது. மற்றதை மறந்து விடுகிறது. இந்த நடைமுறைதான் கற்றல். இதனை கட்டமைப்புக் கொள்கை என்று அழைக்கின்றனர்.

அந்த வகையில், ஒரு மனிதன் சாகும் வரையில் கற்றுக் கொண்டேதான் இருக்கிறான். இந்தக் கற்றலில் நம் முன் அனுபவமும் நம் பிக்கைகளும் கூட முக்கிய பங்காற்றுகின்றன. இதற்குக் காரணம், நமது மன



Radjaramane@TTT



அமைப்புதான் என்கிறார் பியாஜே என்ற உளவியல் நிபுணர். இந்த மன அமைப்பை அவர் 'ஸ்கீமா' என்றழைக்கிறார். இந்த மன அமைப்பால்தான் ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு மாதிரி கற்கிறது என்கிறார் அவர். உதாரணமாக, ஒரு குழந்தை முதன்முதலாக யானையைப் பார்க்கும்போது, தான் அதற்குமுன் பார்த்த விலங்குகளைக் கொண்டு அதன் அளவைக் கணக்கிடுகிறது. மாடுகளை ஏற்கனவே பார்த்திருந்தால், 'பத்து மாடு சைஸில் ஒரு யானை இருக்கிறது' என்ற முடிவுக்கு அந்தக் குழந்தை வருகிறது. 'பிற்காலத்தில் காண்டாமிருகம், நீர்யானை போன்ற விலங்குகளை அது பார்க்க நேரிடும்போது யானையைப் பற்றி தன்



Radjaramane@TTTm

**க**ற்றல் கலை பற்றி நீங்கள் படித்ததிலிருந்து சில கேள்விகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுக்கான பதில்கள் வண்ணமிட்டுக் காட்டப்பட்டுள்ளன. செக் செய்து கொள்ளுங்கள்...



**1. குழந்தையின் மனதில் ஒரு பொருளைப் பற்றி தோன்றும் கட்டமைப்பு மாறிக் கொண்டே வரும் என்பது..?**

அ) இயல்புத்திறன் கொள்கை **ஆ) கட்டமைப்புக் கோட்பாடு** இ) நடத்தைக் கொள்கை ஈ) தன்வயமாக்கிக் கொள்ளல்

**2. பொருளாதாரத்தில் முன்னேறிய குடும்பத்திலிருந்து வரும் குழந்தையின் மொழி கற்கும் திறன் அதிகமாக இருக்கும் என்ற கருத்தை**

அ) ஏற்றுக்கொள்கிறேன் ஆ) மறுக்கிறேன் **இ) சொல்ல முடியாது** ஈ) ஏற்றுக்கொள்ளவில்லை

மனதில் உள்ள கட்டமைப்பை அந்தக் குழந்தை மாற்றிக்கொண்டே வரும்' என்கிறார் பியாஜே.

ஒரு மொழியை குழந்தைகள் எப்படிக் கற்றுக்கொள்கின்றன? இது பற்றி பலரும் பல வியாக்கியானங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

முதலில் ஸ்கின்னர் என்பவர் சொல்வதைப் பார்க்கலாம். ‘மொழியைக் கற்கும்போது பின்பற்றிக் கற்றல், பலப்படுத்திக் கற்றல், மற்றும் ஆக்கநிலையுறுத்திக் கற்றல் என்று மூன்று வழிகளில் எல்லோரும் கற்றுக்கொள்கின்றனர்' என்கிறார் அவர். இதனை நடத்தைக் கொள்கை என்பார்கள். பிறரின் வாய் பார்த்து அப்படியே பேசுவது பின்பற்றிக் கற்றல். ஒரு வார்த்தையை சரியாக வரும் வரை திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டே வந்து கற்பதுதான் பலப்படுத்திக் கற்றல். ஆக்கநிலையுறுத்தல் என்பதற்கு தூண்டல், துலங்கல் என்ற பெயரும் உண்டு.

இதற்கு ரஷ்ய அறிஞர் பாவ்லாவ் உலகப் பிரசித்தமான ஒரு பரிசோதனையை செய்து காட்டினார். ஒரு நாய்க்கு ஒவ்வொரு முறை எலும்புத் துண்டுகள் போடும்போதும் மணியடித்துவிட்டுப் போட்டாராம் அவர். கொஞ்ச நாளில் மணியடித்தாலே நாய்க்கு நாக்கில் நீர் ஊறியதாம். அது போலத்தான், ‘நல்ல மார்க் வாங்கினால் ஆசிரியர்கள் நம்முடன் நன்றாகப் பழகுவார்கள்' என்பது பழகிப் போனதால் நன்றாகப் படிக்கிறான் ஒரு மாணவன். இது ஆக்கநிலையுறுத்திக் கற்றல். 3 ஆயி

www.kungumam.co.in

Radjaramane@TTTm

3. கீழ்வருவனவற்றில் எது பிற மொழிகளைக் கற்க எளிதாக உதவுகிறது?

**அ) இணைத்துக்கற்றல்** ஆ) பின்பற்றிக்கற்றல் இ) இயக்கிக்கற்றல் ஈ) வாய்மொழிக்கற்றல்

4. குழந்தை தானாக எழும்போது விழுகிறது. மீண்டும் எழுகிறது. இவற்றில் எவ்வகையான கற்றல் நடைபெறுகிறது?

அ) பின்பற்றிக்கற்றல் ஆ) தொடர்கற்றல் இ) இயக்கிக்கற்றல் **ஈ) முயன்று தவறிக்கற்றல்**

5. மிதிவண்டி ஓட்டக் கற்றுக்கொள்ளும்போது எந்த வகையான கற்றல் நிகழ்கிறது?

அ) அறிவுசார் கற்றல் **ஆ)முயன்று தவறிக் கற்றல்** இ) இயக்கிக்கற்றல் ஈ) போலச்செய்தல்



ரம் கிலோ எடையுள்ள யானை, 50 கிலோ எடையுள்ள மனிதனின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு நடக்க வில்லையா? எப்படி இது சாத்தியமாகிறது... எல்லாம் கொடுக்கல் வாங்கல்கள்தானே! இதுவும் ஆக்கநிலையுறுத்திக் கற்றலே.

ஆனால், மொழி கற்பதை ஒரு மனிதனின் ரத்தத்தில் ஊறிய விஷயமாகப் பார்க்கின்றனர் வேறு ஒரு சாரார். அதில் முக்கியமானவர் சாம்ஸ்கி என்ற அறிஞர். இவரது கொள்கைக்கு ‘இயல்புத் திறன் கொள்கை’ என்று பெயர். இந்த கொள்கைப்படி, மொழித்திறன் என்பது ஒருவரின் வயதால்தான் தீர்மானிக்கப்படுகிறது என்ற முடிவுக்கு வரலாம். அதாவது, பொருளாதார நிலை, வளரும் சூழ்நிலைகள் எல்லாம் டம்மி பீஸ். அம்பானி பிள்ளைக்கும் குடிசை வீட்டுக் குழந்தைக்கும் கூட ஆரம்ப கால மொழி வளர்ச்சி ஒரே மாதிரிதான் இருக்கும் என்று விளக்கம் கொடுக்கலாம் இதற்கு. இன்னும் சிலர், மொழி வளர்ச்சிக்கு உடல் வளர்ச்சியும் அனுபவமும் அவசியம் என்றாலும், பிறருடன் ஏற்படும் மொழிப் பரிமாற்றங்களும் முக்கியமானது என்கின்றனர். அதாவது, எல்லா காரணிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்கின்றனர். தொடர்புடையது என்பதற்கு இடைவினையாற்றல் என்ற பெயரும் உண்டு.

நடத்தை தொடர்பான கொள்கைகள் ஒருபுறமிருக்க, கற்றல் தொடர்பாக பல்வேறு வகைகளையும் அறிஞர்கள் எடுத்

Radjaramane@TTTm

துரைத்திருக்கிறார்கள். உதாரணமாக... பிறந்த குழந்தைக்கு அழுதால் பால் கிடைக்கும் என்பது எப்படித் தெரியும்? இருந்தாலும் அது கையைக் காலை அசைத்துப் பார்க்கிறது, லேசாக முனங்குகிறது, அப்படியும் பால் கிடைக்கவில்லை என்றதுமே அழத் தொடங்குகிறது. ஆக, பால் கிடைக்க என்னவாவது செய்ய வேண்டும் என்று குழந்தைக்குள் ஏற்படும் அந்த உந்துதலை 'உட்காட்சிக் கற்றல்' என்கிறார்கள். அறிவு சார்ந்த கற்றல் அல்லது கருத்து சார்ந்த கற்றல் என்றும் இதனை அழைக்கலாம்.

அடுத்தது, வாய்மொழிக்கற்றல்! செந்தமிழும் நாப்பழக்கம் என்பதற்கேற்ப சொல்லிச் சொல்லிக் கற்பது. அதே மாதிரி, ஒரு விஷயத்தை செய்து பார்த்துக் கற்பது 'இயக்கக் கற்றல்' எனப்படுகிறது. இதில், குதிரை ஏற்றம், நீச்சல், வாகனங்கள் ஓட்டுவது போன்றவை அடங்கும். ஒரு விஷயத்தை படிப்படியாகக் கற்பது தொடர் கற்றலாகும். ஒரு எஞ்சினை பழுது பார்க்கும் பையன், முதலில் அதைத் துடைக்கக் கற்று, இயக்கக் கற்று, மெல்ல மெல்லத்தான் பழுது பார்க்கக் கற்றுக் கொள்வான். இது தான் தொடர் கற்றல். அடுத்தது, இணைத்துக் கற்றல். சாதாரணமாக நாம் பேசும் தமிழில் ஆங்கில வார்த்தைகளைக் கலந்து பயன்படுத்துகிறோம் அல்லவா? தாய்மொழியோடு பிற மொழியை இப்படி இணைத்துக் கற்பதால் அந்த மொழியை எளிதில் கற்க முடிகிறது. இதுவே இணைத்துக் கற்றல். அடுத்தது முயன்று தவறிக் கற்றல். தோல்விகள் தானே வெற்றியின் முதல்படி. குழந்தை விழுந்து விழுந்து நடக்கக் கற்பது இந்த வகைதான். கற்றல் கலையை இன்னும் ஆராய்வோம்... அடுத்த இதழில்!"

**- டி.ரஞ்சித்**

## உடனே அப்ளை பண்ணுங்க

**பஞ்சாப் அண்ட் சிந்த் வங்கி**
**காலியிடங்கள்:** 800
(தமிழ்நாட்டுக்கு 20 இடங்கள்)
**வேலை :** எழுத்தர்
**தகுதி :** பிளஸ் 2 அல்லது டிகிரி அல்லது வங்கித்துறையில் டிப்ளமோ (ஐபிபிஎஸ் தேர்ச்சியும் அவசியம்)
**கடைசி தேதி :** 18.5.2012
**விவரங்களுக்கு:**
www.psbindia.com

**பஞ்சாப் அண்ட் சிந்த் வங்கி**
**காலியிடங்கள்:**
குறிப்பிடப்படவில்லை
**வேலை:**
புரொபேஷனரி ஆபீஸர்
**தகுதி:** ஏதாவது டிகிரி (ஐபிபிஎஸ் தேர்ச்சியும் அவசியம்)
**கடைசி தேதி:** 10.5.2012
**விவரங்களுக்கு:**
www.psbindia.com

www.kungumam.co.in

Radjaramane@TTTm



# திருமணத்துக்கு ஏன் வீண் செலவு?

சிக்கனமாக திருமணத்தை நடத்தி முடிப்பதற்காக, மண வயதில் இருக்கும் பலருக்கும் ஒரு குறிப்பிட்ட நாளில், ஒரே இடத்தில் கூட்டுத் திருமணம் நடத்துவது பழங்குடி சமூகங்கள் பலவற்றில் வழக்கமாக இருக்கிறது. வசதியற்றவர்களின் இந்த வழக்கத்தைப் பின்பற்றி, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியும் இப்படித் திருமணம் செய்திருக்கிறார் என்றால் ஆச்சரியமாகத்தானே இருக்கும்!

அவர், விஜய் கராடி. குஜராத்தின் நர்மதை மாவட்ட துணை கலெக்டராக இருக்கிறார். துங்ரி கராசியா என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்த இவர், கடந்த 2009ம் ஆண்டு ஐ.ஏ.எஸ். தேர்ச்சி பெற்றவர். இந்த இனத்தவர் அதிகம் வசிக்கும் பிலோடாவில் 35 மணமக்களுக்கு ஒரே நாளில் திருமணம் நடந்தது. அந்த 35 தம்பதிகளில் விஜய் கராடி - சீமா தம்பதியும் அடக்கம். நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் தவிர, பதவிக்காக பணிந்துவரும் யாரையும் அவர் திருமணத்துக்கு அழைக்கவில்லை.

நேர்மையானவர், புதுமையான அணுகுமுறையோடு தன் வேலையைச் செய்பவர் என மதிக்கப்படுகிறார் விஜய். ''திருமணத்துக்கு லட்சங்களைச் செலவழித்து ஆடம்பரங்களைச் செய்வது வீண் வேலை. எளிமையான திருமணத்தின் மூலம் மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்க விரும்பினேன்'' என்கிறார் இவர்.

**- ரெமோ**

Radjaramane@TTTm

மெட்டி ஒலி
திருமுருகன்
23



# விஜயா டீச்சர்

(இதுவரை...

முப்பதுக்கும் மேலான பெண் பார்க்கும் படலங்களைக் கடந்து வந்தும், திருமணம் கை கூடாத முப்பது வயது ஆசிரியை விஜயா. அப்பா கோபால கிருஷ்ணனுக்கு காரைக்குடியில் ஸ்வீட் ஸ்டால்

Radjaramane@TTTm



இருக்கிறது. போக்குவரத்துத் துறையில் வேலை பார்க்கும் அண்ணன் சோமசுந்தரம், அக்கா மங்கை, அவள் கணவர் ரத்னவேலு, அவர்களின் வாரிசுகள், இரட்டைத் தங்கைகள் ராதா – சீதா, தம்பி ஆனந்த் என பெரிய குடும்பம். தன்னை ஒரு பொருட்டாக மதிக்காத குடும்பத்துக்கு உழைத்தபடி, விஜயா தன் மனசைக் கொட்டுவது பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் கலைச்செல்வனிடம் மட்டுமே! கலைச்செல்வன் காட்டும் அக்கறையால், அவரை நேசிக்கிறாள் விஜயா. ஆனால் மனம்திறந்து இதை

Radjaramane@TTT

மூன்றாம் பாதத்தில் பிறந்தவர்களிடம் அழகும் அறிவும் சேர்ந்திருக்கும். எல்லோரும் விரும்பும் பிள்ளையாக இருப்பார். பேசுவதே பாடுவது போலிருக்கும். சிறிய வயதிலேயே மேடைகளில் அசத்துவார்கள். வயதுக்கு மீறி பல விஷயங்களைப் பேசுவதால், அதிகப் பிரசங்கி என்று பெயர் வாங்குவார்கள். 4ம் வகுப்பு படிக்கும்போதே சூரிய தசை தொடங்கி விடும். குடும்பம் கொஞ்சம் கஷ்டத்தில் தள்ளாடும். படிப்பும் கொஞ்சம் பாதிக்கும். புத்தகக் கல்வியை விட வாழ்க்கைக் கல்வியைத்தான் நன்றாகப் படிப்பார்கள். ''படித்துதான் பெரிய ஆளாகவேண்டும் என்பதில்லை'' என்று அடிக்கடி கூறுவார்கள். கலைத்துறை மீது எப்போதும் ஒரு கண் இருக்கும். ஃபேஷன் டெக்னாலஜி, விஸ்காம், டி.எஃப்.டெக். போன்ற படிப்புகள் எதிர்காலத்தை பிரகாசமாக்கும். இசைப்பள்ளியில் படித்து அங்கேயே ஆசிரியராகும் வாய்ப்பும் கிடைக்கலாம். இந்து சமய அறநிலையத்துறை சார்ந்த அரசு வேலையும் கிடைக்கும். கட்டிடப் பணிகளில் கோயில், பூங்கா போன்றவை சிறப்பு தரும்.

நான்காம் பாதத்தில் பிறந்தவர்கள் பிடிவாதக்காரர்களாக இருப்பார்கள். சராசரியாகத்தான் படிப்பார்கள். பள்ளியில் சேர்த்த உடனேயே சுக்கிர தசை முடிந்து சூரிய தசை ஆரம்பித்து விடும். ''ஸ்கூலுக்கு ஒழுங்கா வர்றான்; போறான். அதுல ஒண்ணும் குறை இல்லை. ஆனா, மார்க் மட்டும் வரமாட்டேங்குது'' என்பார்கள். நோட்டுக்கு அட்டை போடுவது முதல் வகுப்பறை ஒழுக்க நியதிகள் வரை எதிலுமே குறை கூற முடியாது. பத்தாம் வகுப்பில் மரியாதைக்குரிய மதிப்பெண் பெறுவார்கள். பன்னிரெண்டாம் வகுப்பை விட கல்லூரியில் சிறந்து விளங்குவார்கள். ''இன்னும் பத்து மார்க் கூட எடுத்திருந்தா அந்த கோர்ஸ் கிடைச்சுருக்கும்'' என்பதுபோல பல விஷயங்கள் இவர்களை விட்டு நழுவும். ஆனாலும் சிவில், எலெக்ட்ரானிக்ஸ் எடுத்துப் படிக்கலாம். மருத்துவத்தில் ஆர்த்தோ, பல், பிளாஸ்டிக் சர்ஜரி போன்ற படிப்புகள் ஏற்றதாகும். நிர்வாகம் சார்ந்த இளங்கலை படிப்பு பெரிய பதவி வரை கொண்டு போய் நிறுத்தும். அதனால் கவனமாக தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும்.

பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வலிமை மிகுந்த அம்பாள் சந்நதியோடு, சரஸ்வதி தேவி வீற்றிருக்கும் தலத்திற்குச் சென்று வணங்குவது கல்வித் திறனை பெருக்கும். மேலும், சைவக் குருக்களோ அல்லது ஆச்சார்யர்களோ தரிசித்து பேறு பெற்ற தலமாக இருப்பின் புத்தியின் தீட்சண்யம் இன்னும் கூடும். அப்படிப்பட்ட தலமே வேதாரண்யம் ஆகும். இங்குள்ள ஈசனுக்கு வேதாரண்யேஸ்வரர் என்றும், அம்பாளுக்கு யாழைப்பழித்த மொழியம்மை என்றும் பெயர். இத்தலத்து அம்பாளின் வாக்கானது தன் வீணையின் நாதத்தை விட அழகானதும், ஈடு இணையற்றும் இருப்பதால் சரஸ்வதி இங்கு வீணையில்லாது வீற்றிருக்கிறாள். நாகை மாவட்டத்திலுள்ள இத்தலத்திற்கு சென்று அம்பாளையும், சரஸ்வதியையும் தரிசித்து வாருங்கள். சம்பந்தப் பெருமானும், திருநாவுக்கரசரும் பதிகம் பாடித் திறந்த திருக்கதவை

Radjaramane@TTT

தரிசியுங்கள். உங்களுக்குள்ளும் ஒரு விவேகக் கதவு திறப்பதை உணர் வீர்கள்.

**கா**ர்த்திகை நட்சத்திரத்தில் பிறந் தவர்களிடம் சூரியனின் முழுசக்தியும் வெளிப்படும். செவ்வாய், மற்றும் சுக்கிரனின் சக்தியும் இணைந்து வரு வதால், மிடுக்கும் வசீகரமும் கலந்தே இருக்கும். பத்தாம் வகுப்பிலேயே கல்லூரி முடித்த தெளிவோடு இருப் பார்கள். எல்லா விஷயங்களையும் எளிதாகவும், திட்டமிட்டும் செய்வார் கள். பள்ளிப் பருவத் திலேயே இவர்களைச் சார்ந்து நாலு பிள்ளை கள் இருப்பார்களே தவிர, இன்னொருவரை சார்ந்து இவர்கள் இருக்க மாட்டார்கள். எத்தனை நண்பர்கள் இருந்தாலும் ஓரிருவரைத்தான் அரு கில் சேர்ப்பார்கள். படிப்பை விட ஒழுக்கத் திற்குத்தான் முதலிடம் கொடுப்பார்கள். அதேசம யம் படிக்கவும் செய்வார் கள். தலைவலி, பார்வைக் கோளாறு, பல்வலி போன்றவை சிறிய வயதிலேயே வந்து நீங்கும்.

முதல் பாதத்தில் பிறந்தவர்கள் பளிச் தோற்றத்துடன், மெலிந்து, உயரமாக இருப்பார்கள். சிறு வய திலேயே கண்ணாடி அணிய வேண் டியிருக்கும். பள்ளியில் படிக்கும் போதே வகுப்புத் தலைவர் முதல் பள்ளித் தலைவர் வரை பதவிகள் வரும். நல்ல கல்வி நிறுவனத்தில் தந்தை சேர்ப்பார். மூன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை சுமா ராகத்தான் படிப்பார்கள். ஆனால், எல்லா வகுப்பிலும் குறிப்பிட்ட ஒரு சப்ஜெக்ட்டில் மட்டும் தொடர்ந்து நல்ல மதிப்பெண் பெறுவார்கள். அதன்பிறகு கல்லூரி முடிக்கும் வரை எல்லாவற்றிலும் முதலிடம்தான். கல் லூரியில் என்ன படிக்கிறார்களோ அதுதான் வாழ்க்கையை நிர்ணயிப்ப தாக இருக்கும். நிர்வாகம், அரசியல், சிவில் எஞ்சினியரிங், எலெக்ட்ரிகல், விண்வெளி ஆராய்ச்சி குறித்த படிப் புகள் வளமான எதிர்காலம் தரும்.


வேதாரண்யம்

இரண்டாம் பாதம் மற்றும் மூன் றாம் பாதத்துக்கு பலன்களில் மிகச் சிறிய வித்தியாசம்தான். மூன்றாம் பாதம் கொஞ்சம் மெதுவாக இருக் கும். அவ்வளவுதான். ஆனால், விவே கத்தைப் பொறுத்தவரை இருவரும் ஒன்றுதான். பள்ளியில் ஆங்கிலத்தில் சிறப்பான ஈடுபாடு காட்டுவார்கள். தனக்கென்று தனிக் கூட்டத்தை உரு வாக்குவார்கள். இங்குதான் கவனமாக இருக்க வேண்டும். நண்பர்களுக்காக சில தியாகங்கள் செய்வார்கள். இத னால் பள்ளிப் படிப்பையே கோட்டை

Radjaramane@TTT

விடும் ஆபத்து உள்ளது. ஆனால், பத்தாம் வகுப்பு தாண்டி விட்டால் எந்தப் பிரச்னையும் இருக்காது. அதன்பின் கல்லூரி முடியும் வரை செவ்வாய் தசை இருப்பதால் கெமிக்கல், சிவில், எம்.பி.ஏ. போன்றவை மிகச் சிறந்த வாழ்க்கையை அமைத்துத் தரும். பொறியியல் துறையில் எலெக்ட்ரானிக்ஸ் சிறந்தது. கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தை ஆர்வமிகுதியால் படித்து விட்டு, பிறகு தொழிலுக்காக வேறு படிப்பையும் படிப்பார்கள். கேட்டரிங் டெக்னாலஜி தேர்ந்தெடுத்தால் ஒரு ஓட்டலுக்கே அதிபராகலாம்.

நான்காம் பாதத்தில் பிறந்தவர்கள், தங்கள் பரம்பரையில் யார் யார் என்னென்ன படித்தார்கள் என்று பார்த்து வைப்பார்கள். பதினோரு வயது வரை தாய்வழி சொந்தங்கள் இவர்களின் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள். சிறு வயதிலேயே பெரிய லட்சியத்தோடு வளர்க்கப்படுவார்கள். பள்ளியிறுதியிலேயே ஐ.ஐ.டி. நுழைவுத் தேர்வு வகுப்புகளுக்குக்கூட செல்வார்கள். கல்வியில் முக்கிய கட்டமான எட்டாம் வகுப்பிலிருந்து கல்லூரி வரை படிப்பில் நம்பர் ஒன்னாக இருப்பார்கள். அரசு வேலைக்குத் தகுந்த மாதிரி படிப்பார்கள். சிலருக்கு வேலையும் கிடைத்து விடும். ஐ.ஏ.எஸ். இவர்களுக்கு வெற்றி தரும். மருத்துவத் துறையில் வயிறு, இ.என்.டி. போன்ற படிப்புகளில் சிறப்பாக செயல்படுவார்கள். படித்த கல்லூரியிலேயே பேராசிரியராக வரும் வாய்ப்பு அதிகம் உண்டு. அரசாங்கத்தில் முக்கிய பதவிகளில் அமர்ந்திருப்போரின் செயல்பாடுகளை இவர்கள்தான் தீர்மானிப்பார்கள். சொந்த ஜாதகத்தில் சூரியனும், குருவும் பலவீனமாக இருந்தால் கல்வித் தடை ஏற்பட்டு சிரமப்படுவார்கள். ஆனால், பொதுவாக கல்வி விஷயத்தில் சிறந்தே விளங்குவார்கள்.

கார்த்திகை நட்சத்திரத்தை சூரியன் ஆட்சி செய்கிறது. எனவே, சூரியன் பூஜித்த தலங்களை வணங்கினால், கல்வித்தடைகள் நீக்கும். அப்படிப்பட்ட தலமே திருக்கண்டியூர் பிரம்மசிர கண்டீஸ்வரர் ஆலயமாகும். இங்கு பிரம்மாவுக்கு தனி சந்நதி அமைந்துள்ளது. அவருடன் சரஸ்வதி தேவியும் அருள்புரிகிறார். இவ்வாறு படைப்புக் கடவுளும், கல்விக் கடவுளும் தம்பதியாக அருள் புரிவது அரிதான ஒன்று. கூடவே சூரியனும் பேறு பெற்ற இடம் என்பதால், இத்தலத்தை வணங்க கல்விச் செல்வம் பெருகும். இத்தலம் தஞ்சாவூர் - திருவையாறு பாதையில் அமைந்துள்ளது.

***(தீர்வுகளைத் தேடுவோம்...)***

திருக்கண்டியூர்



Radjaramane@TTTm



மாவோயிஸ்ட் தூதர் சர்மாவுடன் அலெக்ஸ்

# மீண்டார் கலெக்டர் அலெக்ஸ்!

**தட்மெட்லா காட்டுப் பகுதியிலிருந்து மே மூன்றாம் தேதி வியாழக் கிழமை இருள் கவியும் நேரத்தில், வெளிர்நீல சட்டை அணிந்து வெளியில் வந்தார் அலெக்ஸ் பால் மேனன். முகத்தில் களைப்பு தெரிந்தாலும் அவர் புன்னகை மாறவில்லை. சட்டீஸ்கரின் சுக்மா மாவட்ட கலெக்டராக இருக்கும் இந்தத் தமிழர், 12 நாட்கள் மாவோ யிஸ்ட்கள் பிடியிலிருந்து மீண்டிருப்பது தமிழகத்தையே நிம்மதியடைய வைத்திருக்கிறது.**

*கடந்த மாதம் 21ம் தேதி கடத்தப்பட்ட அலெக்ஸ், முன்பே விடுதலை ஆகியிருக்க வேண்டியது. ஒடிஷாவில் ஆளுங்கட்சி எம்.எல்.ஏவைக் கடத்திய மாவோயிஸ்ட்கள், சிறையில் இருக்கும் தங்கள் அமைப்பைச் சேர்ந்த 25 பேரின் விடுதலைக்கு ஒப்புதல்*

Radjaramane@TTTm

வாங்கிக்கொண்டே அவரை விடுவித்தனர். அதில் 6 பேர் இப்போது விடுதலையும் ஆகிவிட்டனர். அந்த ஒடிஷா வெற்றிதான் அவர்களை சட்டீஸ்கரில் இப்படி செய்யத் தூண்டியது.

ஆனால் பழங்குடி மக்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வோடு சேவை செய்த அலெக்ஸை அவர்கள் கடத்தியது தப்பாகி விட்டது. மாவோயிஸ்ட்களுக்கு புகலிடம் அளிக்கும் பழங்குடியினர் இதை எதிர்த்தனர். அனுதாபிகளும் வெளிப்படையாக கண்டித்தனர். தூதர்களாக தங்களிடம் பேச வரச் சொல்லி மாவோயிஸ்ட்கள் கேட்டுக்கொண்ட இரண்டு பேர் வர மறுத்தனர். இதெல்லாம் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே அவர்களைப் பின்வாங்க வைத்துவிட்டது. 'நிலைமை சாதகமாக இல்லை. எனவே பேச்சுவார்த்தையில் முரண்டு பிடிக்க வேண்டாம்' என்று தண்டகாரண்யா மாவோயிஸ்ட் கமிட்டிக்கு தலைமையிலிருந்து கட்டளை வந்துவிட்டது.

பேராசிரியர் பி.டி.சர்மா, ஹர்கோபால் என இரண்டு தூதர்கள் மாவோயிஸ்ட்களிடம் பேசினர். முதலில் சிறையிலிருக்கும் தங்கள் அமைப்பினர் 17 பேரின் விடுதலையைக் கோரிய அவர்கள், அதன்பின் இன்னும் 8 பெயர்களைக் கொடுத்தனர். ஆனால் அரசு இதற்கு சம்மதிக்கவில்லை. காடுகளில் தேடுதல் வேட்டை மட்டும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. 'மாவோயிஸ்ட்கள் தேடுதல் வேட்டையின்போது பிடிபட்டு சிறைகளில் இருப்பவர்களின் வழக்குகளை மறுபரிசீலனை செய்ய உயர்மட்ட கமிட்டி அமைக்க வேண்டும். உறவினர்கள்கூட வந்து பார்க்க முடியாத தூரத்து சிறைகளில் பலர் இருக்கிறார்கள். அப்பாவிகள் ஏராளமானோர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதையெல்லாம் அந்தக் கமிட்டி பரிசீலிக்க வேண்டும்' என்ற கோரிக்கை மட்டும் ஏற்கப்பட்டது. இதன்பின் அலெக்ஸ் விடுதலை ஆவதில் எந்தப் பிரச்னையும் இருக்கவில்லை.



சுக்மாவிலிருந்து 80 கி.மீ. தொலைவில் இருக்கும் சிந்தல்நார், மாவோயிஸ்ட் கோட்டையின் கதவு என்று அழைக்கப்படுகிறது. இங்கிருந்து தட்மெட்லா சாலையில் பயணித்த தூதர்களை ஒரு இடத்தில் மடக்கிய மாவோயிஸ்ட்கள், தங்கள் மறைவிடத்துக்கு அழைத்துச் சென்றனர். அலெக்ஸ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். இரவு நெருங்கும் நேரத்திலேயே அவர்களை காட்டை விட்டு வெளியேற மாவோயிஸ்ட்கள் அனும

Radjaramane@TTT



தித்தனர். அலெக்ஸை விடுவித்ததும் பாதுகாப்புப்படை காட்டுக்குள் நுழைந்து தங்களை வேட்டையாடுவதைத் தவிர்க்கவே, இப்படிச் செய்தார்கள் அவர்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் இதே சிந்தல்நாரில்தான் மாவோயிஸ்ட்கள் தாக்குதல் நடத்தி மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் 76 பேரைக் கொன்றனர். அந்த இடத்தில் இப்போது பாரா மிலிட்டரி கேம்ப் அமைக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட இரவில் இங்குதான் தங்கினார் அலெக்ஸ். இரவில் ஹெலிகாப்டரில் பயணிக்க முடியாது. இரவில் சாலை வழியாக சுக்மா வருவதும் ரிஸ்க். தங்கள் ஆதிக்கத்தில் இருக்கும் இந்தப் பகுதி சாலைகளில் மாவோயிஸ்ட்கள் கண்ணிவெடி புதைத்து வைத்திருப்பார்கள்.

மீண்டு வந்ததும் மனைவி ஆஷாவுக்கு போன் செய்த அலெக்ஸ், "நான் நல்லா இருக்கேன். கவலைப்படாதே! நாளை வீட்டுக்கு வந்துவிடுவேன். அதுவரைக்கும் உன்னை கண்ட்ரோல் பண்ணிக்கோ!" என்றார். 12 நாட்களாக தூங்காமல், சரியாக சாப்பிடாமல் ரத்த அழுத்தம் குறைந்து அவதிப்பட்ட கர்ப்பிணி ஆஷா, மறுநாள் காலை கணவரைப் பார்த்தபிறகே நிம்மதி அடைந்தார்.

சட்டீஸ்கரில் சிறையில் இருக்கும் சாந்திப்ரியா ரெட்டி, மாலதி சௌத்ரி என்ற இரண்டு பெண் மாவோயிஸ்ட் தலைவர்கள், தங்களுக்கு ஜாமீன் கேட்டு கோர்ட்டில் மனு செய்திருக்கிறார்கள். மாவோயிஸ்ட்கள் விடுவிக்கும்படி கேட்ட 8 பேரில் இவர்களும் அடக்கம். இன்னொருபுறம், அலெக்ஸ் விடுதலை ஆன தகவல் வியாழன் மாலை 6.55க்கு கிடைத்ததும், ஐந்தே நிமிடங்களில் மாவோயிஸ்ட்கள் கேட்ட கமிட்டியை அமைத்திருக்கிறார் முதல்வர் ராமன் சிங். மாவோயிஸ்ட் பகுதிகளில் பணிபுரியும் அதிகாரிகளின் பாதுகாப்பு, இந்த கமிட்டியின் செயல்பாடுகளைப் பொறுத்தே இனி இருக்கும்!

**- அகஸ்டஸ்**

Radjaramane@TTT m

தரையில் ஸ்டார்கள் திரண்டதாலோ என்னவோ, சென்னை கடற்கரையை ஒட்டிய எம்.ஆர்.சி. நகரின் வான் பகுதியில் அன்று ஒரிஜினல் நட்சத்திரம் ஒன்றுகூட இல்லை. கோடம்பாக்கமே பீச்சுக்கு இடம் பெயர்ந்தது போல் திரை நட்சத்திரங்கள் குழுமியிருந்தது நாட்டாமை வீட்டுக் கல்யாணத்துக்கு! இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமாரின் மூத்த மகள் ஜனனிக்கும் சத்தீஷ்குமாருக்கும் கடந்த வியாழன் காலையில் திருமணம்; மாலையில் வரவேற்பு.





Radjaramane@TTT






# சினேகாவுக்கு அட்வான்ஸ் வாழ்த்து...



Radjaramane@TTTm







★ மேடையிலும் சரி, மண்டபத்திற்குள்ளும் சரி பம்பரமாகச் சுழன்று வந்தவர்களை வரவேற்று உபசரித்தது, ஆரம்பத்தில் ரவிக்குமாரிடம் உதவி இயக்குனராக இருந்த சேரன். வி.ஐ.பி.க்களை கூட்டிச் செல்லும் பொறுப்பை ரமேஷ் கண்ணா எடுத்துக் கொண்டார்.

★ மணிரத்னம் சுஹாசினியுடனும், பிரபு மனைவியுடனும் ஒரே லிஃப்ட்டில் வந்தார்கள். "லேசா வெயிட் போட்டிருக்கீங்க போல" என சுஹாசினியைப் பார்த்து பிரபு கூற, பதிலுக்கு சுஹாசினி "வெயிட் பத்தி நீங்க பேசறீங்களா?" என்றதும் குபீர் சிரிப்பு. வெட்கத்தில் நெளிந்தார் பிரபுவின் மனைவி.

★ கிட்டத்தட்ட மணமக்கள் போலவே பளபள பட்டில் ஜோடியாக வந்திருந்தார்கள் பிரசன்னாவும் சினேகாவும். 'அடுத்த வாரம் நீங்களா?' என அவர்களுக்குக் கிடைத்தது ஏகப்பட்ட அட்வான்ஸ் வாழ்த்துக்கள். தம்பதி சகிதமாக வந்து கூட்டத்தைத் தங்கள் பக்கம் திருப்பிய இன்னொரு ஜோடி சிம்ரனும் அவரது கணவரும்.

★ உதயநிதி ஸ்டாலின் மனைவியுடன் வந்து வாழ்த்திவிட்டு இறங்கியதும் ஆட்டோகிராப் கேட்டு சூழ்ந்து கொண்டார்கள் ஏகப்பட்ட பொடிசுகள்.

★ மனைவியுடன் வந்திருந்தார் கவுண்டமணி. "மண்டைய பொளக்குற மத்தியான வெயில்ல வச்சிட்டீங்களேப்பா" என்று மணமக்களிடம் தமாஷ் பேசியவரிடம், "அதான் கறுப்பு கூலிங் கிளாசும் தொப்பியும் இருக்குல்ல" என்றார்






Radjaramane@TTT






கே.எஸ்.ஆர்.

★ உச்சி வெயிலில் முகூர்த்தம் என்றாலும் தாலிகட்டும் வேளையில் சரியாக மண்டபத்துக்குள் நுழைந்தார் சூப்பர்ஸ்டார். மணமேடையை அவர் நெருங்கியபோது 'சிங்கநடை போட்டு சிகரத்தில் ஏறு' என 'படையப்பா' பாடல் ஒலித்தது. சிங்கிளாக, சிம்பிளாக வந்து வாழ்த்திவிட்டு அவர் கிளம்ப, மாலையில் நடந்த வரவேற்புக்கு செளந்தர்யா அஸ்வினுடனும், ஐஸ்வர்யா தனியாகவும் வந்து போனார்கள்.

★ கேரளாவிலிருந்து வந்திருந்தார் பத்மப்ரியா. ஜெயம் ராஜா அவரது காதோரம் ஏதோ கிசுகிசுக்க, சரண்யாவும் பொன்வண்ணனும் "என்ன, கல்யாண வீட்டுல கால்ஷீட் கேக்குறாரா" என்றபடி கலாய்த்தார்கள்.

★ விஜய் வீட்டிலிருந்து சங்கீதாவும், அம்மா ஷோபாவும் வந்திருந்தார்கள். அதேபோல் தம்பி கார்த்தி அவரது மனைவி சகிதம் வர, சூர்யா தனியாக வந்திருந்தார்.

★ வடிவேலு நெப்போலியனுடன் மேடையை நெருங்க, கீழ்ப்புறம் நின்றிருந்தார் சிங்கமுத்து. "அண்ணே... நீங்களும் சேர்ந்துக்கலாமே" என ஒரு கேமராமேன் அவரைக் கூப்பிட, "பொண்ணு மாப்பிள்ளைய போட்டோ புடிப்பா; போற வர்றவங்களை ஏன் வம்புக் கிழுக்கற" என பொரிந்து விட்டு நகர்ந்தார்.

- அய்யனார் ராஜன்

படங்கள்: புதூர் சரவணன்




Radjaramane@TTTm

சொல்ல நினைக்கும்போதெல்லாம் ஏதாவது தடை வருகிறது. இந்நிலையில் விஜயாவின் ஒப்புதலோடு, அவளது தங்கைகள் ராதா, சீதாவுக்கு திருமண ஏற்பாடு வீட்டில் நடக்கிறது. ‘அவர்கள் திருமணம் நடக்கும் அதேவேளையில் கலைச்செல்வனோடு தனக்கும் திருமணம் நடக்கும்’ என எதிர்பார்ப்புகளை சுமக்கிறாள் விஜயா.

**இனி...)**

மொத்த குடும்பமும் மொட்டை மாடியில் கூடியிருந்தது. அம்மா பெரிய பாத்திரத்தில் சோறு, குழம்பு எல்லாவற்றையும் எடுத்து வந்து வைத்திருந்தாள். சோமசுந்தரம் அப்போதுதான் குளித்துவிட்டு, அவசரமாக உடைமாற்றிக் கொண்டு படியேறி வந்தார். பின்னாலேயே அவர் மனைவி தண்ணீர் குடத்தையும் சொம்பையும் தம்ளர்களையும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

‘‘கவிதா! ஒரு பையிலே நேந்திரம் சிப்ஸ் வாங்கி வெச்சிருக்கேன்... கீழே போய் அதை எடுத்துட்டு வா...’’ என்று கொஞ்சம் தணிந்த குரலில் சொன்னார்.

‘‘தேவகோட்டை கேரளா சிப்ஸ்ல வாங்கினதா டாடி...’’ என்றபடி எழுந்தாள்.

‘‘சத்தம் போடாம போன்னு சொன்னா ஊருக்கே சொல்லுவியா..?’’ என்று தலையில் தட்டினார். கவிதா சிரித்துக் கொண்டே கீழே ஓடினாள்.

‘‘ஆமாடா... சிப்ஸை கொண்டாந்த பிறகு அதை என்ன ஒளிச்சு வச்சு சாப்பிடுவியா? நல்லா சாப்பிட வேண்டியதுதானே... நம்ம கடை சிப்ஸ், சேவுதான் உனக்குத் தொண்டையில இறங்காது...’’ என்றார் அப்பா.

எல்லோரும் வட்டமாக உட்கார்ந்திருக்க அம்மா தட்டுகளை எடுத்து வைக்கத் தயாரானாள்.

‘‘இந்த ஆனந்த் பயலை எங்கே ஆளைக் காணலை..?’’ என்றார் அப்பா, கொஞ்சம் கவலையான குரலில்.

எல்லோரும் திருதிருவென்று விழிக்க, ‘‘அவன் பரீட்சைக்கு ஏதோ நோட்ஸ் வாங்கப் போறேன்னு சொல்லிட்டிருந்தான்... அதுக்காக போயிருப்பானோ என்னவோ..?’’ என்றாள் விஜயா.

விஜயாவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சீதா கிசுகிசுப்



‘‘கண்ணீர்ப் புகை குண்டு வீசுற இடத்துல ஏன் பெண்கள் கூட்டமா நிக்கறாங்க..?’’

‘‘சீரியல் பார்த்தும் சரியா அழுகை வரலைன்னு இங்கே வந்துருக்காங்களாம்..!’’

www.kungumam.co.in


Radjaramane@TTT

பான குரலில், “அக்கா... மாம்பழக் கலர் ஓகேயான்னு கேட்டுட்டியா..?” என்றாள்.

“என்ன... ஆனந்தைப் பற்றி வம்பா? உனக்கு அவன் தலையைத் திங்கலைன்னா சோறு இறங்காதே... அவன் நிஜமாவே நோட்ஸ் வாங்கத்தான் போயிருப்பான். ‘வர லேட்டாகும்னா பசியோட இருந்திராதே... பாண்டியன் பை நைட்ல பரோட்டா சாப்பிட்டுட்டு வா’ன்னு சொல்லியிருக்கேன்...” என்று சொல்லிக் கொண்டே அம்மா பரிமாறத் தொடங்கினாள்.

பொதுவாக ராத்திரி நேரத்தில் எல்லோருக்கும் டிபன்தான். சில வேளைகளில் சாதம், குழம்பு என்று மீந்து போனதை காலி செய்வதற்கு தோதாக, தொட்டுக் கொள்ள வானத்து நிலவை நம்பி மொட்டை மாடிக்கு இழுத்து வந்துவிடுவாள். இன்றைய ஸ்பெஷலாக வெங்காய வடகம், சுட்ட அப்பளம், கடையில் இருந்து கொண்டு வந்த காராசேவு என்று எல்லாம் தயாராக இருந்தன.

அம்மா கொடுத்த சுட்ட அப்பளத்தைக் கடித்துக் கொண்டே மீண்டும் விஜயாவின் காதைக் கடித்தாள் சீதா.

“சொல்லு... மாம்பழக் கலர் ஓகேயா..?”

“சும்மா இரு... சூழ்நிலை புரியாம!” என்றாள் விஜயா.

‘‘அப்ப கேட்ட அதே

Radjaramane@TTT

கேள்விதான்... யார் அந்த ஹீரோ..? நிச்சயதார்த்தத்துக்கு நாள் நெருங்கிடுச்சு தெரியுமில்லே... ஒரே நாளில் யாரையாவது கூட்டிட்டு வந்து நின்னு வீட்டை அதிர வச்சுடாதே...” என்றாள்.

‘‘சும்மா எதையாவது சொல்லிக்கிட்டிருக்காதே... சாப்பிடு!’’ என்று சீதாவின் தொடையை விஜயா கிள்ளிய நேரத்தில் வடகத்தை எடுக்கக் குனிந்த ரத்னவேலு காதில் ‘நிச்சயதார்த்தம்’ என்ற வார்த்தை விழ, சீதாவைப் பார்த்து சிரித்தார் பெரிதாக.

“பரவாயில்லையே... சீதாகூட கல்யாணம் பத்தி பேச ஆரம்பிச்சுட்டாளே. இவ பயந்ததைப் பார்த்து எனக்கெல்லாம் கொஞ்சம் கலக்கமாகத்தான் இருந்தது. இவளைத் தேத்தி தம்பிக்கு உரியவளா அனுப்பறதுக்குள்ள பெரும்பாடாகிடும்னு நினைச்சேன்... ஆனா என் தம்பி யோகக்காரன்தான்” என்றார்.

‘‘ஐயோ... சிக்கிட்டேனே! இவரு இதுக்கு திரைக்கதை எழுதி தம்பிகிட்டே கொடுத்து நூறு நாள் ஓட்டுவாரே. அக்கா... உன் மேட்டரைச் சொல்லிடட்டுமா? என்னைக் கொஞ்சம் காப்பாத்து...” என்று விஜயாவிடம் கிசுகிசுத்தாள் சீதா.

‘‘மாமா... சும்மா கேலி பேசாதீங்க. அவ நிச்சயத்துக்கு எடுத்த புடவை பத்தி பேசிக்கிட்டிருந்தா... அதைப் போய் நீங்க தப்பா புரிஞ்சுகிட்டீங்க...” என்றாள் விஜயா.

‘‘இல்ல விஜயா... சீதா மாம்பழக் கலரு சேலைன்னு சொன்னது எனக்கும் கேட்டுச்சு. என் தம்பி கிளிப்பச்சை கலருல சேலை எடுக்கச் சொன்னதை மீறி நீ மாம்பழக் கலரில் எடுத்ததைப் பத்தித்தானே சொல்லிக்கிட்டிருந்தே... அவன் ஒண்ணும் சொல்ல மாட்டான்...” என்ற ரத்னவேலு வாயை அப்பளத்தால் அடைத்தாள் மங்கை.

“சும்மா தொணதொணக்காம சாப்பிடுங்க. சின்னப் புள்ளைக ஏதாவது பேசுவாங்க... அதுல காதை நொழைச்சு ஒட்டுக் கேட்கறது நல்லாவா இருக்கு? வாங்க இந்தப் பக்கம்...” என்றாள் மங்கை.

“இல்ல மங்கை... நம்ம வடிவேல் ரெண்டு நாளா என்னை தொளைச்சு எடுக்கறான், சீதாவுக்கு சேலை புடிச்சிருக்கான்னு! நாளைக்குச் சொல்லிடுறேன்,



‘‘கண் ஆபரேஷனுக்கு அப்புறம் இப்ப உங்களுக்கு எப்படி இருக்கு..?’’
‘‘போயும் போயும் இந்த நர்ஸையா சைட் அடிச்சோம்னு தோணுது டாக்டர்..!’’

www.kungumam.co.in

Radjaramane@TTT m



ரொம்பப் புடிச்சிருக்குன்னு...'' என்றவர், பக்கத்தில் உட்கார்ந்திருந்த ராதா பக்கம் திரும்பினார்.

''ஆனா உங்காளு சுகுமார் இருக்கானே... நேத்திக்குக்கூட கல்லுக்கட்டி பக்கத்துல பார்த்தேன். ஒரு வார்த்தை உன்னைப் பத்தியோ, சேலையைப் பத்தியோ கேட்கலை. ஒருவேளை அவனுக்கு சேலை புடிச்சிருக்காதோ..?'' என்றார் சிரிப்போடு.

''மாமா... என் சேலை எனக்கே புடிக்கலை. மத்தவங்களைப் பத்தி நான் என்ன சொல்றது? ஒரு சேலை எடுக்கறதுக்குள்ளேயே, 'அந்த அளவுல எடு... இந்த விலையில எடு'ன்னு ஆயிரம் கண்டிஷன். சும்மா கதை பேசாதீங்க...'' என்று ஒரு சிலுப்பு சிலுப்பினாள் ராதா.

''சரி விடும்மா... உங்க பேச்சுக்கு நான் வரலை. மாமா... இன்னும் நாலே நாள்ல நிச்சயதார்த்தம்... சொல்ல வேண்டியவங்களுக்குச் சொல்லியாச்சு... யாராச்சும் விட்டுப் போயிருக்கான்னு ஒரு தடவை யோசிச்சுப் பார்த்திடுங்க... கடைசி நிமிஷத்துல கூப்பிடுற மாதிரி ஆகிடப் போகுது. சாப்பாடு கொஞ்சம் முன்னே பின்னே ஆனாலும் சமாளிச்சுக்கற மாதிரிதான் சமையல்காரர்கிட்டே பேசியிருக்கேன்'' என்றபடி நிச்சயதார்த்த ஏற்பாடுகள் பற்றி பேசத் தொடங்கி விட்டார் ரத்னவேலு.

''அக்கா... அவர் உனக்காகத்தான் சொல்றாரு. நீ பாட்டுக்கு கடைசி நிமிடத்தில் சொல்லி எங்களை கஷ்டப்படுத்திடாதே...'' என்று விஜயா காதில் கிசுகிசுத்தாள் சீதா.

Radjaramane@TTTm



ஆனந்த் சாப்பிட வரவில்லையே என்று மொத்தக் குடும்பமே கவலைப்பட்டுக் கொண்டிருந்த அதேநேரம், காரைக்குடி பழைய பஸ் ஸ்டாண்ட் தாண்டி பிள்ளையார்பட்டி ரோட்டில் கோயிலை ஒட்டி நின்றிருந்தான் அவன். பக்கத்தில் பதற்றமாக நின்று கொண்டிருந்தாள் நளினி.

“என்ன நளினி... திடீர்னு பாக்கணும்னு சொன்னதும் உனக்காக எதுவுமே வாங்கிட்டு வரமுடியலை தெரியுமா... என்ன விஷயம், இவ்ளோ பதற்றமா இருக்கே..?'' என்றான்.

நகத்தைக் கடித்துத் துப்பியபடி நின்றிருந்த நளினி, ‘‘இன்னிக்கு பேப்பர் பார்க்கலையா? கணக்கு பரீட்சை ரொம்ப டஃப்னு போட்டிருந்தாங்களே. நான் சும்மாவே பார்டர் கேஸ்... கொஸ்டீன் பேப்பர் வேற கஷ்டமா இருந்துதா... அதான் பயமா இருக்கு” என்றாள்.

“அட... இதுக்குப் போய் அலட்டிக்குவாங்களா? நான் கூடத்தான் அறிவியலில் நாற்பது வாங்கினேன்... நானெல்லாம் காலேஜில் படிக்கலையா..? அதுக்கெல்லாம் பயப்படாதே...” என்றான் ஆதரமாக அவள் கைகளைப் பற்றியபடி.

“உனக்குப் புரியாது... பத்தாவது ஃபெயில் ஆகிட்டேன்னா என்னை எங்க மாமனுக்கு கட்டி வெச்சிருவேன்னு எங்கப்பா சொல்லியிருக்காரு. எங்க மாமனுக்கு கட்டிக் கொடுத்துட்டா, நானும் அவன் கூடச் சேர்ந்து சாணி அள்ளிக்கிட்டு, பால் கறந்துக்கிட்டுத் திரியணும். அதை நினைச்சாத்தான் பக்குன்னு இருக்கு” என்றாள்.

“அப்படியெல்லாம் விட்டுருவோமா... தூக்கிட்டுப் போய் தாலியைக் கட்டிற மாட்டோம்... அதுக்கெல்லாம் ஆளு இருக்காங்க நமக்கு!'' என்றான் ஆனந்த்.

“நீ சொல்லிக்கிட்டே இருக்க வேண்டியதுதான். ஆவணி மாசம் எங்க மாமன் வந்து மாட்டுக்கு மூக்கணாங்கயிறு போடுற மாதிரி தாலியைப் பூட்டி, ஓட்டிக்கிட்டுப் போயிடப் போறான். ரிசல்ட் வந்ததும் அதுதான் நடக்கப் போகுது...” என்றாள் நளினி. அவளுடைய கண்கள் லேசாகக் கலங்கி இருந்ததைப் பார்த்ததும் பதறி விட்டான் ஆனந்த்.

Radjaramane@TTTm



"நளினி... என்ன இது சின்னப் புள்ள மாதிரி அழுதுக்கிட்டு? உனக்கு ரிசல்ட் வர்ற அன்னிக்கு நமக்கு கல்யாணம்... ஓகேவா..?" என்றான்.

பளிச்சென்று தோளில் சாய்ந்து கொண்ட நளினி, "அப்படின்னா இப்பவே பரிசத்தை போட்டுக்க வேண்டியதுதானே?" என்றாள்.

"பரிசம்னா..?" என்றான் ஆனந்த் புரியாமல்.

"ஆமா... வர்ற வெள்ளிக்கிழமை சிவன் கோயிலுக்கு வா. அங்க வச்சு ரெண்டு பேரும் பாக்கு வெத்தலை மாத்திக்குவோம். ஒரு தேங்காய்ப் பழத் தட்டு வாங்கி அர்ச்சனை பண்ணிக்குவோம்... அப்புறம் எப்போ வேணா தாலி கட்டு!" என்றாள்.

"நிச்சயமா வர்றேன்... நீ நிம்மதியா புறப்படு" என்றான் நளினியின் கைகளை அழுத்தி நம்பிக்கை கொடுத்தபடி.

"பரிசத்துக்கு பட்டுச் சேலை உண்டா..." என்றாள் கண்களைச் சிமிட்டியபடி.

ஒரு கணம் திகைத்த ஆனந்த் அடுத்த நொடியே சுதாரித்துக் கொண்டு, "பட்டுச் சேலை இல்லாமலா... மாம்பழக் கலர் உனக்கு எடுப்பா இருக்கும். என்ன சொல்றே? பரிசத்துக்கு அச்சாரமா பாண்டியன் பை நைட்ல பரோட்டாவும் தலைக் கறியும் சாப்பிடுவோமா..?" என்றான்.

"டபுள் ஓகே..." என்ற நளினி சைக்கிளை எடுக்க, அவளை உட்கார வைத்து சைக்கிளை அழுத்தினான் ஆனந்த். அவன் மனம் அந்தக் கணத்தில் பீரோவுக்குள் உறங்கிக் கொண்டிருந்த விஜயாவின் புது மாம்பழ நிற பட்டுச் சேலைக்குப் பக்கத்தில் சென்று விட்டிருந்தது.

**(தொடரும்)**

படங்கள்: **புதூர் சரவணன்**



"தகவல் அறியும் உரிமைச் சட்டத்துல கபாலி என்ன கேட்டான்னு இன்ஸ்பெக்டர் இவ்ளோ டென்ஷனா இருக்காரு..?"

"ஊருக்குள்ள இன்னும் எந்தெந்த வீடுகள்ல திருடு போகலைன்னு லிஸ்ட் கேட்கறான்..!"

**- அம்பை தேவா, சேரன்மகாதேவி.**

Radjaramane@TTT

# பரணி கார்த்திகையில் பிறந்தவர்கள் என்ன படிக்கலாம்?

மேஷ ராசியிலேயே பரணி நட்சத்திரக்காரர்கள் எந்தவொரு விஷயத்திற்கும் உடனடியாக ரீயாக்ட் செய்வார்கள். கோடு போட்டால் ரோடு போடும் குணத்தை பள்ளிப் பருவத்திலேயே காணலாம். இந்த நட்சத்திரத்தை சுக்கிரன் ஆள்கிறார். எனவே எப்போதும் பரபரப்பும் துறுதுறுப்பும் இருக்கும். படிப்பை விட ஆடல், பாடல், கதை என கலைகளில் ஆர்வம் காட்டி ஜெயிக்கவும் செய்வார்கள்.

இந்த நட்சத்திரத்தில் பிறந்த குழந்தைகளின் ஜாதகத்தில் சுக்கிரன் நன்றாக இருந்தால் வாழ்க்கை ரம்யமாகச் செல்லும். ‘‘பையன் படிக்கவே வேணாம். அவன் கிட்ட இருக்கற திறமைக்கு எதிர்காலத்துல பெரிய பாடகராவோ, நடிகராவோ வந்துடுவான்’’ என்று பள்ளிப் பருவத்திலேயே சொல்லி விடுவார்கள். சுக்கிரன் மறைந்தாலோ, அல்லது பலவீனமாக இருந்தாலோ கொஞ்சம் குழம்பியபடி இருப்பார்கள். கூடா பழக்கத்தால் பாதை மாறுவார்கள். குடும்பக் கஷ்டம் தெரியாமல் வளர்வார்கள். விவரம் தெரியாமல் ஏதாவது வில்லங்கத்தில் சிக்கிக் கொள்வார்கள்.

பிரச்னை தீர்க்கும் திருத்தலங்கள்

முனைவர் **கே.பி.வித்யாதரன்**

Radjaramane@TTTm



Radjaramane@TTT



பரணி நட்சத்திரத்தின் முதல் பாதத்தில் பிறந்தவர்களுக்கு ஏறக் குறைய 19 வயது வரை சுக்கிர தசைதான் நடக்கும். கௌரவமாக மதிப்பெண் எடுப்பார்கள். எப்போதும் நண்பர்களால் சூழப்பட்டு இருப்பார் கள். சின்ன வயதிலேயே பிரபலமாக முயற்சிப்பார்கள். தடங்கல் இல் லாமல் படிப்பு நகரும். பள்ளியில் எல் லாப் போட்டிகளிலும் இவர்கள் பெயர் இருக்கும். எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளத் துடிப்பார்கள். எதையும் மிகைப்படுத்திப் பார்க்கும் குணமும் இருக்கும். 10ம் வகுப்பு படிக்கும் போது நிறைய நண்பர்கள் இருப் பார்கள். பிறகு காதலால் கவனம் சிதறும். எனவே, ஜாக்கிரதையாக இருங்கள். பெற்றோர் சரியான வழி காட்ட வேண்டும். ஏனெனில், இந்த காலகட்டம்தான் சுக்கிர தசையின் இரண்டாம் பாகமாக இருக்கும். சுக்கிரன் அதீதமாக ஆளுவார். ஹார் மோன்களின் கலாட்டா மிதமிஞ்சி யிருக்கும். கல்லூரியில் இரண்டாம் வருடம் படிக்கும்போது சூரிய தசை தொடங்கும். கொஞ்சம் நிதானம் பெறுவார்கள். அரசியல், நிர்வாகம் சார்ந்த படிப்புகளைத் தேர்ந்தெடுக் கலாம். மருத்துவத் துறையில் கண், நரம்பு, முகம் சம்பந்தமான துறை சரி யாக வரும். எம்.பி.ஏ. படிப்பில் ஹெச். ஆர். துறை ஏற்றது. பொறியியல் எனில் சிவில் நல்ல எதிர்காலத்தைக் கொடுக்கும்.

இரண்டாம் பாதத்தில் பிறந்த

Radjaramane@TTT



வர்களிடம் சூட்சும புத்தி அதிகம் இருக்கும். சிறிய வயதிலிருந்தே எதிலும் வேகம் காட்டுவார்கள். நாலு பேருக்கு முன்னால் அடித்தாலோ, திட்டினாலோ தாழ்வு மனப்பான்மைக்குள் சிக்கிக் கொள்வார்கள். கணக்கு எப்போதும் சவாலாக இருக்கும். ஆசிரியர் சரியாக சொல்லித் தரவில்லை என அவ்வப்போது நண்பர்களிடம் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். ஆசிரியரைப் பொறுத்து அந்தந்த பாடங்களில் கவனம் காட்டுவார்கள். யாரேனும் ஒருவரை முன்மாதிரியாகக் கொண்டு வளர்வார்கள். 12 வயது வரை சுக்கிர தசை நடப்பதால் பள்ளிப்பருவம் மறக்க முடியாததாக இருக்கும். ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது கல்வித் தடை வந்து நீங்கும். ஹாஸ்டலா, வீடா என்று வீட்டிலுள்ளோர் குழப்புவார்கள். 13 வயது முதல் சூரிய தசை நடக்கும்போது உலக அனுபவங்களும், ஒரு பெரிய மனுஷத்தனமும் வரத் தொடங்கும். ''விளையாட்டுப் பிள்ளையா இருந்தான். அப்படியே மாறிட்டானே'' என்று வியப்பார்கள். பள்ளியிலும், கல்லூரியிலும் பொருளாதாரம், புள்ளியியல் போன்ற படிப்புகளைத் தேர்ந்தெடுங்கள். அதேபோல கட்டிட திட்ட வரைபடத் தயாரிப்பு, ஆர்க்கிடெக்ட், விஸ்காம் போன்றவையும் வளமான எதிர்காலம் தரும். கலைத்துறை எனில் ஓவியம் மிக நன்று.

குங்குமம்
14.5.2012

சிமிழ்-35 பொட்டு-21

குங்குமம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட்டிற்காக சென்னை-600 096, பெருங்குடி, நேரு நகர், முதல் பிரதான சாலை, பிளாட் எண்.170, எண்.10, தினகரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும்

ஆசிரியர்
**முகமது இஸ்ரத்**
229, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை-600004.

---

முதன்மை ஆசிரியர்
**தி.முருகன்**
தலைமை நிருபர்கள்
**வேணுஜி, வெ.நீலகண்டன்**
**அய்யனார் ராஜன்**
தலைமை உதவி ஆசிரியர்
**கோகுலவாச நவநீதன்**
நிருபர்கள்
**டி.ரஞ்சித், அமலன்**
உதவி ஆசிரியர்
**சி.பரத்**
முதன்மை புகைப்படக்காரர்
**புதூர் சரவணன்**
உதவி புகைப்படக்காரர்
**ஆர்.சந்திரசேகர்**
சீஃப் டிசைனர்
**பி.வி.**
தலைமை ஓவியர்
**அரஸ்**
டிசைன் டீம்
**ஆர்.மனோஜ், ஜி.சுரேஷ்**
**ஏ.எஸ்.சரவணன், எம்.முருகன்**
**ஜெ.மோகன்**


---


கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.

பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகள் அவர்களின் சொந்தக் கருத்துகளே!

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு குங்குமம் நிர்வாகம் பொறுப்பல்ல.



Printed and published by Mohamed Israth on behalf of Kungumam Publications Pvt. Ltd. and printed at Dinakaran Press, Plot No.170, No.10, First Main Road, Nehru Nagar, Perungudi, Chennai-600 096 and published at 229, Kutchery Road, Mylapore, Chennai-600004.
**Editor: Mohamed Israth**





Radjaramane@TTT

**வெ**ற்றிக்கொடி கட்ட, தான் பிறந்த மண்ணையே தேர்ந்தெடுத்த கோவிந்த ராகுவின், ‘வெளிநாட்டில் போய்த்தான் வேர்வை சிந்தணுமா?’ என்ற கேள்வி முகத்திலடித்தாற் போல ‘நச்’சென்று இருந்தது.

***- கவியகம் காஜாஸ், கரூர்.***

**க**னவு நாயகனாக கார்த்தியை வரித்திருக்கும் இளைஞர்களெல்லாம் காலரை தூக்கி விட்டுக் கொள்ளும்படி தன் வாழ்க்கை அனுபவங்களை ஒளிவு மறைவின்றி நம்முடன் பகிர்ந்து கொண்டிருக்கிறார். இந்த வெள்ளந்தி மனது, நிச்சயம் கார்த்திக்கு பெருமை சேர்க்கும்!

***- மணி.வசந்தபுன்னகை, செங்குந்தபுரம்.***

‘**உ**லக புத்தக தினம்’ அன்று மெரினாவில் மனுஷ்ய புத்திரன் கண்ட அனுபவத்தைப் படித்து மனம் துடித்தது. படிப்பவர்களும், கவிதை வாசிப்பவர்களும் குடிகாரர்களை விட கேவலமானவர்களா என்ன?

***- எஸ்.இலக்கியதாசன், சேலம்.***

**த**டகளத்தில் முன்னேறி, திரைப்படத்தில் நாயகியும் ஆகியிருக்கும் ‘ரோல்மாடல்’ காயத்ரியின் இரண்டு கனவுகளும் விரைவில் நிறைவேற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்!

***- வி.சி.வசந்தா, சென்னை-61.***

‘**கா**தலிக்க நேரமில்லை’ன்னு சொல்லித்தான் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா த்ரிஷா ‘கல்யாணத்துக்கு நேரமில்லை’ன்னு சொல்றது புது பழமொழியா இருக்கே?!

Radjaramane@TTT om

அப்போ கல்யாணம் பண்ணிக்கறவங்க எல்லாம் சான்ஸ் இல்லாம வெட்டியா இருக்காங்கன்னு அர்த்தமா? (கலவரத்தை எல்லாம் இப்படித்தான் கிளப்பணும்!)

***- எஸ்.கோபாலன், சென்னை-61.***

ஒரு கிராம், ரெண்டு கிராம்ல மோதிரம் வாங்கவே நாங்க ஒன்பது பேங்க்ல லோன் போட வேண்டியிருக்கு. நீங்க 364 கோடி ரூபாய் வைர மோதிரத்தைக் காட்டி எங்கள வயிறெரிய வச்சுட்டீங்க சாமி... ரொம்ப தேங்க்ஸ்!

***- இரா.கமலக்கண்ணன், சித்தோடு.***




டீ தேசிய பானம் ஆவது பெருமைதான்... ஆனா ஏற்கனவே தேசிய விளையாட்டா இருக்குற ஹாக்கி, தேசிய விலங்கா இருக்குற புலி... இதுக நிலைமையை நினைச்சாத்தான் கவலையா இருக்கு. அரசாங்கம் நம்மளை வச்சு காமெடி கீமெடி பண்ணலையே?

***- வி.ராமு, சென்னை-109.***

வைக்கோல், மாடுகள் திங்கத்தான் என்று நினைத்திருந்த நான், வீடு கட்டவும் அது பயன்படும் என்ற வினோத செய்தி படித்து வியந்தேன். இதுக்கெல்லாம் வைக்கோல்லயே ரூம் போட்டு யோசிப்பாய்ங்களோ!

***- எம்.ஆர்.அனுஷா, பெங்களூரு.***

நேரம் தவறாமல் கரெக்டாக கட் ஆகும் மின்சாரம் போல உங்கள் 'பவர் கட் ஸ்டோரி'களும் படு டைமிங்.

***- எச்.வந்தனா, கன்னியாகுமரி.***

கலைச்செல்வனிடம் விஜயா டீச்சர் தன் மனதைப் போட்டு உடைக்கப் போகும் அந்தத் தருணத்தில் தானா ஹெட் மாஸ்டர் கூப்பிட்டு அனுப்புவார்? சொல்லுங்க எஜமான், சொல்லுங்க... இந்த ஹெட் மாஸ்டர்களே இப்படித்தானா?

***- வி.பிரமிளா, திருவண்ணாமலை.***

**ஆசிரியர் பிரிவு முகவரி:**
229, கச்சேரி ரோடு, மயிலாப்பூர்,
சென்னை-600004.
தொலைபேசி: 42209191 தொலைநகல்: 42209110
மின்னஞ்சல்: **editor@kungumam.co.in**
படைப்புகளை தபாலிலும் அனுப்பலாம்.
மின்னஞ்சல் செய்ய: **editor@kungumam.co.in**

வலைத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்கள்:
www.kungumam.co.in

**சந்தா விவரங்களுக்கு:**
தொலைபேசி: 42209191 Extn 2232
மின்னஞ்சல்: **subscription@kungumam.co.in**
**விளம்பரங்களுக்கு:**
தொலைபேசி: 44676767 Extn 13234.
மின்னஞ்சல்: **advts@kungumam.co.in**

twitter.com/Kungumammagazine
facebook.com/Kungumammagazine

Radjaramane@TTT m



# நிழல்கள் நடந்த பாதை

Radjaramane@TTT



## சம்மர் கிளாஸ் நாடகங்கள்...

நகரங்களில் வேலைக்குப் போகும் பெற்றோர்களுக்கு கோடை விடுமுறையில் குழந்தைகளை என்ன செய்வதென்பது இன்று பெரும் பிரச்னை. இன்னொருபுறம் இந்த லீவில் குழந்தைகளை சகல கலா வல்லவர்களாகவும் மேதைகளாகவும் எப்படி மாற்றுவதென்று சதித் திட்டம் தீட்டுகின்றனர். ஏப்ரல், மே மாதங்களில் பெருநகரங்களில் சம்மர் கிளாஸ் பிசினஸ் தூள் பறக்கிறது. எதற்குத்தான் சம்மர் கிளாஸ் என்று வரன்முறை இல்லாமல் எதை எதையோ இப்போது பாடத் திட்டத்திற்குள் கொண்டு வந்துவிட்டார்கள்.

ஒரு மாட்டைக் கொண்டு வந்து கட்டிப் போட்டு பால் கறப்பது எப்படி என்று குழந்தைகளுக்குக் காட்டுகிறார்கள். தயிருக்கு உறை

மனுஷ்ய புத்திரன்

Radjaramane@TTT

குத்துவது, துணி துவைப்பது, புற நகரில் இருக்கும் ஒரு பண்ணைக்கு கூட்டிப் போய் ஒரு எருமை மாட்டைக் காட்டி 'இதுதான் எருமை மாடு' என்று சொல்வது, பல்லாங்குழி, பரமபதம் விளையாடுவது, கதை சொல்வது, நாட்டுப்புறக் கலை, கிளாசிக்கல் டான்ஸ், மியூசிக், ஜிம்னாஸ்டிக், குதிரையேற்றம், நீச்சல், கிரிக்கெட், ஒரு விதையை ஊன்றி அதில் தண்ணீர் ஊற்றுவது... இப்படி 4 வயதுக் குழந்தைகளுக்கு சொல்லித் தர என்னதான் இல்லை?

கவிதை எழுதுவது, சிறுபத்திரிகை நடத்துவது போன்றவற்றிற்கு ஏதாவது சம்மர் கிளாஸ் ஆரம்பிக்கலாமா என்று நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

ஒரு நாளைக்கு இருநூறு ரூபாயில் தொடங்கி ஐந்நூறு ரூபாய் வரைகூட கட்டணம் வசூலிக்கும் சம்மர் கிளாஸ்கள் நடத்தப்படுகின்றன. ஒரு வாரம், இரண்டு வாரம் என்று கோர்ஸ்கள் நடத்தப்படுகின்றன. இந்தக் குறுகிய காலத்தில் தினமும் ஓரிரு மணி நேரங்கள் செலவிட்டு குழந்தைகள் எதையாவது கற்றுக் கொள்ளமுடியுமா என்று யாரும் யோசிப்பதில்லை. குழந்தைகள் தொடர்பாக இன்றைய பெற்றோர்களுக்கு இருக்கும் மூளைக்கோளாறுகளுக்கு எல்லையே இல்லை என்பதைத்தான் இந்த சம்மர் கிளாஸ் மோகம் காட்டுகிறது.

நகரங்களில் வளரும் குழந்தைகளுக்கு கதைகள் சொல்ல வீடுகளில் பெரியவர்கள் இல்லை; விளையாடுவதற்கு வீட்டில் இடம் இல்லை; அண்டை வீட்டார்கள் யாரும் யாருக்கும் கதவு திறப்பதில்லை; குழந்தைகள் தெருவில் சென்று விளையாடுவது பாதுகாப்பற்றதாக மாறிவிட்டது. வருடம் முழுக்க வீட்டையும் பள்ளியையும் தவிர வேறு எதையும் அறியாத குழந்தைகள் விடுமுறையை அனுபவிக்க நகரங்களில் எந்த வழியும் இல்லை. இந்த விடுமுறை நாட்களில் நிரம்பி வழியும் கடற்கரையையும், தியேட்டர்களையும், உணவகங்களையும்,

"செக்ஸ் குற்றச்சாட்டு யார் மீதுதான் இல்லை? புகார் கொடுக்கணும்னா, திருமணமாகி பிள்ளை பெற்ற அத்தனை பேர் மீதும் செக்ஸ் புகார் கொடுக்கலாம். ஒரு பொம்பளை பிள்ளைகிட்ட பேசுறது தப்பா? மதுரையை ஆண்ட கூன்பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசிதானே திருஞானசம்பந்தரை அழைத்து வந்து மதுரை ஆதீன மடத்தையே தொடங்கினார்?"

**- நித்யானந்தா பற்றி மதுரை ஆதீனம்**

**அப்ப ரஞ்சிதாதான் நவீன மங்கையர்க்கரசியா? மதுரை மறுபடி ஏன் எரியாம இருக்குன்னே புரியல...**

Radjaramane@TTT



நகரத்தில் பார்க்க எதுவுமே இல்லை. விலங்குகளோ, பறவைகளோ, குளங்களோ, கிணறுகளோ இல்லாத நகரங்கள் நமது குழந்தைகளின் மனதை காயடித்துக்கொண்டிருக்கின்றன. ஒரு உயிருள்ள கோழியையோ, ஆட்டுக் குட்டியையோ பார்க்காத எவ்வளவு குழந்தைகள் நகரங்களில் வளர்கிறார்கள். மலைகளையும் பெரிய வெட்டவெளிகளையும் அருவிகளையும் டிவியில் மட்டுமே எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருப்பார்கள்?

பயணமும் புதிய இடங்களைப் பார்க்கும் அனுபவமும்தான் ஒரு குழந்தையின் மனதையும் அறிவையும் விரிவடையச் செய்யும். கிராமத்துத் தெருக்களில் நூற்றுக்கணக்கான குழந்தைகளோடு விளையாடும் அனுபவமின்றி வளரும் குழந்தைகளைப் பார்க்கும்போது வருத்தமே மிஞ்சுகிறது. நமது குழந்தைப் பருவத்தில் நமது கோடைகளைக் கொண்டாட என்னவெல்லாமோ இருந்தன. இன்றைய குழந்தைகள் 'எப்படா ஸ்கூல் திறக்கும்' என்று போரடித்துக்கொண்டு வீட்டில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

ஷாப்பிங் மால்களையும், தீம் பார்க்குகளையும் பார்க்கும்போது அவை மனிதர்கள் நடமாடத் தகுதியில்லாத இடங்களாக மாறிவிட்டனவோ எனத் தோன்றுகிறது. பணம் கறக்க என்னவெல்லாமோ வழிகள்!

'கோடை விடுமுறைக்கு குழந்தைகளை ஊருக்குக் கூட்டிப் போகவில்லையா' என்று நண்பர்களிடம் கேட்டால், 'டிரெயினில் டிக்கெட் கிடைக்கவில்லை' என்கிறார்கள். அல்லது 'ஊரில் கரன்ட் இல்லை' என்கிறார்கள்.

விடுமுறையில் குழந்தைகளை வீடுகளில் அடைத்து வைப்பதோ... அல்லது அவர்களை சம்மர் கிளாஸ் என்ற பெயரில் எங்காவது தள்ளிவிடுவதோ அவர்களுக்குச் செய்யும் அநீதி. குழந்தைகளுக்கு உண்மையில் இந்த

## சிவப்பதிகாரம்

தினமும் ஏதாவது ஒரு மீட்டிங் அல்லது டி.வி. ஷூட்டிங்

Radjaramane@TTT

வந்துவிடுகிறது. ஸ்டுடியோவுக்கு போனால் பிரச்னை இல்லை... நன்றாக அலங்கரித்துக் கொண்டு போய் உட்கார வைப்பார்கள். சில சமயம் வீட்டிற்கோ, அலுவலகத்திற்கோ வந்துவிட்டால் எண்ணெயும் வியர்வையும் வழியும் முகத்துடன் பேசத் தொடங்கும் போது கொஞ்சம் தன்னம்பிக்கை குறைச்சலாக உணர்வேன். புரட்சிகரக் கருத்துக்களைச் சொல்லும் போது வேகம் தணிந்தாற் போல் இருக்கும். மேடையில் இருக்கும் போது ஏதோ எல்லோரும் என் முகத்தையே பார்ப்பதுபோல ஒரு கற்பனை.

முக ஒப்பனைக்காக ஒரு கிரீம் வாங்க வேண்டும் என்று ரொம்ப நாள் திட்டம். இரண்டு வாரங்களுக்கு முன்பு அது நிறைவேறியது. அந்த அழகுசாதனப் பொருள்கள் விற்கும் கடைப் பெண், எனக்கு முகத்தில் பூசும் ஒரு கிரீமும் அதன் மேல் தடவக்கூடிய ஒரு பவுடரும் பரிந்துரைத்தாள். கடன் அட்டையைப் பயன்படுத்தி வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்ததும்தான் விலையைப் பார்த்தேன். தூக்கி வாரிப்போட்டது! கிரீமின் விலை 1200 ரூபாய். பவுடரின் விலை 900 ரூபாய். திருப்பிக் கொண்டு போய் கொடுத்தால் அசிங்கமாகப் போய்விடும். அந்தப் பெண் வேறு, “சார்... நீங்க ரைட்டர் தானே” என்று வாங்கும்போது அடையாளம் கண்டு கேட்டாள்.

என் அதிர்ச்சியை மறக்க அழகு சாதனப் பொருள்களின் வகைகள், விலைகள் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினேன். ‘சிவப்பாகவோ அல்லது வெளுப்பாகவோ இருப்பதுதான் அழகு’ என்ற ஒரு எளிய உளவியல் சிக்கல் இன்று பல்லாயிரம் கோடி ரூபாய் பிசினஸ். அழகு, ஆரோக்கியம் என்ற இரண்டு சொற்களால் நீங்கள் யாரை வேண்டுமானாலும் பைத்தியமாக்கலாம்.

அழகுசாதனப் பொருள்கள் பற்றிய எனது ஆராய்ச்சியில், ஒரு இடத்தில் ஒரு விளம்பரத்தைப் பார்த்து திகைத்து நின்றுவிட்டேன். Clean and Dry Intimate Wash cream விளம்பரம் அது. பெண்களின் அந்தரங்க உறுப்பை ஆரோக்கியமாக சிவப்பழகுடன் வைத்துக்கொண்டால் ஆண்கள் சந்தோஷப்படுவார்கள் என்று அந்த விளம்பரம் சொல்கிறது. முகத்தில் தொடங்கிய அழகுணர்ச்சி எங்கேயோ வந்துவிட்டது. யார் கண்டது... இன்னும் சில வருடங்களில் பெண் பார்க்கும் போதே, பெண்ணுறுப்பின் நிறம் பற்றிய தகவலும் ஆண்களுக்குத் தேவைப்படலாம். அதையும் சிவப்பழகுடன் பாதுகாக்க வேண்டும் என இந்திய ஆண்கள் ஆசைப்படுகிறார்கள் என்றால், அதை நிறைவேற்ற நமது பெண்கள் ஆயத்தமாகிவிட்டார்கள் என்றால், உடல் குறித்த நமது வக்கிரம்

Radjaramane@TTT

இந்த வார புத்தகம்

## பூச்சிகளின் தேசம்

**கோவை சதாசிவம்**

எங்காவது ஒரு அரவமற்ற வனாந்தி ரத்தில் அல்லது மலை உச்சியில் இருள் கவியும் நேரம் ஒரு கணம் தனியாக நின்றிருக்கிறீர்களா? நாம் பார்த்தறியாத எண்ணற்ற பூச்சிகளின் பாடல்கள் நம்மை திக்குமுக்காடச் செய்துவிடும். 'இந்தப் பிரபஞ்சத்தில் நாமும் ஒரு பூச்சியே' என்பதை அக் கணம் நமக்கு உணர்த்தும். ஆனால் நமக்கு இந்தப் பூச்சி




களின் பெயர்கூடத் தெரியாது. சதாசிவம் இந்த நூலில் பல்வேறு பூச்சிகள், தாவ ரங்கள் பற்றிய அரிய தகவல்களை உரை யாடல் முறையில் சுவாரசியமாக எழுதிச் செல்கிறார். கரையான்கள், எறும்புகள், நத்தைகள், தொட்டால்சுருங்கிச் செடி, கண்கொத்திப் பாம்பு, தும்பிகள், இன் னும் பல அபூர்வ உயிரினங்கள் பற்றி மிகுந்த ஈடுபாட்டை இந்த நூல் ஏற்படுத்துகிறது. புத்தகத்தின் தலைப்பு பொருத்தமானதல்ல. மனிதர்களுக்குத்தான் தேசங்கள் உண்டு. பூச்சிகளுக்கோ இந்த பூமியே சொந்தம்.

**(விலை ரூ.120/- வெளியீடு: வெளிச்சம், 1447, அவினாசி சாலை, பீளமேடு, கோவை-4.)**

எல்லையற்றதாக மாறிவிட்டது என்று அர்த்தம்.

நமது முன்னோர்கள் நிறத்தை அடிப்படையாகக் கொள்ளா விட்டாலும், வேறு வகையான அளவுகோல்களை அந்தரங்க உறுப் புகள் தொடர்பாக வரையறுத்திருக் கிறார்கள். காமசூத்ராவில் இதைப் பற்றிய விரிவான குறிப்புகள் வரு கின்றன. ஏற்கனவே மார்பகங்களை அழகாக்கிக் கொள்ளும் அறுவை சிகிச்சையில் ஏராளமான பெண் கள் கடும் பக்க விளைவுகளுக்கு ஆளாகிறார்கள் என்று ஆராய்ச் சிகள் சொல்கின்றன. எனக்குத் தெரிந்த ஒரு வழுக்கைத் தலை நண் பர், தலையில் முடியுண்டாக்கும் சிகிச்சையில் 'செப்டிக்' ஆகி மர ணத்தின் எல்லை வரை சென்று விட்டார்.

பெண்களின் அந்தரங்க உறுப்புகூட எப்படியிருக்க வேண்டும் என்று இவ்வளவு கவலைப்படும் ஆண்கள், தங்க ளது உடல்கள் குறித்து தம்முடன் வாழும் பெண்கள் கொண்டுள்ள அபிப்ராயங்களை எப்போதாவது தெரிந்துகொண்டால் தற்கொலை செய்துகொண்டு விடுவார்கள்.

### இலக்கியக் கல்வி

திருச்சி சமயபுரத்தில் உள்ள

Radjaramane@TTT



இந்த
வார கவிதை

ஒரு காதல் கவிதை
கட்டிப் பிடித்து
முத்தமிடவா
முடியும்?
ஒரு காபி
சாப்பிடலாம், வா
- தேவதேவன்

எஸ்.ஆர்.வி. மெட்ரிகுலேஷன் பள்ளி தமிழ்நாட்டில் எந்தப் பள்ளியும் செய்யாத ஒரு அற்புதமான வேலையைச் செய்து வருகிறது. மாணவர்களுக்கு பாடங்களோடு நவீன இலக்கியத்தையும் கலைகளையும் தொடர்ச்சியாகக் கற்பிக்கிறார்கள். ஆண்டுதோறும் சிறந்த நவீன எழுத்தாளர்களுக்கு விருதுகள் வேறு வழங்குகிறார்கள். கடந்த வாரம் ஐந்து நாட்கள் மாணவர்களுக்கு பெரும் கலை இலக்கியத் திருவிழாவையே நடத்தினார்கள். எஸ்.ராமகிருஷ்ணன், வண்ணதாசன், டிராட்ஸ்கி மருது, ச.தமிழ்ச்செல்வன், ஞாநி, வைட் ஆங்கிள் ரவிஷங்கர், நாடக இயக்குனர் பார்த்திபராஜா, நடிகை ரோஹிணி என்ற பெரிய கலை உலகப் பட்டாளமே மாணவர்களுக்கு பல்வேறு பயிற்சி வகுப்புகளை நடத்தியது. நான் நவீன கவிதை குறித்து மூன்று நாள் பயிலரங்கு நடத்தினேன். நானும் எஸ்.ராமகிருஷ்ணனும் நவீன கதை மற்றும் கவிதை குறித்து இரண்டு புத்தகங்களை இந்தப் பள்ளிக்காக தயாரித்துக் கொடுத்தோம்.

மாணவர்களின் பங்கேற்பு ஆழமான தரத்தில் இருந்தது. நவீன இலக்கியத்தை பயில்வதன் வாயிலாக மாணவர்கள் மொழித் திறன், வாழ்க்கைப் பார்வை, வெளிப்பாட்டுத் திறன், ஆளுமைத் திறன் ஆகியவற்றில் ஆழ்ந்த பயிற்சி பெறுகிறார்கள். பல்கலைக் கழகங்கள் கூட செய்யாத பணி. இந்தப் பள்ளிக்கு தமிழகக் கல்வி வரலாற்றில் ஒரு உயரிய இடம் உண்டு.

(இன்னும் நடக்கலாம்...)

Radjaramane@TTT



Radjaramane@TTT

# தாமரை டவுன்

TAMARAI

திருச்சி அருகில் R.T.மலை - ஆர்ச்சம்பட்டி

தனி வீடுகள்

ரூ 7 லட்சம் முதல்



## Luxurious Life.... Affordable Price !

- ✶ சுற்றுசுவர்
- ✶ 24 மணி நேர பாதுகாப்பு
- ✶ பேருந்து நிறுத்தத்திற்கு அருகில்
- ✶ சுற்றிலும் வீடுகள் அருகில் அரசு பள்ளி
- ✶ மிக சிறந்த கழிவு நீரேற்றும் வசதி
- ✶ தடையில்லா குடிநீர் வசதி
- ✶ பூங்கா மற்றும் சிறுவர் விளையாட்டு திடல்
- ✶ தியான நிலையம்
- ✶ குருவாயூரப்பன் கோயில்
- ✶ பிரேயர் ஹால்
- ✶ மெடிக்கல் ஷாப் மற்றும் கடைகள்
- ✶ அவசர மருத்துவ உதவி

Manthrra Developers

## மந்த்ரா டெவலப்பர்ஸ்

10, ஏ.ஆர். காம்ப்ளக்ஸ், சீனிவாச நகர், வயலூர் மெயின் ரோடு, திருச்சி-17.

Ph : 0431-2782481, 99945 44411, 80124 80123

E-mail : contact@manthrra.com | www.manthrra.com